# ஆராய்ச்சிக் கட்டுரைகள்

'கவிஞர்கோ'
கோவை. இளஞ்சேரன்

# ஆய்வுக் கட்டுரைகள்

கவிஞர்கோ. கோவை. இளஞ்சேரன்

மீரா நிலையம்,
டி: 121. சம்பத்து நகர்.
ஈரோடு 638 011.

## நூல் அளவை

| | |
|---|---|
| தலைப்பு | : ஆய்வுக் கட்டுரைகள் |
| ஆசிரியர் | : 'கவிஞர்கோ, கோவை, இளஞ்சேரன் |
| பொருள் | : சொல், பொருள் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு |
| வெளியீட்டகம் | : மீரா நிலையம், ஈரோடு. |
| பதிப்பு | : முதற் பதிப்பு |
| பக்கம் | : 142 |
| காலம் | : தி.ஆ. 2022— மார்கழி திசம்பர் 1991. |
| விலை | : உருவா 18-00 |
| அச்சகம் | : சிவகாமி அச்சகம், அண்ணாமலை நகர். |

விற்பனை:

மீரா நிலையம்,

டி. 121 சம்பத்து நகர்,

ஈரோடு. 638011.

# பதிப்புரை

'ஆய்வுக் கட்டுரைகள்' என்ற இந்த நூல் கவிஞர் கோ. கோவை. இளஞ்சேரன் அவர்களுடைய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். இந்நூலாசிரியர் தனித்தமிழ்ப்பற்றினர்: சமுதாயச் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொள்பவர்: பெருங்கவிஞர்: சிறந்த ஆய்வாளர் :பதிப்பாசிரியர்; பண்புமிக்கவர். தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகமானவர். பாவேந்தரோடு பழகும் நல்வாய்ப்பைப் பெற்றவர்.

மீரா நிலையம் இதுவரை பன்மொழிப் புலவர் மு.ச. சிவம் அவர்களுடைய நூல்களையே வெளியிட்டு வந்தது. புகழ்பெற்ற பிற அறிஞர்களின் படைப்புகளையும் வெளியிட அவாவுகிறது அவ்வகையில் கோவை. இளஞ்சேரனாரின் ஆய்வுத்தொகுதியை இப்போது வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது.

இந்நூலைக் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்த அண்ணாமலைநகர் சிவகாமி அச்சகத்திற்கு எங்கள் நன்றி உரியது

ஈரோடு

மீரா நிலையத்தார்

25-12-91

# ஆய்வுக் கட்டுரைகள்

இந்நூல்.......

- மொழி ஆக்கத்தையும்
  தாக்கத்தையும் மொழியும்.

- தமிழுக்கு நேர்ந்த இடைவெட்டையும்
  தடைப்பாட்டையும் நுவலும்,

- வரலாற்றுப் புதைவையும்
  சிதைவையும் வழங்கும்.

- தமிழர் ஆட்சியின் நலத்தையும்
  வளத்தையும் விளக்கும்

- பொருள ஆழத்தின் அழுத்தத்தையும்
  திருத்தத்தையும் புகலும்.

- தமிழ் மரபின் தன்மையையும்
  உண்மையையும் உணர்த்தும்

# உந்துதலும் ஊட்டமும்

## (ஆய்வாசிரியரின் உணர்வுரை)

வணங்கி மகிழ்கின்றேன்.

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

— என்பது பாவேந்தர் பாரதி

தாசனாரின் உயிர் வடிப்பு. இவ்வடிப்பில் "எங்கள்" என்ற குழுவிற்குள் எத்துணைப் பேர் வருவரோ? உண்மையாக, ஓரளவில் கண்டால் தமிழ் கூறும் உலக வளாகத்தில் இங்கொருவர் அங்கொருவர் என அள்ளித் தெளித்த நிலையே தென்படுகின்றது.

"தமிழ் என் அறிவினில் உறைதல் கண்டீர்"

— என்பது பாவேந்தரின்

அறிவு வடிப்பு. இவ்வடிப்பில் ஊன்றி நிற்கும் தமிழறிஞர் எண்ணிக்கை வேண்டும் அளவில் உள்ளதா என்பதில் ஐயம் தலை நீட்டுகிறது.

"உணர்வை வளர்ப்பது தமிழே"

— என்பதற்கு ஈடுகொடுப்பவர் உளர் —

ஓரளவில் உளர். இந்த ஓரளவையே தமிழ் வெறிக்குள் அடக்கிப் பார்ப்போர் எண்ணிக்கை பெருமளவு. 'தமிழ் வெறி' என்று ஒன்றும் இல்லை: வேண்டியதும் இல்லை. தமிழ் நெறி வேண்டாமா?

'தமிழ்ப் பற்று' இருக்க வேண்டியதே. அதைக்கூட ஏதிர் கொள்ளாதவர்கள் தமிழ்ப் பண்பாட்டை உணர வேண்டாமா?

கீழ்வரி எல்லையாகத் 'தமிழ் நினைவு' இருந்தாலே போதும் என்று எதிர்பார்க்க வேண்டிய நிலை தற்போது உள்ளது. அந்த நினைவையும் மறந்தோரைப் பிறமொழி ஆட்டத்தில், அரசியல் ஓட்டத்தில் காண்கின்றோம்

அந்த நினைவை — தமிழ் நினைவை நிலையுறுத்த வேண்டும்;
அந்த நினைவு தமிழ் நெறியை அணுக வேண்டும்;
அந்த அணுகல் தமிழ்ப் பண்பாட்டை அணுக்கமாக்க வேண்டும்;

இவ் அணுகலும் அணுக்கமும் ஏன் வேண்டும்?
விடை காணப்பட வேண்டிய வினாத்தான்.

ஏன் என்றால்,

உலக மாந்தர் இனப் பாங்கிலும், இனப் பகுப்பிலும் அவ்வ் இனத்திற்கு ஏற்ற நெறிகளும் பண்பாடுகளும் உள்ளன இவ்விரண்டும் ஓரினத்திற்கும் மற்றோரினத்திற்கும் ஒத்தும் நிற்கலாம்; எதிராகவும் அமையலாம். மோதலாகக் கூடாது. உலக அளவில் பெரும்பகுதி ஒத்து வருபவை; அதிகம் எதிர்வு இல்லாதவை. உள்ள எதிர்வுகள் நிறத்தால் மதத்தால் நேர்பவை.

இந்நிலையில் விரல்விட்டு எண்ணக் கூடிய இனத்தாரின் நெறிகளும், பண்பாடுகளும் உலகப் பொதுமைக்கு ஊக்கந்தருபவை. அவற்றில் இரண்டு தமிழ் நெறி, தமிழ்ப் பண்பாடு என்பது உண்மை. இவ்வுண்மை கொண்டு தமிழ்க் கருத்தைப் பரப்புவது; உலக தன்மைக்கு உதவும்.

இவ்வடிப்படையில்,

தமிழ் நெறியையும் தமிழ்ப் பண்பாட்டையும் ஒரு மாற்றுத் தொடரில் எழுதினால் உலக மாந்தர்க்குரிய பொது நெறிப் பண்பாட்டைப் பல முனைகளில் வெளிக்கொணர வேண்டும்; விரவலாக்க வேண்டும். இப்பணியையும் வாழைக்கனி போல உரித்தவுடன் தின்னும் எளிமையாக, மாங்கனி போலக் கடித்தவுடன் இனிக்கும் இனிமையாக, பலாக்கனி (முழுக்கனி) போல பிளந்து பார்த்து எடுத்துச் சுவைக்கும் அருமையாக ஊட்ட வேண்டும்; உணர்த்த வேண்டும்; ஈடுபடுத்த வேண்டும்.

இதற்கு பழம்பெரும் தமிழ் நூல்கள் தோள்கொடுப்பவை; புதுப்பாங்கு நூல்கள் கைகொடுப்பவை. அவற்றிலிருந்து ஆர்ந்து, தோய்ந்து, தேர்ந்து, ஓர்ந்து எடுத்த கருத்துக்களைப் பளிச்சிடச் செய்ய வேண்டும்.

தமிழுக்குக் கி.மு முதல் வடமொழி ஊடாட்டப் நேர்ந்தது பையப் பைய, ஆனால் உறுதியான, அதே சூழலில் திட்டமிடப் பெற்ற கீழுறுப்பு தொடங்கித் தொடர்ந்தது - தொடர்கின்றது. இத் தொடரிலும் தமிழ் தன் தலைப் பண்பை விட்டிலது.

இதற்குத் தோய்வுக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் முளைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இப்பணி முன்னர்ப் புலமைச் சான்றோரால் செய்யப்பெற்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் "செந்தமிழ் இதழில், நிறைவான" ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன. பல புதிய முடிவுகள் தெளிவாகத் தரப்பெற்றன. தொடர்ந்து நாட்டாரையா, சோமசுந்தர பாரதியார், கா. சு. பிள்ளை, பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகளார், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணா முதலியோர் மரபு, மொழி, வாழ்வியல் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் 'தமிழ்ப்பொழில்' சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துச் "செந்தமிழ்ச் செல்வி" ஆகிய இதழ்கள் பலவகை ஆய்வுக் கட்டுரைகளைத் தந்தன. மிகு எண்ணிக்கையில் வெளியாகும் கிழமை, திங்கள் இதழ்கள் அவ்வப்போது ஆய்வுக் கட்டுரைகளைத் தந்தன.

முதுகலை ஆய்வாளர், முனைவர் பட்ட ஆய்வாளர் கட்டுரைகள் அண்மைக் காலமாகப் பல உருவாயினவாயினும், அவற்றுள் பெரும்பாலான அச்சில் வராமல் முடங்கிக் கிடக்கின்றன, இவைபோன்றே பல்கலைக் கழகங்கள் நிகழ்த்தும் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் பல ஒளிந்துகொண்டுள்ளன. இவையெல்லாம் அச்சாகிப் பொதுப்பார்வைக்கு வருதல் தமிழுக்கு நலம் சேர்க்கும்.

இவ்வாறெல்லாம் தமிழ்ப் புதையல்கள் அகழ்ந்தெடுக்கப் பெற்று வெளிவரினும் தமிழைத் தாக்கும் போக்கு முளைத்துக் கொண்டுதான் இருக்கின்றது. காலம் கனிந்த சூழல் அமையின் இக்காளான்கள் முளைக்கின்றன. அண்மையில் சில நாளிதழ்களில் இம்முளைப்பு நேர்ந்தது.

'தொல்காப்பியம், வடமொழியின் ஆக்கம்' என்றும் 'தமிழ்நூல்கள் அனைத்துமே வடமொழி வழிவந்தவை', என்றும் வடமொழியாளரே தமிழ்க் கலைகளை 'வளர்த்தனர்' என்றும், திருக்குறள், சிலப்பதிகாரம் கம்பராமாயணம்முதலியவை பழங்கனவாய்ப்போகக்கூடுமென்றும், 'தமிழர் தனித்தன்மை பேசுதல் கூடாது' என்னும் தத்தம் உள்ளுணர்வுக்கனவுகளை எழுத்துருவாக்கினார்.

இவ்வற்றிற்குத் தமிழ்ப்பேராசியரிர் ஆய்வாளர் கிளர்ந்து தெழுந்து மறுப்பு எழுதியிருக்க வேண்டும் அரசியல் பெருமக்களே தாம் முனைந்து எழுதினர். என் பங்காக ஒரு கட்டுரை எழுதினேன். மற்றையோர் பாராமுகமாகவும், தூக்கத் தொய்விலும் இருந்தமை வருந்தத்தக்கது.

அவ்வப்போது இவ்வாறு நேரும் சூழலை உணர்ந்தும் நேரும் வாய்ப்புகளைக்கொண்டும் ஆய்வுக்கட்டுரைகளைத் தமிழ்நாட்டரசின் 'தமிழரசு' இதழிலும், மலர்களிலும் எழுதினேன். அவற்றின் மூலம் புதிய முடிவுகளை எடுத்து வைத்தேன். மலர்களைப் பற்றிய நிறை ஆய்வாக ''இலக்கியம் ஒரு பூக்காடு'' என்னும் பெரு நூலை ஆக்கினேன்.

இப்பணியில் எனக்கு ஆர்வம் உண்டு; முயற்சி உண்டு செயல் முனைப்பும் உண்டு: குறைவு இல்லாத அறிவும் உண்டு: என்பதில் தவறும் இல்லை: தன் முனைப்பும் இல்லை.

இயல்பான உணர்வோடும், ஈடுபாடான அறிவோடும், தமிழ்க்கருத்துக்களை ஆய்ந்து எழுதுவது இன்றியமையாக் கடமையாகக் கருதினேன், மேற்கொண்டேன். 1950-ஆம் ஆண்டு அளவில் எழுதத் தொடங்கினேன். கவிதைப் பாங்கில், நாடகப் பாதையில், கட்டுரைப் போக்கில், ஆய்வு நூல் அமைவில் ஏறத்தாழ 40 ஆண்டுகளாக எழுதி வருகிறேன். எழுதிக் குவிந்துவிடவில்லை; எழுதித் தெளித்திருக்கிறேன். தமிழ் நாட்டு, மலைநாட்டு ஈழ நாட்டு இதழ்களும் மலர்களும் இத்தெளிப்பை அவ்வப்போது முளைக்கச்செய்தன.

புதுமையில் பணியாற்றியபோது தமிழ்ப் பொழிவுகள், நாகையில் பணியாற்றியபோது தமிழ்த் தொண்டுகள் மிகுதியாகக் கவர்ந்து கொண்டமையால் எழுத்துத்துறை இடையீடுபட்டது உணர்விற்கேற்ற படைப்புகளை ஆக்க இயலவில்லை

1982-ல், சில முளைகளைத் தொகுத்துப் ''புதையலும் பேழையும்'' என்று வெளியிட்டேன். அஃது எம் கலைக்குடில் வெளியீட்டகத்தில் எட்டாவது வெளியீடாக மலர்ந்தது. அதிலமைந்த கட்டுரைகள் சொல், பொருள் பற்றிய ஆய்வு மணங்களைப் பரப்பின. குறிப்பிடத்தக்க பயனையும் தந்தன. கண்டு மகிழத் தக்க செயற்பாட்டிற்கும் மூலமாயின. அவற்றுள் ஒன்று பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்தில் முகப்புக் கோபுரமாக நிற்கும் 'எழுநிலை மாடம்'.

அந்த வரிசைக்குரிய ஆய்வுக்கட்டுரைகள் கட்டுரைகளின் தொகுப்பாக உங்கள் கையில் உள்ளது. இதழ்களிலும், மலர்களிலும் சிதறலாக மலர்ந்தவற்றை ஒரு கொத்தாக்கும் நோக்கம்-ஒருசேர ஒரு நூலாகத் திகழ வேண்டும் என்பது மட்டும் அன்று, சிதறலாக வெளிவந்த காலத்தில் இருந்த நிலை இப்போதும் உள்ளது. அதனால் மீண்டும் நினைவுறுத்த வேண்டிய சூழல் உள்ளது. தமிழுக்கும், தமிழ் மரபிற்கும் தொய்வு தெரிகின்றது. இயன்ற அளவில் தொய்வைப் போக்கத் துணை நிற்க வேண்டும் என்பது என் உள்ளத்து ஊறல்.

இவ்வாய்வுக் கொத்தின் கருத்துப்பிழிவு 'இந்நூலில்' என்னும் தலைப்பில் முகப்பில் தரப்பெற்றுள்ளது. ஆய்வில் கடைந்தெடுக்கப் பெற்ற முடிவுகள் பட்டியலிட்டுத் தரப்பெற்றுள்ளன.

தமிழ் மொழித் தேக்கம், ஆக்கம், திரிபு, செருகல் பற்றித் தொடக்கமாகும் மொழித் துறையுடன் ஆறு துறைகளாகப் பொருள், வரலாறு எனக் கட்டுரைகள் உள்ளன.

துறை ஒவ்வொன்றும் தனக்கென அடையாளங்கூறும் கருத்துரைகளை முகப்பாகக் கொண்டுள்ளது. கட்டுரைகளை அவ்வப் போது வெளியிட்ட இதழ் மலர்களின், குறிப்புகள் முகப்புகளின் பின்னடக்கமாக உள்ளன.

இதனைப் பதிப்பித்து வெளியிட முன்வந்த மீரா நிலையத்தார்க்கும் வாழ்வியல் அறிமுகம் வழங்கியுள்ள நண்பர் பேராசிரியர் மு. சதாசிவம் எம். ஏ. எம். லிட்., (வாசவி கல்லூரி ஈரோடு) அவர்கட்கும் நெஞ்சார்ந்த நன்றி கூறுகின்றேன்.

"சொல்லிற் பயனுடைய சொல்லுக"

— என்னும் திருவள்ளுவப் பெருந்தகை மொழியை வெறும் வியங்கோள் வினையாகக் கொள்ளாமல், நல்லாணையாகக் கொண்ட யான் பயனுடைய கருத்துக்களையே தந்துள்ளேன்.

இக்கருத்துக்களால் தமிழ் ஆர்வலர்க்கு ஓர் உந்துதலும், தமிழ்க் கருத்துகளுக்கு ஓர் ஊட்டமும் அமைய வேண்டுமெனப் பெரிதும் விரும்புகின்றேன்.

வணங்கி அமைகின்றேன்.

அன்பன்,
கோவை. இளஞ்சேரன்

கலைக்குடில்
58, எழில் நகர்
தஞ்சாவூர்-613 007.

# ஆய்வுக் கட்டுரை அடங்கல்


**மொழிப்பேழை** **பக்கம்**

1. மொழி மாறின் வழி மாறும் 1
2. மொழித் திருகலும் செருகலும் 12
3. தமிழும் சிவமும் 23

**பொருட்புதையல்**

4. கட்டுரை 38
5. ஆசிரியர் 46
6. பட்டிமன்றம் என்றால் 64
7. வாயும் சொல்லும் 82
8. நூலகர் ஒரு புலவர் 91

**வரலாற்றுச் சுவடி**

9. வளையல் துண்டு 98
10. சுளையும் இல்லை, தோலும் இல்லை 121
11. குடி தழுவிய கோல் 133

# ஆய்வுக்கட்டுரைகள்

## தந்துள்ள முடிவுகள்

- முருகன் அகவாழ்விலும் புறவாழ்விலும் மேம்பட்டு விளங்கிய தமிழ் மாந்தன்
- தமிழிருக்க மாற்றாக வடமொழியைக் கூறுதல் மூலத்தின் பொருளைப் பகைப்பொருளாக்கும்.
- திருமறைக்காடு என்பதே இன்றைய வேதாரணியத்தின் மூலப்பெயர்.
- 'தமிழ்'ச்சொல் இருக்க வடசொல்லைச் செருகுவதால் அத்தமிழ்ச் சொல் மறைந்து அழியும்.
- தமிழ்ச் சொல்லை வடசொல்லாகத் திருகுவதால் மூலப் பொருள் மாறி முரண்பட்ட பொருள் தோன்றும்.
- சிலப்பதிகாரம் மொழித் திருப்பு முனையின் சின்னம்.
- யகரத்திற்குச் சகரம் போலியாவதால் மூலச்சொல்லின் பொருள் தாழ்வுப் பொருளாகும்.
- 'ஆன்மா' என்னும் சொல் 'ஆ' என்னும் சொல்லடியாக வடிவுற்ற தமிழ்ச்சொல்.
- சிவம் தமிழ்ச்சொல்.
- சொற்பொழிவைக் குறிக்க முற்காலத்தில் 'கட்டுரை' என்னும் சொல் வழங்கப்பட்டது.
- ஆசிரியரைக் குறிக்கும் சொற்கள் காலப்போக்கில் பொருள் வேறுபாட்டைத் தந்தன.

* ஆசிரியரைக் குறிக்க எழுந்த சொற்கள் ஆசிரியரின் தகுதிக் குறைவை அடையாளங் காட்டின.

* 'பட்டி மன்றம்' என்பது புலவர்தம் அறிவுத்திறத்தைக்காண மக்கள் கூடும் கூடம். 'பட்டி அரங்கம்' என்பது புலவர் ஆய்வு செய்ய—சொற்போரிட அமரும் மேடை. 'பட்டி மண்டபம்' என்பது கட்டடப் பெயர்.

* வாய் என்னும் சொல்லில் பல பொருள்கள் கிளைத்தன.

* நூல்களைக் கையாள்வோர் இரு வகையினர்.

* பூம்புகார் அழிவிற்குப் பின் தோன்றிய சோழநாட்டுத் துறைமுகம் நாகர்பட்டினம்.

* நாகர் வருகையால் நாகர்பட்டினம் உருவாகி அப்பெயர் பெற்றது.

* புத்தத் துறவிகள் வாழ்ந்த இலந்தை மரப்பகுதியாகிய 'பதரி திட்ட' என்பது தற்போது அவுரித்திடல் என்று வழங்கப்பெறுகின்றது. (இப்போது பேருந்து நிலையமாகி விட்டது.)

* நாகர்பட்டினக் கடற்பகுதியில் ஓரிடத்தில் மின் சுழல் உள்ளது.

* நாகநாட்டு இளவரசி பீலிவளையின் மகன் தொண்டைமான் இளந்திரையன்.

* அறக்கட்டளைகள் பகுதி அளவாகவும் முழுமையாகவும் பயனற்று அழிந்தன.

* மாமன்னன் இராசராசன் மக்களாட்சியில் கொண்ட அலுவலர் பெயர்கள் இன்றும் அரசு வழக்கில் உள்ளன.

## குறியீட்டுடன் நோக்கு நூல்கள் அகர நிரல்

| குறியீடு | நூற்பெயர் |
|---|---|
| அகம் | ... அகநானூறு |
| அற. | ... அறிநெறிச்சாரம் |
| ஆசா. கோ. | ... ஆசாரக்கோவை |
| ஆத்தி | ... ஆத்திசூடி |
| உதய: | ... உதயணகுமார காவியம் |
| ஐங். | ... ஐங்குறுநூறு |
| ஐந். ஐம்: | ... ஐந்திணை ஐம்பது |
| கந்தர் | ... கந்தரலங்காரம் |
| கம்ப. இரா. | ... கம்ப இராமாயணம் |
| க. பரணி | ... கலிங்கத்துப் பரணி |
| குண. | ... குணபாடம் |
| குறள். | ... திருக்குறள் |
| சிலம்பு. | ... சிலப்பதிகாரம் |
| சிவ. போ | ... சிவஞானபோதம் |
| சிறுபஞ். | ... சிறுபஞ்சமூலம் |
| சீவ. சி. | ... சீவக சிந்தாமணி |
| சூடா. | ... சூடாமணி |
| சேந். தி. | ... சேந்தன் திவாகரம் |
| ஞா. தே. | ... ஞானசம்பந்தர் தேவாரம் |
| தணிகை. | ... தணிகைப்புராணம் |
| தனி, சிந் | ... தனிச்செய்யுட் சிந்தாமணி |
| திணை. நூற் | ... திணைமாலை நூற்றைம்பது |
| திரிக. | ... திரிகடுகம் |
| திருவா: | ... திருவாசகம் |
| திருவால. | ... திருவாலவாய்ப் புராணம் |

| | | |
|---|---|---|
| தொல். எ | ... | தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் |
| தொல். சொ. | ... | ,, சொல்லதிகாரம் |
| தொல். பொ. | ... | ,, பொருளதிகாரம் |
| நல். | ... | நல்வழி |
| நற். | ... | நற்றிணை |
| நன். | ... | நன்னூல். |
| நாலடி. | ... | நாலடியார் |
| நாலா. | ... | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் |
| பட். | ... | பட்டினப்பாலை |
| பரி. | ... | பரிபாடல் |
| பழ. | ... | பழமொழி |
| பாரதிதா. கவி | ... | பாரதிதாசன் கவிதைகள் |
| பாரதி. பா. | ... | பாரதியார் பாடல்கள் |
| பாரதி. பா. ஆ. ப. | ... | பாரதியார் பாடல்கள் ஆய்வுப்பதிப்பு |
| பாரதி. கட். | ... | பாரதியார் கட்டுரைகள் |
| பிங். | ... | பிங்கலம் |
| புறம். | ... | புறநானூறு |
| பெ. பு. | ... | பெரிய புராணம் |
| பெருங். | ... | பெருங்கதை |
| பெரும்பாண். | ... | பெரும்பாணாற்றுப்படை |
| மணி. | ... | மணிமேகலை |
| மதுரை. | ... | மதுரைக்காஞ்சி |
| மலை. | ... | மலைபடுகடாம் |
| முருகு. | ... | திருமுருகாற்றுப்படை |
| யாப். விரு. | ... | யாப்பருங்கல விருத்தி |

## சான்று நூல்கள் – ஆசிரியர்

அகத்தியர் குணபாடம் — அகத்தியர்

ஆனைமங்கலம் செப்பேடு — இராசராசன்
(இலெய்டன் செப்பேடு)

சாசவமிசம் (பாலி) — பா. முகம்மது அப்துல்லாசாயபு

தமிழ்மொழி வரலாறு — பரிதிமாற்கலைஞர்

தேவாரம் — திருநாவுக்கரசர்

தேரையர் மகா கரிசல் — தேரையர்

பர்மாநாட்டு விவரணச் சுவடி (பாலி)

பேரகராதி — சென்னைப் பல்கலைக் கழகம்

பொருட்பண்புநூல்-பயிர் — க. ச. முருகேசமுதலியார்
வகுப்பு முதற் றொகுதி

மோகவிச்சேதனி (பாலி)

1

# மொழி மாறின் வழி மாறும்

**முருகு பொருள் மணக்கும் தமிழ்ச் சொல்.**

''முருகு அமர் பூ''[1] —என்னும் பட்டினப்பாலை அடியில் முருகின் 'மணம்' என்னும் பொருள் கமழ்கின்றது.

முருகு — ஓர் அழகுச் சொல்: ''அழகும் முருகே''[2] —எனப் பிங்கல நிகண்டு முருகின் அழகுப் பொருளைக் காண வைக்கின்றது.

முருகு — ஒரு கட்டிளமைச்சொல்: ''முருகு இளை இளமை''[3] —எனச் சூடாமணி நிகண்டு இளமைப் பொருளைச் சுட்டிக் காட்டுகின்றது.

முருகு — ஒரு புதுமைச் சொல்: ''படையோர்க்கு முருகு அயர''[4] என்கின்றது மதுரைக் காஞ்சி. இதற்கு ''வீரர்க்கு வேள்வி செய்யும்படி'' என்று நச்சினார்க் கினியர் உரை வகுத்தார். இங்குக் குறிக்கப்படும் 'வேள்வி' விருந்தாகிய வேள்வி. எனவே, வேள்வி விருந்தாகின்றது. விருந்து என்னும் சொல்லின் இயற்பொருள் புதுமை. இப்பொருளை நிகண்டுகள் யாவும் குறிக்கின்றன. ''விருந்து புனல்''[4] எனப் பரிபாடலும்' ''விருந்தின் பாணி''[5] என மலைபடு கடாமும் 'புது வெள்ள நீர், புதுப்பாட்டு' எனப் புதுமைப் பொருளை வழிமொழிகின்றன.

---

1. பட்டின : 37
2. பிங் : 3977
3. சூடாநி : 8 — 27 — 3
4. பரி : 6 - 40; மதுரை : 38
5. மலை : 539

முருகு — ஓர் எழுச்சிச் சொல்: கம்பர் "முருகு காதலின்"[6] என்று இப்பொருளை அமைத்துப் பாடுகின்றார்.

## முருகப் பெயர்கள்

மணமும் அழகும் இளமையும் எழுச்சியும் புதுமையும்பொலிந்த ஒரு பெருமகன் தமிழ் நிலத்தில் வாழ்ந்தான். அவன் 'முருகன்' எனப்பட்டான். அம் முருகன் மக்கட்குப் பற்றுக்கோடாக விளங்கினான்; திரட்சியுள்ள தூண் போன்று திகழ்ந்தான்; களிற்றையும் பிணைக்கும் வல்லமைகொண்ட வீரனாக விளங்கினான். 'பற்றுக்கோடு, திரட்சி, தூண்' என்னும் பொருள்கள் செறிந்த 'கந்து' என்னும் சொல்லால் 'கந்தன்' எனப்பட்டான்.

அவன் சிவந்த உடல் நிறத்தினன். அதனால்
செய்யோன்—'சேயோன்' ஆனான்.

அவனது படை வன்மை வேலால் வெளிப்பட்டது. வேல் எறிதலில் வல்லவன். அதனால் 'வேலன்' எனப்பட்டான்.

இத்துணைச் சிறப்புக்களும் நிறைந்த அவன் யாவராலும் விரும்பப்பட்டான். மக்களது உள்ளங் கவர்ந்த செம்மலாக விளங்கினான். எனவே 'வேள்', "செவ்வேள்" எனப்பட்டான்.

## கிழான்

மாந்தன் என்னும் பூண்டு மலையில் முளைத்தது. அது தளிர்த்துத் தழைத்துப் பல்கிப் பெருகிப் பழக்க வழங்கங்களைக் கொண்டது; பண்பட்டது; மேம்பட்டது. மனம் போன பழக்க வழக்கம் போய், மனம் ஒன்றிய மரபு கொண்டோர் பொது மக்கள் என்னும் குடிமக்கள் ஆயினர். பண்பட்ட குடிமக்கள் சான்றோர் ஆயினர். வாழ்வாங்கு வாழ்ந்தவர் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து ஈடும் எடுப்பும் இன்றித் தனி மேம்பாட்டுத் தன்மை கொண்டனர். அன்னார் தெய்வமாக்கப்பட்டனர்; தெய்வம் எனப்பட்டனர்.

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

---

6. கம்பரா : ஆகலிகை : 54 — 4

தெய்வத்துள் வைக்கப் படும்"[7] — என்னும் வள்ளுவர் வாய்மொழியும் இவ்வடிப்படையிலேயே எழுந்தது.

'முருகன்' என்னும் மேம்பட்ட செம்மல் ஒரு பெரும் மக்கள் தலைவனாக வாழ்ந்தான்; அகவாழ்வில் நிறைந்து விளங்கினான்; புற வாழ்வில் பொலிந்தான்; தலைமைத் தன்மைகளை எல்லாம் இயல்பில் பெற்றிருந்தான். எனவே, தலைவன் என்பதற்கு உரிய 'கிழவன்' என்னும் சொல்லால் குறிக்கப்பட்டான். (கிழமை-உரிமை; கிழவன் - உரிமை யுடையவன்).

'கிழவன், கிழான்' என்னும் சொற்கள் குடித்தலைவற்கும், ஊர்த் தலைவற்கும் வழங்கப்பட்டன. சேக்கிழார், மூலங் கிழார், கோவூர் கிழார் என்பன அவற்றைக் காட்டுகின்றன.

நாட்டுத் தலைவனான மன்னனுக்கும் 'கிழவன்' என்னும் தலைமைத் தன்மைச் சொல் வழங்கப்பட்டது.

> ''மழைக்கணம் சேக்கும் மா மலைக் கிழவன்''[8] —என அண்டிரனும்,
> ''சாரல் அருவிப் பயமலைக் கிழவன்''[9] —என ஓரியும்,
> ''ஒளிநிலங் கருவிய மலை கிழவோன்''[10] —என இளந்

திரையனும் குறிக்கப்பட்டனர்.

இவரெல்லாரும் அவரவர்தம் வீரத்தால் இவ்வாறு குறிக்கப் பட்டனர். அஃதாவது, புறத்திணை வளத்தால் 'கிழான்' எனப்பட்டமைக்குச் சான்றுகள். இதே போன்று அகத்திணை வளம்பெற்ற காதல் தலைவனும் 'கிழவன்' எனப்பட்டான்.

---

7. குறள் : 50
8. புறம் : 131 — 1
9. ,, : 152 — 11
10. பெரும்பாண் : 500

"கோடுயர் பிறங்கள் மலைகிழவோன்"[11] —நற்றிணை
"செம்மலையாகிய மலைகிழவோன்"[12] —கலித்தொகை
"மையாடு சென்னிய மலை கிழவோன்"[13]
—அகநானூறு

"தீயேன் தில்ல மலை கிழவோற்கே"[14] —ஐங்குறுநூறு

மேலுள்ள அடிகள் அகப்பொருள் இலக்கிய அடிகள். அகப்பொருள் தலைவனை 'கிழான்-கிழவோன்' என்கின்றன. மேலே காட்டப்பெற்ற பலவற்றிலும் இக்கிழவன் மலை நாட்டோடு தொடர்புடையவனாக உள்ளமை கருதத் தக்கது.

இவ்வகையில் மலைநாட்டில் தோன்றி மலைநாட்டு மக்களோடு வாழ்ந்து அவர்தம் தலைவனாக விளங்கிய முருகன் கிழவன் ஆனான்.

"விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ"[15]
பழமுதிர் சோலை மலை கிழவோயே"[16]

"நிலைபெறு தணிகை மலை கிழவோயே"[17] — என இலக்கியங்கள் போற்றுகின்றன. அதனிலும் மேலாகக் 'குறிஞ்சிக் கிழான்' என்னும் தொடர் அவனுக்கே உரியதாயிற்று.

இதே நோக்கில் — 'குறிஞ்சிக் கிழான்' என்னுஞ் சொல் நோக்கில் மற்றொன்றையும் காண இடம் உண்டாகின்றது. 'குறிஞ்சிக் கிழான்' என்பது போன்று பிற நிலத்துத் தெய்வங்கள், முல்லைக் கிழான், மருதக் கிழான், நெய்தற்கிழான், பாலைக் கிழான் எனத் தெய்வ நோக்கில் குறிக்கப்படவில்லை. இது மலைநிலத்தவனாகிய முருகனுக்கு அமைந்த தனித்தன்மையாகின்றது.

---

11. நற் : 28 — 9
12. கலி : 40 — 34
13. அகம் : 108 — 18
14. ஐங்குறு : 204 — 5
15. முருகு : 299
16. ,, : 317
17. தணிகை : 417 — 4

இத்தனித்தன்மைக்குக் கரணியம் என்ன?

**அகத்தும் புறத்தும்:**

நிலத்தோற்றத்தில் முதலில் தோன்றியது மலை. முருகன் வாழ்வு அங்கு அமைந்தது முதற் கரணியம். மாந்தரது வாழ்வின் தொடக்கம் மலையில் தொடங்கியமை, அதற்குத் தலைக் கரணியம். அந்த அகப்பொருள் மரபுகள் முருகனது வாழ்வியலில் தோய்ந்தமை இயைபான கரணியம். புறத்திணை வீரத்திலும் இந்த இயைபான கரணியம் உண்டு.

அவற்றில் குறிப்பாகச் சிலவற்றைப் பின்வருமாறு காண்போம்:

களவியலில் இயற்கைப் புணர்ச்சியில்:

| | | |
|---|---|---|
| காட்சி, ஐயம் முதலியன | : | வள்ளியைக் கண்டமை முதலியன. |
| களிறுதரு புணர்ச்சி | : | வள்ளியை அச்சுறுத்தக் களிற்றுத் தோற்றம். |

பாங்கிமதி உடம்பாட்டில்:

| | | |
|---|---|---|
| வேட்டம்மேல் கெடுதி வினாதல் | : | வேடனாகிய முருகன் 'மான்வரக் கண்டதுண்டோ' — என்றமை. |

கற்பியலில்:

| | | |
|---|---|---|
| களவின் வழிவாராக் கற்பு | : | தெய்வானை திருமணம் |
| களவின் வழிவந்த கற்பு | : | வள்ளி திருமணம். |
| பின்னர் வரைந்த பெரு மனைக் கிழத்தி | : | இரண்டாவது மனைவியாக வள்ளியை மணந்தமை |

புறத்தில்:

| | | |
|---|---|---|
| தமிழரது போர்க் கருவிகளில் வேலுக்கு முதன்மை | : | முருகனது படை வேல், |
| புறப்போர் முறைகளிற் பல | : | சூரபன்மாவுடன் போரில். |

தமிழர் தமக்கெனத் தனித்தன்மையாகக் கொண்ட பொருள் இலக்கண அமைப்பில் இவ்வாறு அகம், புறம் இரண்டிலும் முருகனது வாழ்வியல் மேம்பட்டுத் திகழ்ந்தது. முருகன் தமிழ் நிலத்து மாந்தனாகப் பிறந்து, மேம்பட்டு வாழ்ந்து, குரிசிலாகி, கிழவனாகி வாழ்வில் நிறைந்து தெய்வமானான். தமிழ்ப் பாங்கில் அவனது வாழ்வு திகழ்ந்ததால் முருகன் 'தமிழ்த் தெய்வம் எனப்பட்டான்.

தெய்வமான முருகனால் 'முருகு' என்னுஞ்சொல்லும் தெய்வுத் தன்மைச் சொல்லாயிற்று.

ஒரு சிற்பி, அழகிய பெண் சிலை ஒன்றை வடித்தான். வரிகளால் அதற்கு ஒப்பனை புனைந்தான். அச்சிலை கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. அச்சிலையைக் கண்டவர் சொல்ல இயலாத ஓர் உணர்வைப் பெற்றனர். அத்துணை மெருகோடும் தனிக் கவர்ச்சியோடும் அச்சிலை விளங்கிற்று. மாங்குடி மருதனார் என்னும் தமிழ் அறிஞர் அச்சிலையைக் கண்டார்; தன்னிலை மறந்து நின்றார். தம்மைக் கவர்ந்த அச்சிலையின் தன்மை அவருக்குத் தெய்வத் தன்மையாகத் தெரிந்தது. 'தெய்வத் தன்மையோடு இயன்ற சிலை' என்று பாட எண்ணினார்:

> ''வல்லோன் தைஇய வரிபுனை பாவை
>
> முருகு இயன்றன்ன''[18]

—என்று தெய்வத் தன்மையைக் குறிக்க 'முருகு' என்னுஞ்சொல்லை அமைத்தார். 'முருகு' என்னுஞ்சொற்குத் 'தெய்வத் தன்மை' என்னும் பொருள் தோன்றியதைப் புலப்படுத்தினார். பிற இலக்கியங்களிலும் இப்பொருளைக் காணலாம்.

பொதுமக்கள் மரபுகளின் வளர்ச்சியால், சான்றோர், தெய்வம் என மேம்பட்டனர். குறள் குறித்தனமபோன்று வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோர் தெய்வமாயினர். பொருள் இலக்கணத்தில் கருப்பொருளைக் குறிக்கும் நூற்பா, ''தெய்வம் உணா''[19] என்று தெய்வம் என்னுஞ் சொல்லைக் கொண்டு குறிப்பதும்

18. மதுரை : 723, 724.

19. தொல் : பொருள் : 20

சான்றாகின்றது. முருகனது முதல் மனைவி தெய்வானை என்று தெய்வச் சொல் கொண்டு அமைந்ததும் நினைக்கத்தக்கது.

தமிழர்தம் வாழ்வின் இரு கண்கள் காதலும் வீரமும். அஃதாவன அகமும் புறமும், இவ்விரண்டிற்கும் முருகன் சான்று என்பதை இலக்கியங்கள் சுட்டிச் சுட்டிப் பேசுகின்றன. சுருக்கங் கருதி ஒரு சில காட்டலாம்:

மகளிரது எழிற்கோலக் கண்களுக்கு உவமமாக:

"அறுமுக ஒருவன் ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ...
அஞ்சுடர் நெடுவேல் ஒன்று நின் முகத்துச்
செங்கடை மழைக்கண் இரண்டாயீத்தது"[20]

"முருகன் வைவேல் இரண்டனைய கண்ணாள்"[21]

ஆடவரது காதற் சிறப்பை உணர்த்த உவமமாக:
"கண்டேத்தும் செவ்வேள் என்று இசைபோக்கிக் காதலால்

கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான்"[22]

"குருகுபெயர்க் குன்றம் கொன்றோன் அன்னநின்
முருகச் செவ்வி"[23]

" ... ... ... தாமரை
அமரர் மேவரந் தோன்றிய அண்ணல்போல்
குமரன் ஆக்கிய காதலின்"[24]

---

20. சிலம்பு : மனையறம் : 49 — 51
21. சீவசிந் : 1291 — 94
22. சிலம்பு : மங்கல : 36 — 39
23. மணி : பனிக்கறை 49, 50.
24. சீவசிந் : 994 2 — 4

வீரத்திற்கு உவமமாக:

> ''காரலர் கடம்பன் அல்லன் என்பது
> ஆரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்'' [25]
> ''வள்ளல் (சீவகன்) மாத்தடிந்தான் அன்ன மாண்பி
> னான்'' [26]

சான்றாக மேலே காட்டப்பட்ட நூல்களின் பெயர்களை ஒருமுறை நோக்கினால் அவை யாவும் புத்த, சமண மதத்தவை என்பதை அறியலாம். வேற்று மதநூல்களும் போற்றும் பாங்கை நோக்கினால் முருகன் பொதுவில் யாவராலும் போற்றப்படும் நிலையில் திகழ்ந்ததை உணரலாம். அப்பாங்கு 'தமிழ்த் தெய்வம்' என்னும் பாங்காகவே அமைகின்றது. வடமொழி, மற்றைய மொழி நூல்களில் இவ்வாறு முருகன் போற்றிக் குறிக்கப்படா மையும் முருகன் தமிழ் நாட்டுத் தெய்வம்; தமிழர்தம் தனித் தெய்வம் என்பதற்குச் சான்றாகின்றது.

**ஒரு மறைப்பு.**

முருகன், 'தமிழ்த் தெய்வம்' என்பதில் மறுப்பில்லை. ஆனால், ஒரு மறைப்பு உண்டு. அது வடமொழியாளர் செய் துள்ள மறைப்பு.

'தமிழ் ஒரு மூல மொழியன்று; தமிழ் நூல்கள் யாவும் வடமொழி மூலத்தைக் கொண்டவை; தமிழ் இனத்தார் மரபுகள் தாழ்வானவை'-என்பன வடமொழியாளர் திட்டமிட்டுப் பரப்பிய கருத்துக்கள். இக்கருத்துக்களுக்கேற்பக் கதைகள் கட்டியும், பையப் பைய, ஆனால், வலுவாகவும் செயற்பட்டனர். தமிழ ராகப் பிறந்து வடமொழி வருடிகளாக வயிறு கழுவியோர் இக்கருத்துக்களுக்குப் பக்கமேளங் கொட்டினர். இவர்களால் குலைந்த தமிழ் மரபுகள் பல. அவற்றுள் ஒன்று தமிழ் முருக னைப் பற்றிக் கட்டப்பட்ட கதைகள். மற்றொன்று புனைந்த கோட்பாடுகள். தம் எண்ணம் செயற்பட வடமொழியாளர் கொண்ட கருவி மொழிமாற்றம்.

---

25. மணி : பளிக்கறை : 49, 50.
26. சீவசிந் : 1029

'அரசு கட்டிலைப் பிடிக்க ஐந்தாம் படையைப் பிடி' என்பது அரசியல் வஞ்ச மொழி. 'இனத்தை அழுத்த மொழியைப் புகுத்து' என்பது வாழ்வியலில் கொல்லைப் புற வழி. இதற்குச் சான்றுகளைச் சாரி சாரியாக நிறுத்தலாம். என்றாலும் எடுத்துக் கொண்ட 'முருகன் தமிழ்த் தெய்வம்' என்னும் ஒன்றில் நடந்த ஒன்றை மட்டும் காணலாம்.

முருகன், கந்தன், குமரன், வேலன், செவ்வேள், செய்யோன் முதலியன அவனுக்கு வழங்கும் தமிழ்ச் சொற்கள். இச்சொற்கள் முருகனைக் குறித்து வழங்கவும், அவனது நினைவை எழுப்பிக் கொள்ளுதற்குக் குழந்தைகளுக்குப் பெயர்களாக இடவும் உள்ளன. இவையிருக்க, சுப்பிரமணியம் என்னும் வடமொழிப் பெயரும் முருகனுக்கு வழங்கப்படுகின்றது. இவ்வடமொழிப் பெயர் ஏன் வந்தது? எதற்காக வந்தது? எண்ணிப் பார்ப்பது தவறாகாது. காண்பது ஆகும்.

### தமிழ்ச் சொல், பெயர்.

தமிழ்ச் சொற்களுக்குரிய பொருள்களைத் தமிழ்த் தெய்வத்துடன் பொருத்திக் காணவேண்டும். முருகு என்னுஞ் சொல்லுக்குரிய அழகு, இளமை, புதுமை, எழுச்சி ஆகிய பொருள்களுக்குப் பொருத்தமான இயல்புகளும் செயல்களும் கொண்டவனாக முருகனைக் காண்கின்றோம். கந்து என்றால் பற்றுக்கோடு. முருகன் மலைநாட்டுத் தமிழர் வாழ்விற்குப் பற்றுக்கோடாக வாழ்ந்தான். எனவே கந்தன் எனப்பட்டான். கட்டிளமை குமுறும் தன்மையால் குமரன் ஆனான். வேல் என்னும் படையைக் கொண்டமையால் வேலன் எனப்பட்டான். விரும்பப்படுகின்றவனாகச் சிவந்த நிறத்தனாகையால் செவ்வேள் ஆனான். செக்கச் சிவந்த உடல் நிறத்தாலும் செம்மைப்பட்ட செயற்பாட்டாலும் செய்யோன் எனப்பட்டான். இவ்வாறு தமிழ்ப் பெயர்களுக்குரிய பொருள்களை விரித்துக் கண்டது போன்றே சுப்பிரமணியம் என்னும் சொல்லின் பொருளையும் காண்பது முறையாகும். 'சுப்பிரமணியன்' என்றால் என்ன பொருள்? அச்சொல் ஒரு வடமொழிச் சொல்; அடைமொழிச் சொல். 'பிரமணியன்' என்னுஞ் சொற்கு அடைமொழியாக, 'சு' முன்னொட்டாக இணைக்கப்பட்டுச் 'சுப்பிரமணியன்' என்றாயிற்று. வடமொழிப்

புணர்ச்சி: சொல்லாக்கம் உணர்ந்தோர்க்கும் இசைவானது இப்புணர்ச்சி.

'சு' என்னும் அடைமொழி 'நன்மை - நல்லது - நல்லவன் - தூய்மை' என்னும் பொருள்களைச் சுட்டுவது- 'சு + கந்தம், சுகந்தம் என்றாகி 'நல்ல மணம்' என்று பொருள் தருவதை அறிவோம். இதுபோன்றே 'நல்ல பிரமணியன்' என்னும் பொருளில் அமைந்தது 'சுப்பிரமணியன்' என்னுஞ் சொல். அப்பொருள் விரிவாகப் 'பிராமணனுக்கு நல்லவன்' என்னும் பொருளையும் கூறுவர். இவ்வாறு ஒரு பொருட்படைப்பும் அதற்கொரு சொற்படைப்பும் தோன்றுவானேன்? அது வழக்கிலும் பரப்பப்படுவானேன்? அதன் உள் நோக்கம் என்ன?

தமிழர், 'முருகன் தமிழ்த் தெய்வம்' என்று போற்றிக் கொண்டிருக்கும் போதே 'நல்ல பிராமணன்' என்றால் அதற்கு என்ன பொருள்? முருகன் தமிழ்த் தெய்வம் என்பது தவறு; தமிழ்க்கென்று- தமிழனுக்கென்று அப்படியொரு தெய்வம் இலன் என்பதை அறிவிப்பதாகத்தானே தோன்றுகின்றது இச்சொல் வழக்கு? 'இல்லை' என்று மறுப்பதானால் வேறொரு வினா எழும்.

தமிழ் மக்கள் தமக்குரிய இடுகுறிப்பெயராக 'முருகப்பன்' முருகையன், முருகன்; கந்தப்பன், கந்தையன், கந்தன் குமரப்பன், குமரன்; வேலப்பன், வேலையன், வேலன்; பழனியப்பன், பழனிவேலன், பழனி, பழனியாண்டி; என்றெல்லாம் இட்டுக்கொள்கின்றனர். இவ்வாறு வடமொழி தாய்மொழி என்று நெஞ்சத்தால் நிறைவாகக் கருதும் இனத்தார் இப்பெயர்களை இட்டுக்கொண்டுள்ளனரா? சொல்லிப் பார்த்தால் கிடைக்காதே. ஆனால், 'சுப்பிரமணியன், பால சுப்பிரமணியன்' நிறையக் கிடைக்குமே. யாமும் அவர்களோடு ஒட்டிப் பார்ப்பவர்கள் என்று கருதும் இனம்புரியாத தமிழர்களும் இப்பெயரை இட்டுப் பூரிப்பதும் தெரிகின்றது. இதற்கு மேலும் ஒரு கொடுமை உண்டு.

முருகன் முதலிய பெயர்களை இட்டுக்கொண்டிருப்போர் தாழ்ந்தவர் என்று கருதும் உளப்போக்கும் வடமொழியாளரிடம் உண்டு.

வடமொழியாளர் பொங்கும் ஒரு பானைச் சோற்றுக்கு
இஃது ஒரு சோற்றுப் பதம்.

தமிழ் மொழியில் இவ்வாறு புகுத்தப்பட்ட நோக்கங்களை உணர வேண்டும்; உணர்த்த வேண்டும். சமயத் துறையில் இவ்வகையில் ஒரு மொழிப் புரட்சி செய்யப்படவேண்டும். அது தமிழர்க்கும் தமிழ்க்கும் வேண்டற்பாலது.

2

# மொழிச் செருகலும் திருகலும்

## மரையும் மறையும்

திருமரைக்காடு என்று எழுதினால் ரகரம் தவறாக உள்ளது என்பர் புலவர். திருமறைக்காடு என்றால் புரிந்து கொள்வோரும் மிகப் பலர்.

மறை-வேதம்; காடு-ஆரணியம் என வேதாரணியம் பிறந்தது. தேவார மூவரும் மறைக்காடு என்றே பாடினர். அவர்க்கு முன்னர் வேதாரணியம் இல்லை. பின்னர்தான் அதன் வடமொழி பெயர்ப்பாக வேதாரணியம் முளைத்தது. ஆனால், வேதாரணியத்தைத்தான் தமிழில் 'மறைக்காடு' என்று சொல்வதாகக் கருதும் தமிழர் மிக மிகப் பலர்.

> மறைக்காடு (வேதாரணியம்) எனப் பெயர்பெற்றது எவ்வாறு?
> மறை சிவபெருமானை வழிபட்டதால் அப்பெயர் வந்தது என்றனர்.[1]

அவ்வாறாயின் மறை வழிபட்டது காட்டையா? காட்டொடு பொருந்திய ஊரகத்தே அமர்ந்த சிவபெருமானையா? கோவிலில் அமர்ந்த சிவனைத்தான் மறை வழிபட்டது. கோவிலிருந்தால் குடி உண்டு; குடியிருந்தால் ஊருண்டு. மறை வழிபடுவதற்கு முன்னர் ஊர் இருந்தது. அவ்வூர்க்கு ஒரு பெயர் இருந்திருக்குமன்றோ? அப்பெயர் யாது?

> அதுதான் மறைக்காடு.
> மரைக்காடு என்றால் .........?

1. ஞான. தே: மறை. 12

மரை என்பது காட்டுக் குதிரை.[2]

காட்டுக் குதிரை நிறைந்திருந்த காடு 'மரைக்காடு'

எனப்பட்டது. தற்காலத்தும் அக்காட்டில் குதிரைகள் உள்ளன. அஃதே ஊர்ப்பெயராயிற்று. விலங்குகளின் பெயரால் கா, காடு பெயர் பெறுதல் இயல்பான வழக்கு; ஆனைக்கா போல.

மறையின் பெயரால் காடு பெயர் பெறுதல் பொருந்தாத ஒன்று. ஆனால், ஆயிரம் ஆண்டுகளாகப் பொருந்தி வந்தது எவ்வாறு? மொழிச் செருகல் பொருந்தாதையும் பொருந்த வைக்கும் என்பதற்கு இஃதொரு சான்று. வேதாரணியம் என்னும் வடமொழியைச் செருகி மரைக்காட்டை உருவியதையும் நோக்க வேண்டும்.

**செருகல்**

இவ்வாறு வடசொல்லை மொழிமாற்றாகச் செருகினர். அச்சொற்கு ஒரு தெய்வத் தகுதி கூறினர். அதில் வீழ்ந்த தமிழ்ப்புலவர் கைகுவித்து வணங்கி, அச்சொல்லை ஆண்டனர். காலப் போக்கில் மூலத் தமிழ்ச் சொல் ஆளுகையற்றுத் தானாகவே உருவிக் கொண்டது.

இச்செயல் திட்டமிட்டு நிகழ்ந்தது. மொழிச் செருகல் மொழி ஆளுமையாயிற்று. இருக்குமறைக் காலம் முதல் இச் செருகல் தொடங்கியது. சங்கப் பாடல்களில் அள்ளித் தெளித் தாற்போல் இச்செருகலைக் காண்கிறோம்.

மொழிச் செருகல் பையப் பையத் தமிழ் மரபுகளை மாற் றிற்று. நல்ல இன் மரபுகளைப் புரட்டிப் போட்டது. இம் மாற்றம் வலுப்பெற்றதைச் சிலப்பதிகாரம் நன்கு அடையாளம் காட்டுகின்றது.

சங்க காலத்தில்,

''ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்''[3]

---

2. பின் 2490

3. புறம் : 9-1

— என 'ஆ' இருந்தது; பசு இல்லை
சிலப்பதிகாரத்தில்,

'ஆ காத்தோம்பி ஆப் பயன் அளிக்கும்''[4]
- என ஆவும் இருந்தது

''பசுப்பத்தினிப் பெண்டிர்''[5]

எனப் பசுவும் புகுந்து கொண்டது. கூடவே பத்தினியும் புகுந்து கொண்டது. புகுந்த பசு காலப்போக்கில் 'ஆ'வை மேய்ந்து விட்டதே, போகப் போக 'ஆ' உருவிக் கொண்டது; அறவே வழக்கற்றுப் போயிற்று.

இதுபோன்று சிலம்பில்,
''திங்களைப் போற்றுதும்'', ''ஞாயிறு போற்றுதும்''[6]

- எனத் திங்களும் ஞாயிறும் கதிர்விட்டுக் கொண்டிருக்கும் போதே,

''சோமகுண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கி''[7]

- எனச் சோமனும் சூரியனும் தோன்றினர்.

''மா மறை முதல்வன்''[8]

என்ற மறை முதல்வனோடு,

''வேத முதல்வன்''[9]

-என வேதம் முதல்வன் ஆனான்.

''தீ வலஞ் செய்வது''[10]

* தழல் எரி அகமூழ்க''[11]

---

4. சிலம்பு : அடைக்கலம் : 120
5. ,, : வஞ்சினம் : 53
6. ,, : மங்கலவாழ்த்து 1,4
7. ,, : கனாத்திறம் : 59
8. ,, : அடைக்கலம் : 13
9. ,, : நாடுகாண் : 189
10. ,, : மங்கலம் : 53
11. ,, : துன்பம் : 42

''அழல் மண்டிற்றே''[12]

* எனத் தீயும் தழலும் எரியும் அழலும் ஒளிதந்து கொண்டிருக்க,

''எரி அங்கி வானவன்''[13]

என அங்கி எரியோடு இணைந்து செருகிக் கொண்டது.

''அறம் புரி மாந்தர்''[14]

''தருமம் சாற்றும்''[15]

என அறத்தொடு தருமமும் நடந்தது.

''வாழ்த்துவாள் தேவ மகள்''[16]

''மங்கலத்து ஆசிரியர்''[17]

* வாழ்த்துக்கும் ஆசி கிடைத்தது.

''இன்புறு தங்கணவர்''[18]

''போகம் செய் பூமி''[19]

என இன்பத்தோடு போகம் துய்க்க,

''மணம் தரு பொழிலே''[20]

''அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்''[21]

மணம் மணக்கும் போதே வாசம் வீசிற்று.

''மங்குல் வானத்து''[22]

---

12. ,, : வஞ்சினம் : 56
13. ,, : ,, : 49
14. .. : புறஞ்சேரி : 195
15. ,, : நாடுகாண் : 163
16. ,, : வாழ்த்து : 12—4
17. ,, : கடல் : 125
18. ,, : துன்பம் : 34
19. ,, : கனா : 62
20. ,, : கானல் : 16—1
21. ,, : ஊர் : 108
22. ,, : நாடு : 152

"விண்ணுறை விற்போல் "[23]"

என வானமும் விண்ணும் தெரிந்தபோதே, "அந்தர சாரிகள்"[24]

என அந்தரம் நேர்ந்தது.

"எண்பேராயம்"[25] என எட்டு எண்ணப்படும் போதே 'அட்டமி ஞான்று'[26] என அட்டம் கொட்ட மடித்தது.

"கார் எழுதிக்[27] கார் கருத்தபோதே,

"நீல மேக"[28] மூட்டமும் கூடியது. இவற்றைப் பார்த்து "விம்மிதம் எய்தி"[29] வியந்தபோது, "பெருமகன் அதிசயம்"[30] என அதிசயம் பிறந்தது.

இறுதியாக "இறுதியில் இன்பமும்"[31]
'அந்தமில் இன்பம்'[32] என அந்தம் ஆயிற்று.

இவை சில. மேலும் இருப்பவை பல. சிலம்பு காட்டும் அடையாளம் எதனைக் குறிக்கின்றது? உண்மை உருவம் இருக்கும்போதே போலியும் செருகப்பட்டதை அன்றோ, இல்லாததை எடுத்துக் கொண்டால் செருகலாகாது. இருக்கும் போதே கடன் வாங்கினால் என்ன பொருள்? 'இடத்தைப் பிடித்துத்தான் மடத்தைப்பிடுங்குவர்' என்பதன் தோற்றுவாய் இவை.

---

23. ,, : நீர் : 233
24. ,, : நாடு : 13
25. ,, : இந்திர : 157
26. ,, : கட்டுரை : 134
27. ,, : கானல் : 11—1
28. ,, : காடு : 35
29. ,, : : கொலை : 52
30. ,, நாடு : 162
31. ,, : நாடு : 206
32. ,, : மரம் : 182

இவற்றோடு இடம் பிடிக்காமல், தாய்ச்சொல் தனித்து முழங்கியதையும் சிலம்பு ஒலிக்கின்றது.

> "உள்வரி" [33] இருக்கிறது; வேஷம் புனையவில்லை.
> "அகவை" [34] வளர்ந்தது; வயது ஆகவில்லை.
> "அமளி" [35] விரிந்தது; ஆசனம் போடவில்லை.
> "அயிர்" [36] இனித்தது; சருக்கரை இனிக்கவில்லை.
> "அஞர்" [37] வருத்தினாலும் கஷ்டம் இல்லை.
> "உவவு" [38] தோன்றிலும் பௌர்ணமி வரவில்லை.

சிலப்பதிகார காலத்திற்குப் பின்னர், மேலே கண்ட வேஷம் முதலிய பற்பல வடசொற்கள் செருகப்பட்டன. "உள்வரி" முதலிய தாய்ச் சொற்கள் உருவிக்கொண்டன; அறவே வழக்கற்றுப் போயின. எத்துணை ஆயிரம் சொற்களை இவ்வாறு இழந்திருக்கின்றோம்.

**திருகல்**

இச்செருகலும் அதன்வழி உருவலும் நிகழ்ந்தபோதே, சில திருகலும் நிகழ்ந்தன. ஆம், தமிழ்ச் சொற்களைத் திருகி மாற்றினர். அதிலும் தமிழ்ச்சொல்லுக்கு முத்திரையாகிய "ழ" கரம் அமர்ந்த சொற்கள் திருகப்பட்டதை அவலம் என்றே குறிக்கத் தோன்றுகின்றது.

மலரும் மங்கையும் உடன் பிறப்புகள் எனலாம். பெண் பக்குவப்பட்டால் "பூத்தனள் நங்கை" [39] எனப் பூத்ததாகச் சொல்லினர். பூப்படைந்தவள் முல்லைக்கொடியை நட்டு வளர்ப்பாள். அது நனை தோன்றி, அரும்பி, முகைத்து,

---

33. " : இந்திர : 216
34. " : மங்கலம் : 34
35. " : வழக்கு : 22
36. " : அந்தி : 35
37. " : நாடு : 84
38. " : கடல் : 111
39. " : பரி: 16-30

முகிழ்த்து மலரும்; மணக்கும். பூப்படைந்த பெண்ணும் மலர்ந்து மணம் பெறுவாள். அதனை அடைமொழியுடன் திருமணம் என்றனர். திருமணம் அமையும் வாய்ப்பான நாளையும் நேரத்தையும் குறிக்க ஒரு சொல் கண்டனர். மலர்த் தொடர்பிலேயே அதனைக் கொண்டனர். மணம் தரும் மலருக்கு முன் பருவம் முகிழ்; அச்சொல்லைக் கொண்டு திருமணம் கொள்ளும் வாய்ப்பான நேரத்தை ''முகிழ்த்தம்'' என்றனர். 'முகிழ்த்தம்', 'முழுத்தம்' என மருவியது.

சிலம்பில் இதன் அடையாளந் தெரிகின்றது.

வடபுலத்தின்மேல் செல்லுதற்குரிய நல்வாய்ப்பான நாளைச் சேரன் செங்குட்டுவனுக்கு அறிவிக்கக் கணி எழுந்தான். 'நின்பால் தோற்ற வடபுலத்து மன்னர் உனக்குக் காணிக்கை கட்ட வரும் நல்ல நாள் இது' என்று சொல்பவன்,

''திருமலர்த் தாமரை சேவடி வணங்கும்
முழுத்தம் ஈங்கிது''[40]

என்றான். ''மறையவர் முழுத்தம் இட்டார்'' - என்று உதயண குமார காவியமும் பாடிற்று. திருத்தக்க தேவரோ ''மூழ்த்தத் தினுள்ளே'' என்று 'மூழ்த்தம்' என்று பாட நச்சினார்க்கினியர் 'முகூர்த்தம்' என்று உரையில் ஏற்றினார். இம் முழுத்தம் 'முகிழ்த்தம்' என்பதன் மரூஉ. இம் முழுத்தத்தையும் திருகினர்; 'முகூர்த்தம்' என்றனர். ''ழ'' கரத்தைப் படிக்க இயலாத வடவர் 'ர' கரம் ஆக்குவர். அமிழ்த்தத்தை அமிர்தம் என்றனர். இதுபோன்றே' 'முகிழ்த்தம்' 'முகூர்த்தம்' ஆக்கப்பட்டது. இன்று முகிழ்த்தம் என்றால் விளங்குமா? விளங்கினாலும் 'முகூர்த்தம்' என்னும் வடசொல்லின் மாற்றாகவே கருதுவர். வந்ததை வரவேற்று உடையதை மறந்தனர் தமிழர். இதனைச் சிலம்பு வரலாறே சொல்லாமற் சொல்கின்றதே.

மாதவி மரகத மாலையைப் பரிசாகப் பெற்றாள். அவள் தாய் சித்திராபதி. இவள் கூனி கையில் மாலையைக் கொடுத்து

---

40. சிலம்பு : கால் : 30; உத: 107:4; சீ. சி. 2763:1

நகர நம்பியர் திரியும் கடைத்தெருவில் விற்பதுபோல் நிறுத்தினாள். 'மாலையை விலைக்குப் பெறுபவன் மாதவியை அடையலாம்' - என அறிவித்தாள். கோவலன் பெற்றான்; கவர்ச்சிக் கன்னி மாதவியை அடைந்தான். அவளை "விடுதல் அறியா விருப்பினன்" [41] ஆயினன். ஆகி, "வடு நீங்கு சிறப்பிற்றன்" மனை (கண்ணகி) யகம் மறந்தனன், [42] இது சிலம்பு வரலாறு. இவ்வரலாறு போன்றே மொழிச்செருகல் வரலாறும் அமைந்தது.

கோவலன் — தமிழர்
மாதவி — வடமொழி
கண்ணகி — தாய்மொழி
சித்திராபதி — மாதவியைச் செருகியவள்

மாதவியாம் வடமொழியை ஏற்றுக் கண்ணகியாம் தாய்மொழியை மறந்தனர் தமிழர்.

இவ்வாறு கூறுவதால் வடமொழி தாழ்ந்தது என்பது கருத்தன்று. மாதவி தாழ்ந்தவள் அல்லளே: கலையரசி; கற்புடைய கலையரசி; வடமொழியும் கலைமொழிதான்; இலக்கியக் கலைமொழிதான். உலகளவில் சிறப்புடைய மொழிதான். இங்கே மற்றைத் தாய்மொழியில் செருகிய செயலைத்தான் நோக்குகின்றோம்; குற்றம் என்கின்றோம். சிலம்புப்படி குற்றத்திற்குரியவர் யார்? பரிச மாலையைக் கடைவீதியில் விலைகூறிக் கோவலனுக்கு வலைபோட்ட சித்திராபதி பரத்தைத் தொழிலில் கைவந்தவள். சித்திராபதி கோவலன் குடும்பத்தில் செருகிய செருகல் கண்டனத்திற்குரியது அன்றோ? அவளது செருகல் சோழ மன்னனுக்கு அடுத்த தகுதியில் வாழ்ந்த பெருவணிகர் குடும்பத்தை உருவ வைத்துவிட்டதே, அக்குடும்பம் உருக்குலைந்து போயிற்றே, மொழிச் சித்திராபதிகளின் செருகலும் உலக முதன் மொழி எனத்தக்க செந்தமிழ்க் குடும்பத்தையும் உருவிவிட்டதே'

41. சிலம்பு : காவ் : 174
42. ,, : ,, : 175

**கோவலன்**

இம்மொழிச் செருகலும் அதன்வழி உருவலும், மற்றொரு வழியாம் திருகலும் எப்படி நிகழ்த்தப்பட்டன என்பதற்கும் சிலம்பு சான்று பேசுகின்றது.

'கோவலன்' என்னுஞ்சொல் சான்றாகின்றது.

'கோ' என்றால் அரசன்; அது 'ன' கரம் ஒற்றிக் 'கோன்' ஆகும்.[43] 'அன்' விகுதி சேர்ந்தால் 'கோவன்' ஆகும். இதன் மற்றொரு வளர்ச்சி 'கோவலன்'.

அவ்வளர்ச்சிச் சொல்லின் வரலாற்றை அறியக் கோவலன் குடும்பத் தகுதியைக் காணவேண்டும். கோவலனது முன்னோன் ஒருவன் இப்பெயர் பெற்றவன். வழிவழியாக இக்குடும்பம் மன்னனுக்கு அடுத்த தகுதி பெற்றிருந்தது.

''பெருநில முழுநாளும் பெருமகன் (சோழ மன்னன்) தலை வைத்த (தன் அரச குடிக்கு அடுத்த தலைமைக் குடியென்று சிறப்புறச் செய்து வைத்த)

''ஒருதனிக் குடி'' கோவலன் குடி.

மன்னன் குடிக்கு அடுத்த செல்வத் தகுதி கொண்ட குடி

மன்னன் என்னும் ஆட்சித்தகுதி இல்லை. அரசன் அல்லன் அதாவது கோ அல்லன். மற்ற வகையில் எல்லாம் உள்ளவன். கோ அல்லன் என்னும் சிறப்புப் பெயரே, கோ அலன் - 'கோவலன்' என்னும் பெயராயிற்று.

ஆவைக் குறிக்கக் 'கோ' என்னும் சொல்லைச் செருகினர் அதனைக் காப்பதில் வல்லவர் 'கோவலர்' எனப்பட்டனர். இச் சொல் அமைவதற்கு முன்னர் 'ஆயர்' என்னுஞ் சொல்லே அவரைக் குறித்தது. 'ஆ' விற்கு உரியவர் என்பது அதன் பொருள். அச்சொற்கு மாற்றாகக் 'கோவலர்' புகுத்தப்பட்டது. கோவைப் பாலிப்பவன் 'கோபாலன்' எனப்பட்டான். சிலம்பில்

---

43. தொல். : எழுத்து: 352; நன்: 248

44. சிலம்பு : மங்கலம் : 31, 32.

வரும் கோவலன் வணிகக் குடியினன். எனவே, கோபாலன் வேறு; கோவலர் வேறு. இங்கு எடுத்துக்காட்டப்பட்டது கோவலன்' சிலம்புத் தலைவன். கோவலன் என்னுஞ் சொல்லுக்கும் ஆயரைக் குறிக்கும் கோவலர் என்னுஞ் சொல்லுக்கும் பொருட்டொடர்பு இல்லை என்பதை உணர்ந்து மேலே செல்ல வேண்டும்.

சிலப்பதிகாரத்தில் அதன் தலைவன் 'கோவலன்' என்றே யாண்டும் குறிக்கப்பட்டுள்ளான். ஓரிடத்தில் மட்டும் வேறு பெயரால் அழைக்கப்படுகின்றான்.

மதுரைப் புறஞ்சேரியில் கவுந்தியுடன் கண்ணகி, கோவலன் தங்கியுள்ளனர். மாடலன் என்னும் மறையோன் அங்கு வருகின்றான். அவன் கோவலனை நன்கு அறிந்தவன். யாவற்றையும் இழந்தவனாக வந்துள்ள அவனைக் கண்டு மிக அவலித்தான் கோவலனது பெருமைகளை எல்லாம் பேசினான். 'யானறிய இப்பிறப்பில் நீ நல்வினைகளையே செய்துள்ளாய். முன் செய்த தீவினைபோலும் இவ்வாறு ஆனாய்''[45] என்கின்றவன் கோவலன் பெயரைக் கூறுகின்றான். எவ்வாறு?

''விருத்த கோபால''[46] - என்றான், கோவலனை, எச்சொல்லால் குறித்துள்ளான்? ''கோபாலன்'' என்னுஞ் சொல்லால் இரண்டிற்கும் பொருள் வேறு. இரண்டன் சொற்களுமே வேறு வேறு. முன்னது கோ-அரசன் என்னும் பொருள் கொண்ட தமிழ்ச்சொல். மற்றது 'ஆ' என்னும் பொருளைத் தரும் 'கோ, என்னும் வடசொல்லுடன், 'பாலன்' என்னும் வடசொல்லும் இணைந்த சொல்.

சிலம்பிலேயே அதன் தலைவன் பெயர் வடமொழியால் குறிக்கப்பட்டதைக் காண்கின்றோம். இவ்வேலையை யார் செய்தனர் என்பதைச் சுட்டிக் காட்டுவதுபோல் இளங்கோவடிகளார் அமைத்துள்ளார் என்று சொல்லத் தோன்றுகின்றது.

---

45. ,, ; அடைக்கலம் : 3i, 92.
46. ,, : ,, : 94

சொன்னவன் மாடல் மறையோன், ஆம் மறையோன் ஒருவன் இம்மாற்றம் செய்ததாகக் காட்டுவதுபோல் அமைக்கப் பட்டுள்ளதும் ஒரு குறிப்பே எனலாம்.

வடபுலத்து மறையோரும் அவர்வழிவளர்ந்த தென்புலத்து மறையோருமே இச்செருகலையும் திருகலையும் செய்தனர். மறையோர்க்கு மண்டியிட்ட மறத் தமிழ்ப் புலவர் சிலர் அவர் வழி இயங்கினர். தமிழ் எத்துணையோ பொருள் பொதிந்த தூய சொற்களை இழந்து நிற்கின்றது.

'சில சொற்கள் கலப்பதாலும், சில சொற்கள் மறைவதாலும் என்ன குடியா முழுகிப் போகும்?' என்போர் இருக்கின்றனர். குடி முழுகிப்போவது இருக்கட்டும்; குடி கெட்டும்போகும். போயிற்று.

வடமொழிச் செருகலைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அதிக அளவில் ஏற்றுக்கொண்ட கலப்பு மொழியாக மலைஞால மொழி பிறந்தது. மேலும் வடசொற்களையே மிகுதியாகக் கொண்டு தமிழ்ச்சொல்லைக் குறைத்துக் கொண்டவர் தெலுங்கைப் பிறப்பித்தனர். அதுபோன்றே கன்னடம் தோன்றியது. நான்கும் திராவிட மொழிக் குடும்பம் எனப்பட்டாலும், ஒரு மொழிதான் வடமொழிக் கலப்பால் நான்காயிற்று. மொழி நான்காகி, இனம் நான்காகி, நாடு நான்காகி, அரசு நான்காகியுள்ளது. ஒருமைப்பாட்டுடன் இருந்த தமிழ்நாட்டை வட மொழி துண்டுபோட்டு நான்காகப் பிரித்தது. எனவே வட மொழி 'பிரிவினை மொழி' என்பதில் தவறில்லை.

'பிரிந்தால் என்ன?' என்போரும் உளர் எனில், அவர்க்குக் குறிக்க வேண்டியன பல உண்டு. காவிரி நீர்க்கு-ஒரு நாடாகத் திகழ்ந்த தமிழ் நாட்டுக் காவிரி நீர்க்கு, இன்று கேரளம் தடை போடுகின்றது; கன்னடம் கட்டுப் போட்டுள்ளது. ஆந்திராவிடம் 30 கோடி கட்டியுள்ளோம்.

இனியேனும் செருகலை உருவி எடுத்துவிட்டுத் திருகலை நிமிர்த்தித் தூய தாய் மொழியைக் காண்போம்.

3

# தமிழும் சிவமும்

ய — ச

'கலயம்' அடுக்குப் பானையிலும் அடுப்பின்மேலும் இருக்கும்;
'கலசம்' கோவிலிலும் கோபுரத்தின்மேலும் அமரும்.
'கலயம்' என்றால் ஏழையும் கஞ்சியும் மனத்தில் தோன்றும்.
'கலசம்' என்றால், அடியாரும் இறையன்பும் எழும்.
'கலயம்' எளியதாகவும் சற்றுத் தாழ்வானதாகவும் கருதப்படும்.
'கலசம்' அரியதாகவும் மிக உயர்வானதாகவும் மதிக்கப் படும்.
'கலயம்' தூசி படிந்த கரிப்பானை;
'கலசம்' தூய்மை துலங்கும் தெய்வச் சின்னம்.

''செம்பை விற்றுக் கலயம் வாங்கியது போல்'' —என்னும் பழமொழி கலயத்தின் சிறுமையைப் பேசுகின்றது.

''ஆலயந் தானும் அரனெனத் தொழுமே''[1] —என்று சிவஞானபோதம் கலசத்தின் பெருமையைக் குறிப்பாகப் பாடுகின்றது.

இவ்வாறு கலயமும் கலசமும் தன்மைகளால் மாறுபட்டிருக்கலாம்; உருவத் தோற்றத்தால் வேறுபட்டிருக்கலாம். ஆனால், செய்பொருள் அளவில் மாறுபாடு இல்லை. கலயத்தைக் கவிழ்த்துவைத்து அதன்மேல் கலைப்பாங்குடன் ஒரு கூம்பு அமைக்கப்பட்டதுதான் கலசம். இன்றும் பல சிறிய கோவில்களில் இவ்வாறே கலயம் கவிழ்த்து வைக்கப்பட்டுச் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். செம்பிலும் பொன்னிலும் இது வளர்ந்தது. எவ்வாறாகிலும் இரண்டும் கலமே.

1. சிவ.போ : 12 : 4

ஒன்று, குடிசையில் உண்கலம்;
மற்றொன்று, கோவிலில் அணிகலம்.
ஒரு கலத்தின் உண்மைப்பொருள் உணவு அளவே;
மற்றொரு கலத்தின் உட்பொருள் இறையியல் கோட்பாட்டளவு.

சொல்லைப் பொறுத்த அளவில் இரண்டிற்கும் முதற்சொல் 'கலம்' என்பதுதான். முதற்சொல்லால் மட்டும் இரண்டும் ஒன்று என்பது மட்டும் அன்று; 'கலயம்' என்னும் சொல்தான் 'கலசம்' ஆயிற்று.

தேயம் - தேசம்,
நேயம் - நேசம்,
இலவயம் - இலவசம் - என யகரத்திற்குச் சகரம்

போலியாகும். இவ்வாறு வாய்வழக்கில் 'கலயம்' என்னும் சொல் 'கலச'மாகியது. 'கலய'த்தின் போலிதான் 'கலசம்'.

இதுகொண்டு, இப்படிச் சொல்லலாமா?

அடுப்பின்மேல் கலசம்;
கோபுரத்தின்மேல் கலயம்.

-இவை கூறக்கூடாதவை -

சொல்லத்தகாதவை என்னும் எண்ணம் எழும். இவற்றிலும்' 'கோபுரத்தின் மேல் கலயம்' என்று சொல்வது ஆன்மீகக் குற்றமாகவும் படும்.

மொழியளவில் நோக்கினால் கலயம் மூலம்; கலசம் போலி ஒரே சொல் மூலமாக நின்று சிறுமைக் கருத்தையும், போலியாகிப் பெருமைக் கருத்தையும் தருகின்றது. ஆனால், கலயத்திற்குக் கொள்ளப்படும் இச்சிறுமை அதற்கு இயல்பு அன்று. போலியான கலசத்தால் நேர்ந்தது அன்றோ? அஃதாவது போலி மூலத்தைத் தாழ்வாக்கியுள்ளது.

இது மொழி வரலாற்றில் ஒரு நிலை.
இத்துடன் மற்றொன்றையும் குறிக்கவேண்டும்.
மேற்போக்கான நோக்கத்தில், 'கலயம்' தமிழ்; 'கலசம்'

வடமொழி என்றும் பலர் கருதுவர். இக்கருதல், மூலத்தாயை மறுத்துவிடும் போக்கு ஏனலாம்.

இவ்வகையில், போலியாகும் வழக்கு எத்தகுதி கொண்டது? அதன் தகுதியைப் பின் வரும் வழக்குகள் கொண்டு அறியலாம்:

குசவன் வீட்டு முசக்குட்டி
புசல் அடித்ததில் மசங்கிற்று — இவ்வாறு பேசுவோரை

ஏளனப் பார்வையில் வைப்போமன்றோ? பேச்சு நகைப்பிற்கு உரியதாகிவிடும். இதுபோன்ற வழக்கை "இழிசினர் வழக்கு"[2] என்பர்.

இதுகொண்டு 'கலசம்' என்பது இழிசினர் வழக்கு என்றால் அப்படிச் சொல்வது ஆன்மிகக் குற்றம் என்பதற்கு உறுதியாகிவிடும். இந்த அளவில் சொற்போலி சிறப்பைப் பெற்றுள்ளது. மொழித்துறையில் இந்நிலை ஒருபுறமிருக்க, அடுத்தொரு நிலை இங்கு நினைக்கத்தகும் தொடர்புகொண்டது ஆகின்றது.

காண்பதற்கு உரியது காட்சி; (காண்-சி)
மாண்புக்கு உரியது மாட்சி; (மாண்-சி)
வெட்டிப் பிரிக்கப்படுவது வேட்டி;
முட்டிக்கொண்டிருப்பது முட்டி. இவற்றைக்

காக்ஷி
மாக்ஷி
வேஷ்டி
முஷ்டி — என எழுத்து மாற்றி எழுதினர். அறியாதார் இவை வடசொற்கள்; வடசொற்கள்தாம் தமிழில் காட்சி மாட்சி என ஆயின என்று எண்ணினர்.

மொழிச் செருகலில் இஃதொரு எழுத்துமாற்ற வேலை
முன்னர்க் கண்ட கலயம்—கலசம் இயற்கையாக
நேர்ந்தது;
பின்னது, செயற்கை வேலை; உள்நோக்கங்கொண்டது;
கீழறுப்பு வேலை.

## ஆவும்; ஆனும்

மொழிப்போக்கில் இவ்வாறெல்லாம் பார்க்கவேண்டியதில்லை; நிகழக்கூடியனவே என்றொரு அமைதி எண்ணம் எழ

---

2. தொல் : பொருள் : 649 பேரா. உரை.

லாம். இவ் வமைதி எண்ணத்தை மீற வேண்டிய அளவிற்குப் பல கரணியங்கள் முந்துகின்றன.

'ஒருசில' என்றால் ஒன்றும் கருத வேண்டியதில்லை; ஒன்றிரண்டென்றால் சென்று தொலையட்டும் என்று விடலாம்; இயல்பில் நிகழ்வது என்றால் முயல்வதும் வேண்டுவதன்று; இட்டுக்கட்டிச் செய்யப்படுவது என்றால் ஏறிட்டுப் பார்த்தாக வேண்டும் அன்றோ? திட்டமிட்ட செயலென்றால் திகைப்பதோடு நின்றுவிடுவதா?

இம்மொழி ஊடுருவல் அடியில் தொடங்கி ஆடைக்கு (வேட்டிக்கு) வந்து ஆன்மாவையே கைப்பற்றுவதானால் அது கவனத்திற்கொள்ளவேண்டியதன்றோ? கவனத்திற்கொண்டால் ஆன்மாவே சான்றாகின்றது.

**'ஆ' வை மேய்ந்த 'பசு'**

'ஆ' என்பது ஓரெழுத்தொருமொழி. இது கறவை இனத்தைக் குறிக்கும் சொல். சங்க இலக்கியங்களில் இச்சொல்லே உளது. மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் இதனையே கையாண்டார். சிலப்பதிகாரத்தில் 'ஆ காத்தோம்பி', ''கன்றுதேர் ஆ'' என்றெல்லாம் ஆவும் உண்டு. அத்துடன் ''பசு பத்தினி'' எனப் பசுவும் புகுந்தது. புகுந்த வடமொழிப் 'பசு' இடத்தைப் பிடித்து மடத்தைப் பிடுங்கத் தொடங்கியது.

பின் வந்த புலவர் பலரும் 'ஆ' என்றும் 'பசு' என்றும் இரண்டையும் ஆண்டனர். தேவார மூவர் 'ஆ' வைக் கொண்டனர். இருந்தாலும் இன்றைய நிலை என்ன 'பசு' என்றால் புரியும். 'ஆ' என்றால என்ன தெரியும்? இலக்கணம் பயில்வோர்க்கு நெட்டெழுத்துக்களில் ஒன்று என்று தெரியும். 'ஆ' என்று வாய் பிளப்பதாகப் புரியும். ஏதேனும் வலி ஏற்படும்போது குரல் கொடுப்பதாகத் தோன்றும். பயன் என்ன? 'ஆ' என்னும் சொல் அதற்கு அமைந்த பொருளில் வழக்கற்றுப் போயிற்று. 'ஆ' வைப் பசு மேய்ந்துவிட்டது. இவ்வாறு எத்துணை சொற்கள் மேயப்பட்டன? அவை யாவும் செருகலால் நேர்ந்தவை அன்றோ?

'ஆ'வை மேய்ந்த பசு ஆன்மாவையும் தின்னத் துவங்கி யதைக் காணவேண்டும்.

'ஆ' என்பதற்குக் கறவை இனத்தைக் குறிக்கும் பொருள்; அதன் மூலப் பொருள் அன்று. அச்சொற்கு வேர்ப்பொருள் உயிர் என்பது. 'ஆ' என்னும் இச்சொல் குரலால் ஒலியெழுப் பும் உயிரினத்தைக் குறிக்கும். அதனால்தான், இசைத் தமிழில் 'குரல்' என்னும் இசைக்குரிய குறியீட்டெழுத்தாக 'ஆ'[3] அமைக்கப்பட்டது.

அதன் மறுமுனைப் பொருள் வளர்ச்சிதான் 'ஆவி' என்னுஞ் சொல்.

ஆவி உயிர். 'ஆவிபோகக் கத்துகிறான்' என்று இக்காலத் தும் வழக்குண்டு. வாய்திறந்து ஊதிவிடும் உயிர்க்காற்றை 'ஆவி' என்றனர். அகநானூறு இதனை 'ஊது ஆவி[4]' என்று பாடியது. வாயைப் பிளந்து விடுவது 'கொட்டாவி' எனப்படும். இதனை இலக்கியம் "ஆவித்தல்" என்னும், நற்றிணை 'சிறுவெண்காக்கை ஆவித்து அன்ன[5] என்றது. இவ் ஆவிகள் இரண்டும் சற்று வெப்பமான உயிர்க்காற்று.

அத்தொடர்பில் வெப்பங்கொண்டவை 'நீராவி' 'பாலாவி எனப்பட்டன.

'ஆ' என்பதன் மற்றொரு முனைப் பொருள் கறவை இனத் திற்கு ஆயிற்று. முதல் மாந்தர் மலைநிலத்தவர். மலைநிலத்து விலங்குகள் யாவும் அவனுக்குப் பகையானவை அல்லது பழக் கத்திற்கு அஞ்சியவை. மலையினின்றும் கீழ் இறங்கியவரது' முல்லைநில வாழ்வில் அவனை அண்டிய விலங்கு கறவை இனம். அவ்வினம் 'ஆ' எனப் பெயர் பெற்றது. அதன் குரலொலியா கிய 'அம்மா' ஒலியும், 'அம்மம்' என்னும் தாய்ப்பாலைக் குறிக் கும் சொல்லும் 'ஆ' மாந்தரது அண்மைத் தொடர்புடையவை என்பதன் சின்னங்கள்.

---

3. பிங். : 1402, 1415
4. அகம் : 71 : 14
5. நற். : 345 : 4

'ஆ' . 'ஆன்' என்றாகும். 'னகரம் ஒற்றும் ஆவும் மாவும்'[6] என்று தொல்காப்பியம் விதி வகுத்தது. இந்நிலையிலும் உயிரினம் என்னும் பொருளிலேயே 'ஆன்' என்னும் சொற்பொருள் அமைந்தது. உயிர் மட்டும் சென்று அமைதியுற்று நிலைபெறும் இடம் 'ஆனிலை உலகம்'[7] எனப்பட்டது. இந்த 'ஆன்' உயிரைக் குறிப்பது. பிற்காலத்தார்—புறத்தின் உரையாசிரியர் உட்பட இதற்கும் பசுவைத் தொடர்பாக்கிக் கோனிலை உலகம்'[8] — 'கோவுலகம்' என்று கொண்டனர்.

இவ்வாறு உயிரைக் குறித்தெழுந்த சொல் கறவையினத்திற்கு ஆன்மையுடன் அனைத்து இன உயிர்களையும் குறிக்கும் சொல்லாக 'ஆன்மா' என உருப்பெற்றது. ஆன் உயிர்; மா விலங்கு (அழைக்கை என்றும் பொருள்[9]) குறுக்கே வளரும் விலங்கும் நிமிர்ந்து நின்ற மாந்தனும் ஆகிய அனைத்து உயிர்களின் உயிரையும் குறிக்கும் காரணக் குறியீட்டுச்சொல்லாக 'ஆன்மா' என்னும் சொல் அமைந்தது. இவ் வடிப்படை கொண்டே வடமொழியின் முதல் நூல் என்று கருதப்படும் இருக்கு மறையும்,

'இரண்டுகால் உயிரும் நான்குகால் உயிரும் பசு' என்றது.

இங்கு மற்றொரு தொடர்பையும் காணல் பொருந்தும். மேலை நாட்டார் வணிகத் தொடர்பால் சொற்கள் இடம்மாறி வழங்கப்பட்டன.

'அரிசி' என்னும் தமிழ்ச் சொல் மேலைநாட்டில் ஏறியதை மொழிநூலார் அறிவர். இஃது இலத்தீனில் ஒரிசா (ORIZA) ஆகி ஆங்கிலத்தில் 'RICE' ஆகியது. இது போன்றே 'ஆன்மா' என்னுஞ்சொல் கிரேக்கத்தில் 'அனிமா' ஆகியது. கிரேக்கத்தில் இதற்குப் பொருள் 'உயிரினத்து உள் உயிர்' என்பது, இங்கே கவனத்திற்கொள்ள வேண்டியதாகும். இவ் 'அனிமா' தான் ஆங்கிலத்தில் 'அனிமல்' (ANIMAL) ஆகியது.

---

6. தொல், எழுத்து : 232 : 4
7. புறம் : 6 : 7.
8. ,, : 6 : 7 உரை
9. பிங். : 1996 : 2

இவற்றையெல்லாம் நுணுகி நோக்கின் 'ஆன்மா' என்னும் தமிழ்ச்சொல்லின் மூலப்பொருளாகிய 'உயிர்' என்பதை வடமொழியாளர் விடுத்து 'ஆ'வைப் பசுவாக்கியமை போன்று ஆன்மா' வையும் 'பசு' என இறையியற் கோட்பாட்டிற்குக் கொண்டனர். 'பசு, பதி, பாசம்' என்னும் மூவியல் வடசொற்களில் 'பசு' ஆன்மாவைக் கவர்ந்தது. சைவப் பெருமக்கள் சிலரே 'ஆன்மா' எனக் கையாளப் பலர் 'பசு' என்றே எழுதினர். அதனால் 'ஆன்மா' வடமொழியாளரால் மற்றொரு உருவத்திற்கு ஆளாகியது. அது 'ஆத்மா' என்றாக்கப்பட்டது. ஆன்மாவையும் ஆத்மாவையும் அறிவோர் 'ஆத்மா' என்னும் வடமொழியின் தமிழ் உருவமே 'ஆன்மா' என்று தவறாகக் கொண்டனர்.

**வடநூல் வழித் தமிழாசிரியர்.**

இவ்வாறு கொண்டமை முன்னர்க் கண்ட 'காட்சி-காக்ஷி' போக்கில் உண்டானதாகும்.

சுருக்கங் கருதி ஒன்றைக் காட்டினம். இதுபோன்று நூற்றுக் கணக்கான சொற்கள் வடமொழியின் மாற்றுருவமாகத் தமிழில் உள்ளனவாக வடமொழியாளரால் காட்டப்பட்டன; மாற்றப்பட்டன. இவ்வாறு செய்தவர்களை இடைக்காலத்தார் ''வடநூல் வழித் தமிழாசிரியர்''[10] என்றனர். இவ்வாறு குறித்த யாப்பருங்கல விருத்தியின் உரையாசிரியர் ஒரு வடநூல் வழித் தமிழாசிரியரே. இப்போக்குக்குத் துணைபோன இவர், ''வடமொழியைத் தழுவாது நிற்கும் தமிழ் உண்டா''[11] என்று பாடும் துணிவையும் பெற்றார். இவ்வாறு தோன்றும் வடநூல் வழித் தமிழாசிரியர்களை மறுக்கும் தமிழ்மரபுத் தமிழாசிரியரும் குரல் கொடுத்தனர். 'தமிழில் அணியிலக்கண நூலே இல்லை' என்றொரு குரலும் பிற்காலத்தில் ஒலித்ததுண்டு. அதற்குத் திருநாராயண ஐயங்கார் என்னும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பெரும்புலவர் ''பிற பாஷைகளிலில்லாத எண்ணிறந்த பலவேறு வகையான பாடல்களையும் பிரபந்தங்களையும் உடையதாய்ச்

10. யாப், விரு : கழகப் பதிப்பு பக். 523
11. ,, ,, 95 ,, 491

செய்யுள் நடையிற் சிறந்து விளங்கும் தமிழ்மொழிக்கண்ணே செய்யுளுக்கின்றியமையாத பொருள், யாப்பிலக்கணங்கள் பிறதொரு பாசையிலிருந்து கொள்ளப் பெறாது தமிழுக்குரிய வாய்த் தனியே இருக்கும் பொழுது அவற்றினோடொத்த அணியிலக்கணப்பகுதி மட்டும் அன்னிய பாசையிலிருந்து வந்த தாகச் சொல்லுவது அநாதரிக்கத்தக்கதே''

—என்று மறுத்து எதிர்க்குரல் கொடுத்தார்.

காலங்காலமாக இவ்வாறு எழுத்துச் செருகல், சொல் ஊடுருவல் கருத்துப் புரையோட்டம் தொடர்ந்து, பையப்பைய நிகழ்ந்து வருகின்றது. தமிழரில் இதன் உள் நோக்கை அறியா தவர் ஒத்து ஊதியும், தாளமிட்டும் வந்துளர். அள்ளித் தெளித்தாற்போல ஆங்காங்கு எதிர்ப்பும் மறுப்பும் எழுதுவதும் மறைவதுமாகவும் நிகழ்ந்தன.

இவற்றால் எத்துணையோ பொருள்பொதிந்த தமிழ்ச் சொற்கள் மறைந்தன. பொருள் பொருந்தாத வடசொற்கள் மலிந்தன. ''ஏழில்மலை''[12] என்பது எலிமலையாகி 'மூசிக பர்வதம்' என வடமொழியாகி அதற்கொரு புதுப் புராணம் எழுந்த ஒரு சான்றே போதுமானது. தேவார மூவரால் பாடப் பட்ட திருக்கோவில்கள் உள்ள ஊர்களின் தனித் தமிழ்ப்பெயர் கள் இன்று எவ்வாறுள்ளன?

சைவப்பெருமக்களே ''மறைக்காட்டுறை மைந்தா''[13] என்று பாடிக்கொண்டு 'வேதாரணியம் செல்கின்றேன்' என்கின்றனரே. எத்துணை ஊர்ப்பெயர்கள் மாறியுள்ளன? தமிழர்களது இப் பாராமுகப் போக்கையும், பெருந்தன்மையையும், பெருமளவு மந்தத்தையும் பயன்படுத்திக்கொண்டு எல்லாமே வடமொழி யிலிருந்து வந்தன என்றும் எழுதினர்; பேசினர்; நிலைநாட்ட முனைந்தனர்; இன்றும் முனைந்துள்ளனர்.

தமிழ் நூல்களில் சில போக மற்றெல்லாம் வடமொழியிலி ருந்து வந்தன என்றனர். திருத்தொண்டர் புராணத்திற்கே

12. நற் : 391 : 7
13. ஞான. தே : மறை 2

இந்நிலை என்றால் என்ன ஆவது? இவற்றைக் கண்டு மனம் புழுங்கிய பரிதிமாற்கலைஞர்,

''தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியு முன்னமே தாமே அறிந்தன போலவும் வடமொழியினின்றுமே தமிழுக்கு அவை வந்தன போலவும் காட்டினர் [14] -என்று எழுதிய கருத்து இன்றும் நினைவுகூரத்தக்கதாக உளது.

'இன்றும் நினைவுகூருமாறு நிலை என்ன? என்று வினவலாம். ஒரு சில காணலாம்.

புதுச்சேரி மாநில வானொலியில் இந்திப் பாடவகுப்பில் அதன் ஆசிரியர் ஒரு தொடரை மொழிபெயர்ப்பிற்குத் தந்தார். அத்தொடர் ''தமிழ் மொழி இனிமையானது இல்லை'' என்பது. இதன் உள்நோக்கத்தை எவ்வாறு கணிப்பது? 'தமிழ்' என்னுஞ் சொல்லுக்கு 'இனிமை' என்று பொருள் என்னும் தமிழ் மண்ணில், ஒரு வடநூல்வழி இந்தி ஆசிரியர் நாட்டு மக்கட்கு ஒலி பரப்பினார். இது 28-8-78 நண்பகல் 1மணி நிகழ்ச்சி.

மூன்று திங்களுக்கு முன்னர் மதுரையில் ஒரு வடநூல் வழித் தமிழாசிரியர்,

''தமிழ் காலப்போக்கில் உலகில் மறைந்துபோகும்; வடமொழிதான் நிலைத்து நிற்கும்'' என்று பொதுமேடையில் பேசினார். செய்தித்தாள்களில் படித்த தமிழர்களாக உள்ளோம்.

''மிகவும் விரைவிலே தமிழ் ஒளி உலக முழுவதிலும் பரவா விட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்'' [15] இப்படி ஓர் அழுத்தமான தொடர். கவிமாமன்னன் பாரதி மொழிந்தது. பாரதி நூற்றாண்டு விழாக்கள் நடக்கின்ற காலம். பாரதி வந்தால் அவன் பெயரை மாற்றி அழைக்கவும் தயங்கப் போவதில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

---

14. தமிழ்மொழி வரலாறு: பக். 15

15. பாரதி பா :

**சிவம் தமிழ் அன்றாம்!**

தற்போது பழங்குரல் ஒன்று புதுப்பிக்கப்படுகின்றது. 'சிவம் தமிழ் அன்று; சைவம் என்று சொல்லத் தொல்காப்பியத்தில் விதி இல்லை, - அண்மையில் சென்னையில் எழுந்த புழுதியாம் இது.

''தமிழ் சிவம் இனிமை என்னும் தனிப்பொருளதாம்'' என்பது கழாரம்பரது பேரிசை நூற்பா. இதற்கு மறுப்புபோலும் தற்போது எழுந்துள்ள முணகல்.

எதில் எதிலோ வைக்கப்பட்ட வாய் சிவத்தின் மேலேயே வைக்கப்பட்டுள்ளது. மொழியியல்படி சுருக்கமாகச் சொன்னால்,

சுல்-என்பதன் வேரிலிருந்து `சுள்-செல்-சேல்-சேள்-செள் செய்-சேய்-செம்-செவ்-செவ- சிவ-சிவம் வளர்ச்சியுறறதை மொழி ஞாயிறு பாவாணர் நிலைநாட்டியுள்ளார்கள்[16] பாவாணர் அவர்கள் சைவம் என்பதைத் திரிபாகுபெயர் என்றும் குறித்தார்.

'தவ' என்னும் உரிச்சொல் 'தவம்' ஆனதுபோன்று,

'சிவ, சிவம்' ஆயிற்று.

செம்மை, செந்நிறம் என்னும் பொருட்பாங்கைக் கொண்ட சொல் சிவம். ' தீப்போலும் செம்மை வண்ணத்தன்'' எனச் சிவபெருமான் குறிக்கப்பட்டார்.

உலகில் ஒருகால் சைவக்கொள்கை பரவியிருந்தபோது அங்கெல்லாம் 'சிவன்,சிவப்பன்' என்னும் பொருளிலேயே கொள்ளப்பட்டார். பிலிப்பைன்சு நாட்டார் சிவனைச் 'சிவப்பன்' எனப்பொருள்தரும் சொல்லிலேயே வழிபட்டனர்.

வடமொழியில் 'நல்ல' 'மங்கலமான', எனப்பொருள்படும் அடைமொழியாகிய 'சிவ'என்பதைக் காட்டுவர். வடமொழியில் 'சிவ' என்னும் ஒலி தமிழ் ஒலிக்கு மாறுபட்டது. மற்றொரு

---

6. தமிழர் மதம் : பக். 38, 39.

சார் வடமொழியாளர், 'சீ' என்பதை மூலமாகக் காட்டுவர். சீ' என்பதற்குப் 'படுதல்' 'அழித்தல்', பொருள். ஒருமுனையார் மங்கலப்பொருள் சொல்ல, மற்றொரு முனையார் அழிவுப் பொருள் காட்ட இருமுனைப்பட்டது வடமொழிச் 'சிவம்'.

(இலிங்கம், சிவம் என்னும் அருவ உருவம் பற்றி இவ்விடத்தில் கருதவில்லை. அஃதொரு தனி ஆய்விற்குரியது; இதுபோது சிவம் என்னும் சொல் பற்றிய கருத்தே பேசப்படுகிறது.)

'சிவம்' என்னுஞ்சொல் 'சைவம்' என்று ஆவதற்குத் தொல்காப்பியத்தில் விதியில்லை என்கின்றனர்.

> ''உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
> குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
> நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
> .... ... ... .... .... ... .... ... ... ... ... ... ... ...
> அன்னவை எல்லாம் மருவில் பாத்திய''[17]

என்னும் தொல்காப்பிய நூற்பா பண்புச்சொல், மரூஉ மொழியாகும் என்கின்றது.

இவ்விதிப்படி 'செம்மை' என்னும் பண்புப் பொருள் தரும் 'சிவம்,—சைவம்' என மருவி வழங்கப்பட்டது. இவ்வாறு மருவிய மொழிகள் பல நம் வழக்கில் உள்ளன. ஒன்று கொள்ளலாம். தோற்ற கால மாந்தன் மொழிகொள்ளாது கையாற் காட்டும் செயலால் கருத்தை வெளிப்படுத்தினான். இது 'செய்கை' எனப்பட்டது. இச்சொல் காலப்போக்கில் 'சைகை' என மருவியது. இச்சொல் 'செ-சை' ஆக மருவுதற்கு எடுத்துக் காட்டு.

மொழி முதலில் மட்டுமன்றி மொழியிறுதியிலும் இவ்வாறு மருவும்.

நன்செய், நஞ்சை என மருவியதில் இதனைக் காண்கின்றோம். இகரம் ஐகாரமாக மாறும். 'பித்தம்' என்னும் சொல் பைத்தியம்' என வழக்கிலும் உள்ளதைக் காண்கின்றோம்.

---

17. தொல். எழுத்து : 482

இவ்வாறே 'சிவம்' என்னும் தூயதமிழ்ச்சொல் 'சைவம்' என மருவிற்று. இவ்வாறு மருவி வருதலை ''வழங்கியல் மருங்கின் உணர்ந்து ஒழுக ''வேண்டும். அவ்வாறு ''ஒழுகுதல் நல்லறிவில் நாட்ட'' முடையோர்க்கு இயல்பு. இவ்வாறு நாம் கூறவில்லை. தொல்காப்பியர் இடித்துக் கூறும் மொழிகள் இவை:

''கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்''[18]
நல்லறிவில் நாட்டமுடையார் தேர்ந்து தெளிவார்களாக

ஒரு மொழியில் மற்ற மொழிச் சொற்கள் புகுவதும் பரவுவதும் இயற்கைதாம். தமிழிலும் வடசொற்கள் புகுந்தன. வடமொழியிலும் தமிழ்ச்சொற்கள் இடம் பெற்றுள. இரண்டும் இன்றியமையாதன என்று கொள்ள வேண்டியதல்ல. ஒன்றையொன்று விலக்கி வாழ இயலும். தமிழ் அவ்வாறு வாழும் இயல்புடைய மொழி எனத் தமிழறிஞர்களாலும் வெளி நாட்டு மொழியறிஞர்களாலும் நாட்டப்பட்டுள்ளது.

இதனை அறிந்தும் தமிழைத் தம் தாய்மொழியாக உள்ளுணர்வோடு ஏற்றுக் கொள்ள மனங்கொள்ளாத சிலர் இது போன்ற குறுக்குநடை போடுவதைப் பார்க்கும்போது தமிழைத்' தாய்மொழியாக உள்ளுணர்வோடு கொண்டோர் ஒன்றைக் கடுமையாகக் கொள்ள வேண்டும்.

எழுத்து, பேச்சு, சொற்பொழிவு முதலிய முனைகள்தோறும் தமிழாக்கம் விழைவோர் தமிழ் மறுப்பாளர் வலிந்து கூறுபவற்றை மறுத்துக்காட்டும் பணியைக் கடமையாகக் கொள்ள வேண்டும். இலக்கிய நிகழ்ச்சியாயினும், குமுகாய நிகழ்ச்சியாயினும், அரசியல் நிகழ்ச்சியாயினும் இக்குறிக்கோளை ஒரு கோட்பாடாகக் கொண்டு பணியாற்ற வேண்டிய காலம் தோன்றியுள்ளது. இவற்றிலும் குறிப்பாகத் திருக்கோவில்

---

18. ,, ,, : 483

நிகழ்ச்சிகளில் தமிழறிஞர் இக்கோட்பாட்டைத் தவறாது கடைப்பிடிக்கவேண்டும். திருக்கோவிலாரும் இதற்கு வாய்ப் பளித்து மொழிவழி நலம் சேர்க்கும் உணர்வுடையோர்தம் கருத்துகளைப் பரப்புவதற்கு உதவ வேண்டும். இறைவன் திரு முன்னேனும் குறுக்குவழிப்பேச்சுகள் தவிர்க்கப் படவேண்டும். இது முனைப்பாக்கிக் கொள்ளவேண்டியதாகியுள்ளது. இது இன்று இன்றியமையாததாகியுள்ளது.

ஒரு கவிதையும்,
ஓர் உரைமொழியும் இங்கு இந்நேரத்திற்கு
நிறைவுரையாகும்:

''கட்டி
இரும்புதந்த நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலை ஈடழித்து
வரும்புதுமை நினைக்கையிலே
நெஞ்சுபதைக் கும்சொல்ல வாய்ப தைக்கும்''[19]
-பாவேந்தர் பாரதிதாசனார்.

''தமிழ்மொழியிலோ யார் என்ன செய்தபோதிலும் கேள்வி முறையில்லை. அவரவர் தந்தமக்குத் தோன்றியவாறும் வாய்க்கு வந்தன வந்தவாறும் எழுதுகின்றனர். இவ்வாறு செல்ல விடு தலும் கேடே''[20]

-பரிதிமாற்கலைஞர்

1 : தமிழிபக்கம் ,19
20. தமிழ்மொழி வரலாறு: பக், 119.

## வளையல் துண்டு

### பொருட் புதையல்

நாட்டு வரலாறு, மக்களின் பழக்க வழக்கங்கள் வாழ்க்கை ஒழுக்கம் ஆகியவற்றைப் பொருள் வழக்கு அற்றுப்போன சொற்களின் பொருள்களை விளக்கி வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தாத ஆசிரியர் தம் கடமையில் தவறியவர்.

—*சான் கிரகாம்*
[English Word Book]

**பொருட் புதையலின்**

**பொன் அணிகள்:**

1. *கட்டுரை*

   *(வெளி : தஞ்சைமாவட்ட நூலக ஆணைக்குழு பெரியார் மலர் — தஞ்சாவூர் (1973)*

2. *ஆசிரியர்*

   *(முத்தமிழ்க்காவலர் பவழ விழா மலர் 1987)*

3. *பட்டி மன்றம் என்றால்*

   *(தவத்திரு குன்றக்குடி அடிகளார் பொன்விழா மலர் 1975)*

4. *வாயும் சொல்லும்*

   *(தஞ்சை அமுதம், தஞ்சாவூர்—1976)*

5. *நூலகர் ஒரு புலவர்*

   *(தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழு மலர் 1977)*

4

# கட்டுரை.

## தமிழில் சொற்பொழிவு

சொற்பொழிவு, சொற்பெருக்கு ஆகிய தொடர்கள் பிற்காலத்தில் உருவானவை. இதுகொண்டு முற்காலத் தமிழகத்தில் சொற்பொழிவே நிகழவில்லை என்றோ, சொற்பொழிவு என்றொரு துறை இல்லை என்றோ கூறக்கூடாது.

> ''தமிழ்நாட்டில் பழைய காலத்தில் சொற்பொழிவாற்றுவது உண்டா? பேச்சு வன்மை உண்டா? என்று பலர் கேட்கிறார்கள். ஏதோ பேச்செல்லாம் கப்பலேறி ஆங்கிலத்தோடு ஆங்கிலமாக வந்ததாக எண்ணம்''[1]

என்று மறைந்த டி. கே. சி. அவர்கள், 'எல்லாம் வெளிநாட்டுச் சரக்கு' என்பாரைக் குறிப்பாக மறுத்து எழுதினார். சொற்பொழிவுத்துறை நம் நாட்டில் இறக்குமதி ஆனது என்பதற்கு மாறாகப் பழந்தமிழகத்தில் இத்துறை இருந்தது. இது நெறியும் முறையும் கொண்டதாக விளங்கியது. செம்மையும் செழிப்பும் கொண்டதாகத் துலங்கியது.

திருக்குறளில் உள்ள சொல்வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை என்னும் அதிகாரப் பெயர்களே பழந்தமிழகத்துச் சொற்பொழிவுத் துறைக்குப் பதிவான முத்திரைகள். நாலடியார், பழமொழி முதலிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அமைந்த இவ்வதிகாரங்களும் அவை வழங்கும் கருத்துக்களும் தக்க அடையாளச் சின்னங்கள்.

தொல்காப்பியத்தில்,

1. இலக்கியச்சுவை—கட்டுரை

''வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி வுறூஉவென அவையும் அன்ன''[2]

என்பதொரு நூற்பா, இதில் குறிக்கப்படும் ''அவையடக்கியல்'' என்பது அவைக்கு அடக்கமாகப் பேசுவதையும் எழுதுவதையும் இலக்கணமாக அறிவிப்பது. சொற்பொழிவுத்துறையில் அவை யடக்கம் கூறுதல் ஒரு தனிப்பண்பு. அதனை அறிவிக்கும் இந்த நூற்பாவில் உள்ள ''வாயுறை வாழ்த்து'', ''செவியறிவுறூஉ'' எனும் இரண்டும் இங்குச் செய்யுளுக்குரியனவாகக் குறிக்கப் படினும், அவையும் சொற்பொழிவின் ஒரு பகுதியாகவும் அமை பவை. அரசவையில் சான்றோர் எழுந்து நின்று அரசனை வாழ்த்திப் பேசுவதும், அறிவுரை சொல்லிப் பேசுவதும் இப் பெயரிலேயே இலக்கணம் ஆவன. பேசியதை எழுதுவதும், பேசாமலே எழுதியனுப்பப்படுவதும் இங்கே இலக்கணமாகக் குறிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த நூற்பா சொற்பொழிவுத் துறைக்குக் குறிப்பான இலக்கணம் தருவது.

முற்காலச் சொற்பொழிவின் இலக்கணம், இலக்கியம் காட்டல் இங்கு நோக்கம் அன்று. சொற்பொழிவைக் குறிக்கும் அக்காலச் சொற்களையும் தொடர்களையும் காண்பதே நோக்கம்.

'சொற்பொழிவைக் குறிக்க முற்காலத்தில் ஒரு தொடர் இல்லையோ' எனலாம். தொடர் இல்லை; பல தொடர்கள் இருந்தன 'ஏன் பல தொடர்களோ' எனலாம். தமிழில் சொற் பொழிவாக விரித்து உரைக்கப்படும் கருத்துக்கள் வகை வகை யாக இருந்தன. அவ்வவ் வகைக்கு ஏற்ப ஒவ்வொரு முனையும் ஒவ்வொரு பெயர் பெற்றிருந்தது.

இலக்கிய, இலக்கணக் கருத்துக்களை விரித்து உரைக்கப் படும் சொற்பொழிவு ''விரிவுரை''[3] எனப்பட்டது. அறிவுரை யாக வழங்கப்படும் சொற்பொழிவு ''நல்லுரை''[4] எனப்பட்டது.

2. தொல்-பொருள்—416
3. நன்-23-மயிலை, உரை.
4. மணி- விழாவறைகாதை 59

அறிவுரையாக வழங்கப்படும் சொற்பொழிவு "செவியறிவுறூஉ"[5] எனப்பட்டது. வாழ்த்துரையாக வழங்கப்படுவது "வாயுறை வாழ்த்து"[6] எனப்பட்டது சமயத் தொடர்பான, உரை "புண்ணிய நல்லுரை"[7] எனப்பட்டது.

**கட்டுரை**

சொற்பொழிவைக் குறிக்கும் மற்றொரு பொதுச்சொல்லாகக் "கட்டுரை" என்னும் சொல் இடம்பெற்றது.

இக்காலத்தில் "கட்டுரை உரைக்கப்படுவதைக் குறிப்பதாக இல்லை; எழுதப்படுவதைக் குறிக்கின்றது. ஒரு கருத்தை விளக்கிக் கட்டுக்கோப்புடன் எழுதப்படுவதைக் "கட்டுரை" என்கின்றோம். இக்கருத்துக்கு மூலகாரணமாகத் தொல்காப்பியமும் சிலப்பதி காரமும் கருத்துக்களைத் தருகின்றன.

"கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து" (தொல். பொருள். 428) என்னும் தொல்காப்பிய அடியில் குறிக்கப்படும் கட்டுரை என்பது செய்யுள் அன்றி உரையாகத் தொடுக்கப்படுவது. அஃது எழுத்தாகவும் பேச்சாகவும் அமையலாம்.

சிலப்பதிகாரத்தில் உள்ள "உரைபெறு கட்டுரை" என்னும் தொடர் 'கட்டுரை' என்பது எழுதப்படுவதைக் குறிக்கும் என்பதற்கு ஒரு அமைப்பாக உள்ளது. ஆனால் இத்தொடருக்குக் கொண்ட மாற்றுக் கருத்தால்தான் "கட்டுரை" எழுதப்படுவதைக் குறிப்பதாயிற்று. "உரைபெறு கட்டுரை" என்பது பாடல் அன்றி உரை நடைபெற்றுப் பொருள் பொதிந்ததாய் உரைக்கப்படுவது என்னும் பொருள் கொண்டது. சிலப்பதிகாரத்தில் உள்ள அப்பகுதி எழுத்துரைபெற்றுள்ளது என்னும் ஓரேவகை எண்ணத்தால் எழுந்த கருத்தின் வளர்ச்சியே காலப் போக்கில் எழுதப்படுவதைக் குறிக்கும் சொல்லாய்க் "கட்டுரை" பயன்படலாயிற்று.

---

5. தொல் - பொருள்-49
6. " " 417
7. மணி-விழாவறை காதை-59

''குழலும் குடுமியென் பாலகன் கூறும்
மழலைவாய்க் கட்டுரை யால்''

—என்பது ஐந்திணை ஐம்பது. இதனில் கட்டுரை இனிய மழலைப் பேச்சைக் குறித்து நிற்கின்றது.

''தமக்குற்ற கட்டுரையும் தம்மிற் பெரியார்
உரைத்தற் குற்ற உரையும் அஃதன்றிப்
பிறர்க்குற்ற கட்டுரையும் சொல்லற்க; சொல்லின்
வடுக்குற்ற மாகி விடும்.''

என்னும் ஆசாரக்கோவைப் பாடலில் வரும் கட்டுரை என்னும் சொல் பேசுவதைக் குறிப்பது. அதனைச் சொல்லற்க என்னும் சொல் சொல்லிக்கொண்டுள்ளது.

''கல்லாத வரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு''

என்னும் பழமொழிப் பாடல் அறிவுரையாகப் பேசப்படு வதைக் ''கட்டுரை'' எனக் குறிக்கின்றது. அதே பழமொழி.

''கல்வி அகலமும் 'கட்டுரை' வாய்பாடும்
கொல்சின வேந்தன் அவைகாட்டும்''

என்று குறிக்கின்றது. அரசன் அவை கட்டுரையைக் காட்டும் என்பதால் கட்டுரை அவையில் பேசப்படுவதைக் குறித்துச் சொற்பொழிவைக் குறிப்பதாகின்றது.

''காயக் கரணமும் கண்ணிய துணர்த்தும்
கட்டுரை வகையும்''

என்னும் மணிமேகலை அடிகளில் கட்டுரை தான் திட்டமிட்டுக் கொண்டதை மற்றவருக்கு விளக்கி உணரவைக்கும் பேச்சைக் குறிப்பதாக உள்ளது. இந்நூல் புத்தன் கூறிய பொருள் பொதிந்த உரைப்பேச்சை

---

8. தொல்-பொருள் - 428
9. ஐம் - 25
10. ஆசா. கோ - 67

''வாமன் வாய்மை ஏமக் கட்டுரை''

என்று குறிக்கின்றது. பழிச்சொல்லைப் பலரிடம் பேசிப் பரப்பு என்னும் பொருளில்

''பான்மைக் கட்டுரை பலர்க்குரை''

எனப்படுகிறது. கந்திற் பாவை சொற்பொழிவைப் போன்று தொடர்ந்து கூறிய செய்திகளைத்

''தெய்வக் கட்டுரை' என்றும்
''கந்திற் பாவை கட்டுரை யெல்லாம்''

என்றும் கட்டுரை என்றும் சொல்லால் மணிமேகலை குறிக்கின்றது.

தம் மதத்தை நிலைநாட்டச் சொற்போரிடும் பட்டி மன்ற நிகழ்ச்சி முற் காலத்திலிருந்தது. அவ்வாறு வினாவும் விடையுமாய் மாறி மாறிக் கருத்துப்போரிட்டுச் சொற்பொழிவாற்றுவதும் கட்டுரை என்னும் சொல் கொண்டு மணிமேகலையில் பேசப்பட்டுள்ளது:

''.... .... .... ... ... ... முட்டைமுந் திற்றோ;
பனைமுந் திற்றோ எனக் கட்டுரை செய்''

எனும் அடிகளில் அக்கட்டுரையைக் காண்கின்றோம்.

இயற்கைக் காட்சியையோ, ஒருவர்தம் அழகையோ பாராட்டி வர்ணிக்கும் பேச்சும் கட்டுரை எனப்பட்டது. கலித்தொகையில் ஒரு காதலன் முதலில் தன்னைக் கண்ட காலத்தில் தன அழகைப் பலபடப் பாராட்டி என் உள்ளத்தை கவர்ந்தான் என்று குறிக்கும் காதலி,

''பலபல கட்டுரை பண்டையில் பாராட்டி''

(பாலைக்கலி 14)

எனப்பாராட்டிப் பேசுதலைக் கட்டுரை என்ற சொல்லால் குறித்

11. பழ - 12
12. '' — 259
13. மணி ஊரலருரைத்த காதை —25,26

தாள். இவ்வாறு அழகைப் பாராட்டிப் பேசும் பேச்சைக் கட்டுரையாகச் சிலப்பதிகாரமும் பேசுகின்றது.

பள்ளியறையில கண்ணகியுடன் கோவலன் குலவி மெய் மறந்து அவளது அழகைப் பாராட்டி பேசினான். கண்ணகி பேசவில்லை. கண்ணகியை முன்னவைத்துப் பேசினான். தொடர்ந்து அவனே பேசினான். கண்ணகி பேசவில்லை. ஒரு சொல்லும் சொல்லவில்லை. எனவே, இஃது உரையாடல் அன்று. கண்ணகியை விளித்து, அவள் உறுப்புகளைப் பலபட வர்ணித்துப் பேசினான். இப்பேச்சு 43 அடிகளில் நீண்டுள்ளது. இப்பேச்சில் உவமை வருகின்றது. கதைக்குறிப்பு உள்ளது. கருத்து விளக்கம் உள்ளது. ஓரளவில் சிறு சொற்பொழிவு எனலாம். இப்பேச்சின் தொடக்கத்தில்,

"கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை"

என்றும் முடிவில்

"உலவாக் கட்டுரை பலபாராட்டி"

என்னும் இப்பேச்சும் சிறு சொற்பொழிவு, "கட்டுரை" என்றே குறிக்கப்படுகின்றது. "குறியாக் கட்டுரை" என்பதாலும் 'உலவாக் கட்டுரை" என்பதாலும் ஒரு குறியில்லாமல், அஃதாவது திட்டமிடப்படாமல் தொடங்கி முடிக்க இயலாமல் அமைத்த உரையாற்றலாகிய கட்டுரை இது. அஃதாவது முன்னுரையும் முடிவுரையும் இல்லாத பேச்சு.

மாங்காட்டுப் பார்ப்பான் மதுரைக்குச் செல்லும் வழியை விளக்கி நீண்ட உரையாற்றினான். அதனைக் கேட்ட கவுந்தி அடிகள் அவன் கருத்தை மறுத்து ஒரு சிறு உரையாற்றினார். அது.

"கவுந்தி ஐயையோர் கட்டுரை சொல்லும்"

என்று கட்டுரையாகக் குறிக்கப்பட்டுள்ளது.

---

14. " — பவத்திறமறுகெனப் பாவைநோற்ற காதை - 13
15. " — சிறைவிடு காதை — 47
16. " — " " — 819
17. " — கச்சிமாநகர்புக்க காதை — 185

இல்வாறு ஒருவர் கூற்றை மறத்து நன்மை தீமையை ஆராய்ந்து அதற்கேற்ப மாற்றம் கூறுவதைக் கட்டுரை என்று பழமொழியும்.

"நல்லவும் தீயவும் நாடிப் பிறருரைக்கும்
நல்ல பிறவும் உணர்வாரைக் கட்டுரையின்
வல்லிதின் நாடி வைப்பதே புல்லத்தைப்
புல்லம் புறம்புல்லு மாறு"

எனக் குறிக்கின்றது.

சிலப்பதிகாரத்தில் 23வது காதை "கட்டுரை காதை" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அக்காதையில் மதுராபதி என்னும் தெய்வம் கண்ணகியிடம் பேசும் நீண்ட பேச்சு உள்ளது. இக்காதை 200 அடிகளைக் கொண்டது. அவற்றுள் 156 அடிகள் மதுராபதியின் தொடர்ந்த பேச்சாக உள்ளது. அப்பேச்சில் சொற்பொழிவின் அமைப்புகளைக் காண்கின்றோம்.

தொடக்கத்தில் அத்தெய்வம் கண்ணகியை அடுக்கு மொழிகளால் விளிக்கின்றது. சொல்ல இருக்கும் கருத்தை முன்னுரையாகச் சுருக்கிச் சொல்கிறது. பாண்டியரது குடிப்பெருமையை-செங்கோல் தவறாமையை விளக்குகின்றது குட்டிக் கதைக் குறிப்புகள் வருகின்றன. உவமை வருகின்றது. ஒரு சான்றுக்காகப் பராசரன் என்னும் பார்ப்பனன் கதையை நீட்டிச் சொல்கின்றது. கருத்து விளக்கம் தருகின்றது. கண்ணகியின் முற்பிறப்புக் கதையைக் கூறுகிறது. தக்க முடிவுரையுடன் பேச்சை முடிக்கின்றது.

ஒரு சொற்பொழிவு என்பது முன்னுள்ளாரை விளித்தல் -அறிமுகம் செய்து கொள்ளல் எடுத்த கருத்துக்கு முன்னுரை சொல்லல்-சான்று உவமை, குட்டிக் கதைகள், பழமொழிகள், வண்ணிப்பு, அடுக்கி மொழிதல், கருத்தை விளக்கல்-எடுத்த குறிக்கோளை நிறைவேற்றி முடித்தல் என்ற அமைப்பில் இக்காலத்தில் விளங்குவதைக் கொண்டு நோக்கினால் மதுராபதியின் இக்

18. " — பவத்திறமறுகெனப் பாவைநோற்ற காதை— 245,246.
19. கலி — பாலை —14—7
20. சிலம்பு - மனையறம்படுத்த காதை - 37
21. " — " " 81

கட்டுரை ஒரு சொற்பொழிவு எனலாம்.

பேசிய மதுராபதித் தெய்வம் தன்னை கண்ணகியிடம் அறிமுகம் செய்துகொள்ளும் போது தன்னைக் ''கட்டுரையாட்டியேன்'' என்று குறிக்கின்றது. இத்தெய்வம் பேசிய இப்பேச்சைச் சாத்தனார் தாமே கேட்டதாகவும் அதனையும் அவரே சொல்வதாகவும் சிலப்பதிகாரத்தின் பதிகத்தில் வருகின்றது. அதனைகூறும் அவர்.

''கோட்டம் இல் கட்டுரை கேட்டவன்''

என்று குறிக்கின்றார்.

ஒரு நல்ல சொற்பொழிவுப் பாங்கில் அமைந்த இந்தப் பகுதி ''கட்டுரை காதை'' என்றும், பேசிய தெய்வம் ''கட்டுரையாட்டி'' என்றும் அப்பேச்சு மற்றுமோர் இடத்தில் ''கட்டுரை'' என்றும் ஒரே சொல்லாய்க் குறிக்கப்படுவதை நோக்கினால் ஒருவர் முன்னிலையையே அவைக் களமாகக் கொண்டு ஆற்றப் பட்ட சொற்பொழிவு இது எனலாம்.

மேலும் சிலப்பதிகாரத்தில் ஒல்வொரு காண்டத்தின் இறுதியிலும், நூலின் இறுதியிலும் தொகுத்து உரைக்கப்படும் பகுதிகள் ''கட்டுரை'' என்னும் தலைப்பில் உள. பொருள் பொதிந்த உரை என்னும் கருத்தில் இத்தொகுப்புரைகள் அவ்வாறு குறிக்கப் பட்டன போலும் இப்பகுதிகள் பிற்காலத்தில் எவராலோ எழுதப்பட்டுச் சேர்க்கப்பட்டவையாகப்படுகிறது.

தொல்காப்பியத்தில் கட்டி எழுதப்படும்-உரைக்கப்படும் செய்தி கட்டுரை என்ற சொல்லால் எழுந்து, செல்லச்செல்லக் கட்டுரை என்னும் சொல் கட்டுக்கோப்போடு உரையாற்றுவதையும், அதன் தொடர்பில் சொற்பொழிவையும் குறிப்பதாக வளர்ந்து, இக்காலத்தில் எழுதப்படுவதையே குறிப்பதாக நிலைத்துள்ளது.

---

22. ,, — காடுகாண் காதை — 151

23. பழமொழி — 262

24. சிலம்பு — கட்டுரை காதை— 23

25. ,, — பதிகம் — 54

5

# ஆசிரியர்

**வாயுணர்வின் மாணவன்:**

ஆசிரியர் இல்லம். நண்பகல் நேரம், ஆசிரியர் உணவு உண்டு அமர்ந்துள்ளார். மாணவனுக்கு உணவு படைக்கப்பட்டது ஆசிரியரது இல்லக் கிழத்தியார் சோறிட்டுப் பருப்பு வைத்துக் கிண்ணத்திலிருந்த நெய்யில் ஒரு கரண்டி இட்டார். மாணவன் பிசைந்து வாயில் வைக்கச் சென்றவன் 'படக்' கென்று நிமிர்ந்தான். மூக்கு மூச்சைத் தள்ளியது; முகம் சுளித்தது.

ஆசிரியர், 'என்ன பையா?' என்றார். பையன் வந்த சொல்லை விழுங்கினான். ஆசிரியர். 'சொல்லலாம்' என்றார். மாணவன் தணிந்த குரலில், 'அம்மா நெய் போடுவதற்குத் தவறி விளக்கெண்ணெயை ஊற்றிவிட்டார்கள்' என்றான். ஆசிரியர் அம்மையாரைப் பார்த்தார். அம்மையார் புன்முறுவலை அனுப்பினார். ஆசிரியர், 'வேறு இலை போட்டுச் சோறு, பருப்பிட்டு நெய்யே போடு, என்றார்.

உணவுண்டு முடித்தான் மாணவன். 'பையா, உலவிவிட்டு வா. வந்து உனது ஏடுகள், உடைகளை எடுத்துக்கொண்டு உன் இல்லத்திற்குச் செல்லலாம். படிப்பு அவ்வளவுதான்' என்றார். 'ஐயா, மூன்றாண்டுகள் கற்க வேண்டும் என்றீர்களே, ஓராண்டும் முடியவில்லையே' என்றான். 'ஆமாம்; இதுவரை உனக்குப் படிப்பு ஒன்றில்தான் கவனம் படிந்திருந்தது. வந்த நாள் முதல் இந்த நாள்வரை உனது பருப்புணவுக்கு நெய்யாக விளக்கெண்ணெய்தான் ஊற்றப்பட்டது, கவனமெல்லாம் கல்விச்சுவையிலும் கேள்விச் சுவையிலும் படிந்திருந்ததால் நாச்சுவை காணாமல் விளக்கெண்ணெயை உண்டு வந்தாய். இன்று நாச்சுவையில் உன் கவனம் படிந்துவிட்டது. இனிக் கல்வி படியாது: செல்லலாம்' என்று முடித்துக் காட்டினார் ஆசிரியர்.

இஃது அந்தக் காலத்துக் கல்விக் கதை. இந்தக் காலத்திற்குச் செல்லுபடியாகாது. ஆசிரியர் இல்லத்தில் மாணவன் தங்கிப் பயில்வது 'குருகுல முறை' எனப்பட்டது.

இக்கால மாணவரது மனப்போக்கு,
பல்கிப் பெருகியுள்ள மாணவர் எண்ணிக்கை,

வளர்ந்துள்ள பலமுனைப் பாடத்துறைகள் முதலியன 'குருகுல முறை' க்கு அப்பாற்பட்டன எனலாம். இசை, கூத்து முதலிய நுண்கலைகளுக்கு வேண்டுமானால் ஓரளவிற்குச் சில காலத்திற்கு இசைந்து வரலாம்.

மேலே காணப்பட்ட மாணவனது கதையில் ஓர் உண்மை மின்னுகின்றது. 'மற்ற எதனிலும் கவனங்கொள்ளாது எடுத்த கல்வியில் ஆழ்ந்த படிவே படிப்பு, என்னும் உண்மையை மறுக்க முடியாது. இவ்வுண்மை எக்காலத்திற்கும் பொருத்தமானதே. தமிழ் இலக்கண நூல்கள் கல்விப் பயிற்சிக்கு இலக்கணங்களை வகுத்துள்ளன.

நீர் வேட்கை கொண்டவன் நீரைக் கண்டால் பருகுவதற்குக் கொள்ளும் ஆர்வம் போன்று கல்வியில் ஆர்வங்கொள்ள வேண்டும். இது 'பருகுவன் அன்ன ஆர்வத்தன்'[1] எனப்பட்டது. செவி வாயாக நெஞ்சு தொண்டையாகக் கேட்பவற்றை விடாது உள்ளத்தில் அமைக்க வேண்டும். நீர் பருகுவதையும் உணவு உண்பதையும் உவமையாகவும் உருவகமாகவும் எடுத்து வைக்கும் பாங்கில் மற்றொரு கருத்தையும் இலக்கண ஆசிரியர் வைத்துள்ளார். 'நாச்சுவையில் கவனங் கொள்ளக் கூடாது, என்பது அது. ''செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்[2] என்று காக்கும் வள்ளுவர் கருத்தும் இந்நோக்கில் எழுந்ததே. இவை கல்வி ஆர்வத்தைக் குறிப்பவை.

''சித்திரப்பாவையின் அத்தகவு அடங்கி''[3] இருந்து கற்க வேண்டும் என்றனர். இது மாணவன் கொள்ளவேண்டிய ஆழ்ந்த கவனத்தை வலியுறுத்துவது.

---

1. நன் : 40 : 5
2. குறள் : 420
3. நன். : 40 : 6

இந்த ஆர்வமும், ஆழ்ந்த கவனமும் கல்வி முறையினின்றும் பிரித்துக் காணத்தக்கன அல்ல. இவை போன்று விதிக்கப்படும் இலக்கண விதிகளுக்கெல்லாம் அந்தக்கால மாணவன் மட்டு மல்லன், இந்தக் கால மாணவனும் இலக்காக வேண்டியவனே. மாணவன் மட்டுமல்லன், கற்பிக்கும் ஆசிரியரும் இவற்றிற்குத் துணையாக வேண்டியவர். ஆசிரியரது இயல்பு இவற்றிற்குப் பெரும்பகுதி ஈடுகொடுத்து நிற்க வேண்டும். முற்காலத்து ஆசிரியர் உலகம் ஈடுகொடுத்ததைப் பண்டைய நூல்களிலிருந்து காண்கின்றோம். இதன் தொடர்பில் ஆசிரியர் வரலாற்றைக் காண்பது பயனுடையதாகும்.

**ஆசிரியச் சொற்கள்:**

கற்பிப்போரைக் குறிக்க எழுந்த சொற்கள் ஆசிரியரது வரலாற்றைப் பேசுகின்றன:

ஆசான்,
ஆசிரியன்,
கணக்காயன் -என்பன முற்காலச் சொற்கள்.

உவாத்தியாயன்,
குரு,
தேசிகன்-என்பன இடைக்காலத்தில் புகுந்த வட சொற்கள்
ஓசன்,
பணிக்கன்-என்பன இடைக்காலத்தை அடுத்த பிற்காலச் சொற்கள்.

இச்சொற்களைப் பிளந்துகொண்டு உள்ளே புகுந்தால் ஆசிரியரது வரலாற்று அடையாளங்கள் காட்சியளிப்பதைக் காணலாம்.

**ஆசான்**

'ஆசு' என்னும் சொல் பல பொருள் கொண்டது. பற்றுக் கோடு, நுட்பம், குற்றம் என்னும் மூன்று பொருள்கள் இங்கு தொடர்புக்கு உரியன.

ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியைத் தமக்குப்

'பற்றுக் கோடானவன்' என்று குறித்தார். "ஆசு ஆகு எந்தை"[4] என்பது அவரது பாட்டு. இதில் 'ஆசு' என்னும் சொல் பற்றுக்கோடு, என்னும் பொருளைக் காட்டுகின்றது.

கல்வி அறிவிற்கும், வாழ்வியற் கருத்திற்கும் பற்றுக்கோடு ஆனவன் என்னும் பொருளில் ஆசு + ஆன் = ஆசான் ஆனான். ஓர் உலோகத்துடன் மற்றொரு உலோகத்தைப் பற்ற வைக்க பொருத்த, இடையே நிற்கும் உலோகத் தூள் 'ஆசு' - 'பற்றாசு' எனப்படும். இதுபோன்று கல்வியோடு மாணவரது உள்ளத்தைப் பற்றவைத்து அறிவொளி தருபவர் என்னும் கருத்திலும் 'ஆசான் என்னும் சொல் எழுந்தது. உலோகங்களை இணைக்க இடையில் நிற்கும் பற்றாசு தன் நலம் என்பதைக் கருதாது நிற்கும். அது போன்றே ஆசானும் தன் இன்பம் வேண்டாதவனாக இருக்க வேண்டும் என்பதை,

"ஆண் ஆக்கம் (இன்பப்புணர்ச்சி) வேண்டாதான் ஆசான்' என்னும் சிறுபஞ்சமூலப் பாடல் [5] நினைவுறுத்துகின்றது.

ஆசான் கல்வி கேள்விகளிற் சிறந்தவன் என்பது மட்டுமன்று, இரண்டிற்கும் உரிமை படைத்தவன். "கேள்வியிற் கிளந்த ஆசான் உரையும்" என்னும் பரிபாடல் [6] அடி 'கேள்விஅறிவை வழங்குவதற்கு உரிமை படைத்தவனாக எடுத்துமொழியப் படுவன்' எனக் காட்டுகின்றது.

தண்டமிழ்ஆசான் சாத்தன்,
மதுரை வேளாசான் - என்னும் புலவர்களது புலமையும் அறிவு நுணுக்கமும், அறிவுத் திறனும் 'ஆசான்' என்னும் சொற் பொருளுக்குப் பெருமைசான்ற இலக்கியங்களாகின்றன. நுணுக்கமானவன் என்னும் கருத்திலும் ஆசான் பெயர் வழங்கப் பட்டுள்ளது.

அரசனுக்குக் கருத்துரை வழங்கும் குழு அரசியலுக்குப்

---

4. புறம் : 235 : 16
5. சிறுபஞ் : 29 : 1
6. பரி : 2 61

பற்றுக்கோடாகத் திகழ்ந்தது. அந்த ஐம்பெருங்குழுவில் ஒருவன் ஆசான். [7]

ஏட்டுக் கல்விக்கு மட்டுமன்றி இசை, கூத்து முதலிய கலை, களுக்கு அறிவுத் தந்தையாக ஆசான் விளங்கினான் என்பதை, ''ஆடற்கமைந்த ஆசான்'', ''தலைக்கோலாசான்'' [8] என்னும் சிலம்புத் தொடர்கள் காட்டுகின்றன.

**ஆசிரியன்**

'ஆசிரியன்' என்னும் சொல்லும் 'ஆசு + இரியன்' என இரு சொற்களின் கூட்டு. இங்கு 'ஆசு' என்பது குற்றம் என்னும் பொருள் கொண்டது. ''ஆசு சிறுமையும் குற்றமும் ஆகும்'' என்பது திவாகர நிகண்டு. இரியன் - கலைந்து ஓடச் செய்பவன். மனக் குற்றத்தை - அறியாமைக் கசட்டை, கலைந்து- சிதறி- இரிந்து ஓடச் செய்பவன் என்னும் பொருளில் நிறைந்தவன் ஆசிரியன். கல்வி என்பது அறியாமை என்னும் கசட்டை அறுப்பது அன்றோ? எனவே, கசடு அறுத்துக் கல்வி தருபவன் ஆசிரியன் ஆனான். ''கசடு அறக் கற்க'' என்னும் குறள் [9] தொடரும் இக் கருத்தை வழிமொழிகின்றது.

தொல்காப்பியர் தம் நூலில் ஆசிரியர் என்னும் சொல் லையே கைக்கொண்டார். ''வரைநிலையின்றே ஆசிரியர்க்க'' [10] மற்றும் ''கடிநிலை யின்றே ஆசிரி யர்க்க'' [11] என்னும் நூற்பா அடிகளில் ''வரைநிலை'', ''கடிநிலை'' என நீக்குதல், கடிதல் என்னும் குற்றத் தொடர்புடைய சொற்களை அமைத்து 'ஆசிரியன்' குற்றம் நீக்கும் குறிப்பை வைத்தார்.

ஆசிரியர் குற்றம் நீக்கி நெறிப்படுத்துவதில் தலைமை ஆணையராக விளங்கியவர். பலவகைக் கேள்வித் துறையிலும் நிறைந்தவராக விளங்கி,

---

7. சிலம்பு : 3 : 126
8. ,, : 3 : 25 : 30 : 20
9. குறள் : 391
10. தொல். எழு : 316 : 3
1. ,, ,, : 390 : 3

"நல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்"
—என மதுரைக் காஞ்சியிலும்[12]

பட்டினப் பாலையிலும்[13] நல்லாசிரியர் எனக் குறிக்கப்பட்டார்.

மதுரையாசிரியர் மாறன், ஆசிரியர் நல்லந்துவனார். மதுரை இளம்பால், ஆசிரியன் சேந்தன் கூத்தனார் எனும் புலமைப் பெருமக்கள் ஆசிரியர் அடைமொழி பெற்றமையால் அன்னாரை ஆசிரியத் தொழில் மேற்கொண்டவராகக் கொள்ளலாம்,

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தொல் காப்பியரை யாண்டும் 'ஆசிரியர்' என்றே குறித்துச் சொல்லுவது இலக்கண ஆசிரியர் என்பதை நினைவு படுத்துகின்றது. மேலும் நூலாசிரியன், உரையாசிரியன், ஆடலாசிரியன், பாடலா சிரியன், யாழாசிரியன், சமயவாசிரியன் எனப் பல துறையிலும் அவ்வக் குற்றம் போக்கும் ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர்.

ஆசிரியன் வேறு; ஆசாரியன் வேறு; ஆசாரியன் என்பான் ஒழுக்கத்தை உணர்த்துபவன். அதன் பகுதி ஆசாரம். அஃதாவது ஒழுக்கம். சமண சமய நூல்கள் பஞ்ச பரமேட்டிகள் என ஐவரைக் குறிப்பிடும். அவ்வைவருள் ஆசாரியார். உபாத் தியாயர் என இருவரும் வேறு வேறாய்க் குறிக்கப்படுவதும்[14] இதனைத் தெளிவுபடுத்துவதாகும்.

**கணக்காயன்**

கணக்கு என்றதும் இக்காலத்தில் நம் நினைவில் வருவன எண்களும் அவற்றின் கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக் கலுமே. முற்காலத்தில் 'கணக்கு' என்னும் சொல் நூலை உணர்த்தியது.

"சுற்றறி எழுத்தும் எண்ணும் கணக்கு எனச் சொல்லு நாமம்" என்பது சூடாமணி நிகண்டு[15] தொடக்கத்தில் கணக்கு

---

12. மதுரை : 760, 761
13. பட் : 169, 170
14. சிலம்பு : 10 : 19 அரும்பதம்

என்பது எழுத்தையும் எண்ணையும் குறித்தது. தமிழ் எழுத்து வரிசை 'நெடுங்கணக்கு' எனப்பட்டது. இந்த நெடுங்கணக்கைப் பயில்வது தொடக்கக் கல்வி. இக்கணக்கைக் கற்போர் பலர்கூடிக் குழுவாக - ஆயமாகக் (ஆயம்-கூட்டம்) கற்றனர். இக்கூட்டம் கணக்கு + ஆயம் = கணக்காயம் எனப்பட்டது. கணக்காயத்திற்குக் கற்பிப்போனாக அமைந்த ஆசிரியன் கணக்காயன் எனப்பட்டான்.

> ''கணக்காயர் இல்லாத ஊர் ... ... ... ... ... ... ... ...
> ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... .. ... ... ...
> ... ... ... ... ... ... ... ... ... ... ... .. ... ... ... ... .....
> நன்மை பயத்தல் இல''

- என்னும் திரிகடுகப் பாடல்[16] கணக்காயன் இல்லாத ஊரில் நன்மை விளையாது என்று குறித்தது. இதன் வாயிலாகக் கணக்காயன் ஒவ்வொரு ஊருக்கும் இன்றியமையாதவனாக விளங்கினான் என்பதை உணரலாம்.

கடைச்சங்க நூல்கள், அடி எண்ணிக்கை, அளவு எனும் கணக்குக் கொண்டு தொகுக்கப்பட்டவை. அவை பதினெண்மேல் கணக்கு (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை) எனவும், பதினெண் கீழ்க்கணக்கு எனவும் பெயர் பெற்றன. இவற்றில் 'கணக்கு' என்னும் சொல் நூல் என்னும் பொருள் கொண்டது. எழுத்தையும், எண்ணையும் குறிக்க எழுந்த கணக்கு ஆகுபெயராக நெடுங்கணக்கால் ஆகிய நூலைக் குறிப்பதாயிற்று. எழுத்தையும் எண்ணையும் கற்பித்த கணக்காயர் எழுத்தாம் இலக்கண இலக்கிய நூல்களையும், எண்ணாம் கணித நூல்களையும் கற்பித்தனர்.

''கணக்.காயர் நூலுரைப்போர்'' எனச் சேந்தன் திவாகரம்[17] முதலிய நிகண்டுகள் கணக்காயர் நூலைக் கற்பித்தவர் என்பதைக் காட்டுகின்றன.

---

15. சூடா. : 10 : 31 : 1
16. திரிக : 16 : 1—4
17. சேதியா : 2 : 9

கணக்காயர் தாம் கற்றவற்றை எல்லாம் மனப்பாடம் ஆக்கிக் கொண்டவர். ஏட்டில் எழுதிய பாடச்சுவடியைக் கையில் கொள்வார். நெஞ்சில் எழுதிய நினைவுச் சுவடியையே வாயில்கொள்வர். நினைவே அவர்க்குப் பாடநூல்; "ஆசிரியரே பாடப்புத்தகம்" என அண்ணல் காந்தியடிகளார் ஒருமுறை குறித்தமை இக்கணக்காயர்க்கு மிகப் பொருந்துவதாகும்.

பாடம் என்பதற்கு மூலச் செய்யுள் என்பது அக்காலப் பொருள். "பாடமே ஓதிப் பயன்தெரிதல் தேற்றாத, மூடர்" என்னும் நாலடிப் பாட்டிலும்[18] இப்பொருள் நிற்கின்றது. கருத்தைக் கொள்ளாமல் மூல பாடத்தை மட்டும் மனப்பாடம் செய்த மூடரைச் சாடும் அந்நாலடியார்,

"கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதையார் சூத்திரம்"[19]

என்று கூறி கணக்காயர் மூல பாடத்தை உணர்த்தியதை அறிவிக்கின்றது.

'கணக்காயன்' என்னும் சொல்லினது பொருள் வளர்ச்சி கணக்கு-ஆயன்-நூல்களை ஆராய்ந்தவன் என்னும் பொருளுக்கு வந்தது. பெரும்புலவர் நக்கீரனாரது தந்தையார் "மதுரைக் கணக்காயர்" எனப்பட்டவர். இவர் மதுரையில் ஈடு இணையற்ற நூல்கற்பிப்பாராக - கணக்காயராக இருந்து 'மதுரைக் கணக்காயர்' என்றாலே இவரைச் சுட்டுவதாகி அச்சிறப்புச் சுட்டாம் 'கணக்காயரே' இவரது இயற்பெயர்போல் வழங்கப் பட்டது எனலாம்.

இவர் போன்றவரே கூரைக் கணக்காயர் என்பவர், கணக்காயனார் தத்தனார் என்றொரு புலவர் விளங்கினார். இவர் கணக்காயனார் என்பதை அடைமொழியாகப் பெற்றவர். இவர்களது பெரும்புலமையை எண்ணுங்கால் கணக்காயர், நூல்களை ஆராய்ந்த பெரும் ஆசிரியர்களாக விளங்கியிருக்கலாம் என உணர்கின்றோம்.

---

18. நாலடி : 316 : 1,2
19. ” : 314 : 1, 2

## உபாத்தியாயன், குரு, தேசிகன்

இம்மூன்று சொற்களும் வட சொற்கள். ஆசிரியன் என்னும் கருத்தில் தமிழில் புகுத்தப்பட்ட சொற்கள். ஆனால், இச்சொற்கள் விரிக்கும் பொருள்கள் ஆசிரியன் என்பதற்கு நேரானவை அல்ல. இவற்றில் முதலில் புகுந்தது 'உபாத்தியாயன்' என்னும் சொல். அஃது உவாத்தியான் என மருவித் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் காலத்தாற் பிற்பட்ட ஆசாரக் கோவையின்

> "அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
> நிகரில் குரவர்இவர் ஐவர்"[20]

-என்னும் பாடலில் முதன் முதலாக இச்சொல் அறிமுகமாகின்றது.

அத்தியயநம் என்பதற்கு வேதத்தை - மறையை ஓதுதல் என்று பொருள். உப என்பதை வடமொழி இலக்கணம் உபசருக்கம் அஃதாவது அடைமொழி என்று குறிக்கும். அதற்கு இங்கே 'துணை' என்றுபொருள். எனவே, உப அத்தியயநன் - உப அத்தியாயன், உபாத்தியாயன். மறையை ஓதத் துணைபுரிபவன் என்னும் பொருளைக் கொண்டது. மறையை ஓதுவிப்பவனைக் குறிப்பதே இச்சொல் என்பதை மணிமேகலை விளக்குகின்றது.

> "ஆரண (மறை) உவாத்தி அபஞ்சிகன் என்போன்"[21]
> "ஆரண உவாத்தி அரும்பெறல் மனைவியான்"[22]
> "அந்தண உவாத்தியை"[23]

– என்னும் மணிமேகலை அடிகளில் ஆரணம், அந்தணன் என்னும் சொற்கள் நின்று மறை ஓதுவித்தலைக் காட்டிக் கொடுக்கின்றன. உவாத்தி என மரூஉ மொழியாகக் கூனிக் குறுகிக் காட்சியளிப்பதையும் காண்கிறோம்.

---

20. ஆசா. கோ : 16 : 1,2
21. மணி : 13 : 4
22. " : 13 : 79
23. " : 13 : 46

ஊன்பிறங் கொளிரும் வேலான்
ஓர்ந்துதன் உவாத்தி சொல்லால்
தான்புறங் காட்டப் பட்டு'' -எனச் சிந்தாமணி[24]

ஆசிரியனை அரசவை உவாத்தியாகக் கூறியது.

காலப்போக்கில் பல கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியனுக்கும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

''தவாஅக் காதலொடு தகையாழ் காட்டும்
உவாத்தி யாதலின் உறுதியும் அதுவென'' என்னும்
பெருங்கதை[25]

யாழ் ஆசிரியனாக அமைந்த உதயணனை உவாத்தி ஆக்கியது. இவ்வாறாக உபாத்தியாயன் ஆசிரியனை ஒட்டிக் கொண்டது.

குரு என்னும் சொல்லும் ஆசிரியன் என்னும் பொருளில் ஒட்டப்பட்டதாகும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் தொடரில் ஆசிரியருக்காகக் 'குரு' நிற்பதைக் காணலாம். அப் பொருளில் இடைக்கால இலக்கியங்களில் இடம் பெற்றது.

''குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்'' [26]
என்றும்

''தன்துணைக் குருவை எண்ணி'' என்றும் கம்பர் பாடுகின்றார். இங்கெல்லாம் அரசவை ஆசிரியன் என்னும் கருத்தில் குரு' என்னும் சொல் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால், குரு என்னும் சொல்லினது மூலத்தோற்றம் எவ்வகையிலும் ஆசிரியரை ஒட்டும் நிலையிலும் இல்லை.

'சம்வருணன்' என்றொரு அரசன். அவனது மகன் பெயர் 'குரு', அவன் பெயரால் 'சமந்தபஞ்சகம்' என்னும் நகர் 'குருச் சேத்திரம்' எனப் பெயர்பெற்றது. இவனது வழியினர் 'குருகுலத் தார்' எனப்பட்டனர். 'குரு' என்னும் மன்னன் அறிவுத்

---

24. சிவ. சிந் : 1090 : 1,2
25. பெருங் : 1 : 44 :131
26. கம்ப இரா : 1 : 7 : 16 : 1

திறமையில் விளங்கிய கரணியத்தாலோ, குருச்சேத்திரத்தில் துரோணர் அமைந்து போர்க்கலையைப் போதித்த கரணியத்தாலோ அரசவையில் கருத்துரை நல்கும் தலைமைத் தன்மையில் அமைந்த கரணியத்தாலோ 'குரு' என்னும் சொல் ஆசிரியரைக் குறிப்பதாயிற்று. அதனால் குருச்சேத்திரம், அதனைச் சமைத்த தேவர்க்கு ஆசிரியத்தானமாகச் சிறப்பிக்கப்பட்டது.

'குரு' என்ற சொல்லுக்குத் தனிப் பொருளாக 'ஒளி' அமைந்தது. அறிவொளி பெற்றுச் சிறந்தவர் என்னும் கருத்தில் குரு ஆசிரியப் பொருளைப் பெற்றிருக்கலாம். ஆனாலும், அச்சொல் ஆசிரியருக்குரிய ஆழ்ந்த பொருட்சிறப்பைக் கொண்டது அன்று என்பது உறுதியான உண்மை. அதனாற்றான் ஆசிரியருக்குரிய சொற்களைப் பட்டியலிடும் சூடாமணி நிகண்டு,

> "... ...... ... ... .. ... ... ... ... ... ... ஆசான்
> ஊன்றுதே சிகனே ஓசன் உபாத்தியாயன் பணிக்கன்
> என்றஆசிரியன்பேர் [27]

என்று சொற்களைக் கூறிக் 'குரு' என்னும் சொல்லை அப்பட்டியலில் காட்டவில்லை. பிங்கல நிகண்டு வியாழனைச் 'சுரகுரு' என்று குறித்தாலும் 'ஆசான்' என்ற சொல்லையும் அமைக்கின்றது. சூடாமணி நிகண்டு 'குரு' என்னும் சொல்லை வியாழனுக்கமைக்காது 'ஆசிரியன்' என்ற சொல்லையே காட்டியது.

இவற்றையெல்லாம் ஒன்றுகூட்டி நோக்குங்கால் 'குரு' என்னும் சொல், ஆசிரியப் பொருளைக் கொண்டதாகத் தோற்றம் பெறவில்லை என்பதை உணரலாம்.

## தேசிகன்

'தேசு' என்றால் 'ஒளி' அழகு' என்னும் பொருள்களைக் கொண்டது. இவ் வடிப்படையிலேயே ஆசிரியப் பொருளை ஒட்டி வழங்கப்பட்டது. "தேசிகர்ப் பிழைத்து வேறோர் நினக்கிதன் நாடி நின்றாய்" [28] என்னும் கம்பராமாயணப் பாடல் ஆசிரியனைத் தேசிகனாகப் பேசியது.

---

27. சூடா. : 2 7 : 2 : 4

28. கம்ப. இரா : 1 : 11 109 : 3,4

இம்மூன்று சொற்களும் மற்றொருவகை ஒற்றுமையால் கற்பிக்கும் ஆசிரியன் என்னும் பொருளினின்றும் பிரிந்து அதற்கென ஓர் அடையாளமும் பெற்றுள்ளன.

'உபாத்தியாயன், மறையை ஓதுவிக்கும் அந்தணன் எனக் கண்டோம். 'குரு' என்பது குருக்கள் ஆகிக் கோயிற் பூசை செய்வோரைக் குறிப்பதாயிற்று. தேசிகன்- தேசிகர் என்பார் ஓதுபவராகவும் கரணங்களைச் செய்விப்போராகவும் அமைந்தனர். இவ்வாறு மூவரும் இரு பிறப்பாளராகப் பூணூல் அணிபவராக ஆசிரியரினின்றும் பிரிந்து நிற்கின்றனர்.

**ஓசன் பணிக்கன்**

இவை இரண்டும் தமிழ்ச் சொற்களேயாயினும் திசைச் சொற்களாகக் கொடுந்தமிழ் நாட்டிலிருந்து வந்து சேர்ந்தவை

ஓசு, ஓசம் என்னும் சொற்கள் பேரொளி, புகழ் என்னும் பொருள்களைக் கொண்டவை. ஓசு + அன் = ஓசன் ஆகி அறிவில் பேரொளியுடையவன்-புகழுடையவன் என்றும் சிறப்பில் ஆசிரியனைப் போலத் திகழ்ந்தவனைக் குறித்தது. ஆயினும், காளி கோயிற் பூசாரிக்கும் அப்பெயர் அமைந்ததை நோக்கும்போது இச்சொல்லும் முழுமையாக ஆசிரியனுக்குரிய பொருட்சிறப்பைப் பெற்றதாகக் கொள்ள இயலவில்லை.

'பணிக்கம்' என்பதற்குத் 'திருத்தம்,' என்றொரு பொருள்.[29] தவறுகளைத் திருத்திச் செம்மை செய்பவன் என்னும் கருத்தில் இச்சொல் ஆசிரியனைக் குறிப்பதாயிற்று. கல்வி அறிவால்-கற்பிக்கும் திறத்தால் பணிய வைப்பவன் என்னும் கருத்திலும் ஆசிரியனை அணுகியிருக்கலாம். இச்சொல் மலைஞாலத்தில் இப்பொருட் குறிப்பில் வழங்கப்படினும் அங்கும் ஒரு காலத்தில் கோயிற் பூசாரிக்கு வழங்கப்பட்டது. கூத்துக்கலையைப் பயிற்றுபவனுக்கும், படைக்கலம்பயிற்றுபவனுக்கும் 'பணிக்கன்' என்னும் சொல் வழங்கப்பட்டது.

---

29. தமிழ் அகராதி : 1 பங். 2458 (லெக்சிகன்)

'பண்புடையான் ஒரு பணிக்கன் தோன்றி' என்னும் திருவாலவாய்ப் புராண[30] அடியில் படைக்கல ஆசிரியனாகப் பணிக்கன் நிற்கின்றான்.

மேலே விளக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்கள் மூன்றும், வட சொற்கள் மூன்றும், திசைச் சொற்கள் இரண்டும் கற்பிக்கும் பணியைக் கொண்டோரது தகுதியையும் திறமையையும், வெளிப் படையாகவும் குறிப்பாகவும் அடையாளங் காட்டின.

**வழக்காறு**

இச்சொற்கள் நாட்டு மக்களிடையே கொண்ட வழக்காற்றை நோக்கினால் மக்களிடையே கற்பிப்போருக்கு அமைந்த பெருமையையும், நேர்ந்த சிறுமையையும் அறியலாம்.

'ஆசான்' என்னும் சொல் எழுத்து வழக்கில் அமைந்தது போன்று பேச்சு வழக்கில் இடம் பெறவில்லை. எழுத்து வழக்கில் அவரது நிறைந்த பெருமையைக் காட்டுகின்றது. அதற்கு மேலும் ஒரு படி உயர்ந்து தெய்வம்போன்ற பெருமையைக் காட்டுகின்றது. ஐம்பெருங்குழுவில் ஒருவனாக அமைந்த ஆசானை, மன்னவனைச் சூழலறிந்து நெறிப்படுத்தும் பெரும் பீடத்தைப் பெற்றவனாகக் காண்கின்றோம். வட நாட்டரசர் இகழ்ந்தனர் எனச் சினம்பொங்கிச் சீறி வஞ்சினம் கூறும் சேரன் செங்குட்டுவன் அவையில் மாடலமறையோன் எழுந்து,

> சோழ பாண்டியரை வடவர் இகழ்ந்தனரே அன்றி,
> 'இமய வரம்ப! நின் இகழ்ந்தோர் அல்லர்
> அமைகநின் சினமென ஆசான் கூற'[31]

மன்னன் அமைதி கொண்டதைக் காட்டுகின்றது சிலம்பு. அரசியலில் அத்துணைப் பெருமைத் தகுதி இருந்ததை 'ஆசான்' குறிக்கின்றது. இஃது இயற்றமிழில் பெருமை.

இசைத்தமிழில் காந்தாரம் என்னும் தலைமைத் தன்மை வாய்ந்த பண்ணிற்கு 'ஆசான்திறம்'[32] என்பது சிறப்புப் பெயர்

---

30. திருவால : 35 : 1
31. சிலம்பு 26 : 23, 24
32. ,, 13 : 112 அரும்பதம்

இது சிறப்பு ஆசான் என்னும் சொல்லால் குறிக்கப்பட்டது. கூத்துத் தமிழிலும் 'ஆடற்கு அமைந்த ஆசான்'[33] பெருமை பெற்றவன்.

எனவே, ஆசான் என்னும் சொல் முத்தமிழ் ஏட்டிலும் பொன்னெழுத்துக்களால் ஒலிவிடுகின்றது. ஆசானையும் பொன்னொளிப் புகழில் நிறுத்தியுள்ளது.

யோகம் எட்டுவகைப்படும். அவற்றுள் நியமம் இரண்டாவது. இது ஐந்தாக விரியும். இவற்றுள் 'ஐந்தாவது ஆசார்க்கு, அளித்தல்.'[34] கற்பித்த ஆசானுக்குக் காணிக்கை வழங்குதல் ஒரு யோகமாகவே அமைந்தது. இவ்வகையில் ஆசான் யோகச் சிறப்பையும் பெறுகிறான்.

ஆனால், பேச்சு வழக்கில் இச்சொல் பெருமளவில் இடம் பெறவில்லை. அருகி வழங்கப்படும்போது அவரது பெருமைக்குக் கட்டளைக் கல்லாக நின்றது; நிற்கின்றது.

அடுத்துக் கணக்காயர் என்னும் சொல் பழங்கால நூல்கள் சிலவற்றில் கற்பிப்பாரது பெருமையைப் பேணிக் காத்தது. எவ்வகையிலும் அவரது பெருமையில் தொய்வை ஏற்படுத்தவில்லை. ஆனால், தற்கால வழக்கில் இச்சொல் கற்பிப்போரை உணர்த்தாமல் வரவு செலவுக்கணக்கை ஆராய்ந்து பார்ப்பவரை - கணக்குத் தணிக்கையாளரை நினைவுபடுத்தும் நிலைக்கு வந்துள்ளது. கல்வி கற்பிப்போரைக் குறிக்கும் வழக்கில் அறவே இல்லை. அதே நேரத்தில் அவரைக் குறைக்கும் நிலையை எவ்வகையிலும் ஏற்படுத்தாதற்கு அச்சொற்கு நன்றி கூற வேண்டும்.

'குரு' என்னும் வடசொல் கல்வி கற்பிப்போரைக் குறிக்கும் நோக்கில் எழவில்லை என்பதைக் கண்டோம். ஆனால். அச்சொல் கற்பிப்போருக்கு வழங்கியுள்ள பெருமை மிகச் சிறப்பாகக் குறிக்கத் தக்கதாகும். 'மாதா, பிதா, குரு, தெய்வம்' என அவரைத் தெய்வத்திற்கு அடுத்த நிலையில் உயர்த்தியது

33. சிலம்பு 3 3 : 25

34. தொல். பொருள் : 75 நச்சர் மேற்கோள்

தந்தைக்கு ஆசானாகப் பதிப்போடு உணர்த்தாமையால்[35] 'குரு நாதன்' என முருகக் கடவுளை ஒட்டியது.

'குருகுலம்' என்னும் சொல்லமைப்பு குறிக்கத்தக்க கருத்தைக் கொண்டது. இத்தொடர் 'குரு' என்னும் அரசனது குலத்தாரைக் குறிப்பதோடு கற்பிப்போர் உடன் உறைந்து பயிலும் கல்வி நிலை அமைப்பையும் குறிப்பதாயிற்று அதற்கு மேலும் ஒருபடி உயர்ந்து நின்றது.

'தேவகுலம்' என்னும் சொல்லமைப்பு விரிந்தால் தேவரது கூட்டம் எனப் பொருள்படும். இச்சொல்லமைப்பிற்குத் தெய்வக் கோயில் என்றொரு சிறப்புப் பொருளும் உண்டு.

'ஊரான் ஓர் தேவ குலம்' என்ற இலக்கிய வழக்கும்,

''பாழ்மனையும் தேவ குலமும் சுடுகாடும்''[36] என்னும் ஆசாரக் கோவையும் பிற பல பாடல்களும் தெய்வக் கோவிலைத் தேவ குலம் எனக் காட்டுகின்றன. இவற்றில் 'குலம்' என்பது 'கோவில்' என்னும் பொருளைக் கொண்டது. இது போன்றே 'குருகுலம்' என்பதில் உள்ள 'குலம்' என்னும் சொல்லும் கோவில் என்னும் பொருளில் நிற்பதாகும். குருவினது இல்லம் கோவிலாகக் கொள்ளப்பட்ட பெருமையைக் காண்கின்றோம். எழுத்தறிவித்தவன் இறைவன் அன்றோ? அந்த இறைவன் இல்லம் கோவிலாவதில் வியப்பில்லை. குரு இல்லம் கோவிலாக இருந்ததை எண்ணிய பாரதி மீண்டும் அந்நிலையைக் காணும் விருப்பத்தில் ''பள்ளித் தலமனைத்தும் கோவில் செய்குவோம்''[37] என்று பாடினான் போலும்.

இத்துணைப் பெருமை தந்த 'குரு' என்னும் சொல் நாட்டு வழக்கிலும் ஓரளவில் அப்பெருமையை விளக்கியது. மிகச் சிலரது வாய் வழக்கில் நிற்கின்றது. ஆனால், பெருவழக்காகக் குருக்கள் எனப் பரவி இந்து சமயக் கோவிற் பூசை செய்வோ

35. காந்த : 71

36. ஆசா. கோ : 57 : 1

37. பாரதி பா : த.ப.க.பதிப்பு:

ரையும். கிறித்துவ சமயப் பாதிரியையும் குறிக்கும் அளவில் நின்றுவிட்டதைக் காண்கின்றோம்.

அடுத்து, 'தேசிகன் என்னும் சொல் எழுத்து வழக்கில் தூய்மையையும் ஆன்மீகத்தையும் தலைமையையும் உணர்த்திற்றாயினும் தற்காலத்தில் தேசிகர் என்று வழக்காகி ஓதுவார் என ஓர் இனத்தாரைக் குறிக்கும் அளவில் சுருங்கி நின்று கற்பிப்போரை எவ்வகையிலும் அணுகாது அகன்றுவிட்டது.

திசைச் சொற்களாகிய ஓசன், பணிக்கன் என்னும் இரு சொற்களும் இலக்கிய வழக்கிலும் பிற எழுத்து வழக்கிலும் மிக மிக அருகியனவே. இவையிரண்டுமே கல்வியைத் தருவோருக்குப் பெரும் பெருமையை வழங்கியதாகக் கொள்ள இயலாது. நாட்டு வழக்கில் இவையிரண்டும் அறவே இல்லாதவை. 'ஓசன்' சொல்லுதற்கே சிறப்பான ஒலியில் அமையவில்லை. 'ஓசன்' என்னும் ஆண்பாற் சொல்லுக்குரிய பெண்பாற்சொல் ''ஓசி'' என்பது. ஓர் அகர முதலி ''ஓசி - கல்வி கற்பிப்போனது மனைவி'' என்று பொருள் காட்டியுள்ளது. இவ்வாறு எழுத்தறிவிக்கும் இறைவனது மனைவியை ஓசியாக்கிய ஓசன் என்னும் சொல் பெருமைக்குரிய நிலையைக் காட்டவில்லை. பணிக்கன் என்னும் சொல் மலைஞாலத்திலும் ஓர் இன்னாதாரைக் குறிப்பதாகவே வழக்கில் உள்ளது.

எஞ்சி நிற்பன உபாத்தியாயன் என்னும் வட சொல்லும், ஆசிரியன் என்னும் செந்தமிழ்ச் சொல்லுமாகும்.

இவற்றுள் உபாத்தியான் என்னும் சொல் எழுத்து வழக்கிலேயே உவாத்தியான் என்று மருவிற்று. உவாத்தி என்றும் குறுகிற்று. இச்சொல் வழக்கு உப அத்தியயநன் என்பதிலிருந்து உபாத்தியாயன் ஆகி அது மருவி உபாத்தியாயன் ஆகி அஃதும் உவாத்தியான் ஆகி உவாத்தி ஆக மாறி மேலும் தலையெழுத்து போய் வாத்தியான் ஆகி. அதிலும் ஆண்பால் விகுதி போய்ப் பெண்பால் விகுதி பெற்று 'வாத்தி' என்று முடங்கி இறுதியாக நாட்டுப் பேச்சில்.

"ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோவில் ஆண்டி;
அவனுக்கும் இளைத்தவன் பள்ளிக்கூடத்து வாத்தி"

என்று குறிப்பிடப்படுதல் மிக அவலத்திற்குரியதாகும்.

கற்பிக்கும் பணிபுரிவோர் இல்லாத ஊர் நலம் பயவாது என்று இருந்த பேச்சுப் போய் ஊருக்கு இளைத்தவனிலும் இளைத்தவனாக ஆக்கியது இச்சொல். இன்னும் இடத்திற்கு இடம் கூட்டத்திற்குக் கூட்டம் இச்சொல் அடியாளாய், போக்கிரியாய், தலைமைக் காவலராய், குத்துச் சண்டை நடிகராய் 'வாத்தியாரே' என்று அழைக்கப்படுவதைக் கேட்கும் காது ஆசிரியரை எண்ணி அவலப்படுகின்றது.

எனவே, இறுதியாக எஞ்சி நிற்கும் 'ஆசிரியன்' என்னும் சொல் ஒன்றே எல்லா வழக்கிலும் இன்றும் பெருமை குன்றாத தாகக் கற்பிப்போரைக் காட்டி வருகின்றது.

எனவே, கல்வியை வழங்கும் இறைவனை அவனுக்குரிய தகுதியில் குறிப்பிட விரும்புவோர் 'ஆசிரியன்' என்ற சொல் ஒன்றையே பயன்படுத்தல் ஏற்புடையது என்பது குறிக்கத் தக்கது.

'ஆசான்' - வழக்கில் இல்லை. 'கணக்காயன்' - வேறு வழக்காயிற்று. 'குரு' - வட சொல் 'தேசிகன்' - இனக்குறியாயிற்று. 'ஓசன்' - ஓதிச் சொல் பணிக்கன்' - பழக்கத்திலில்லை. 'உவாத்தியாயன், வாத்தியார், வாத்தி' - இழிவழக்காயிற்று. தனித்த சிறப்புடன் வழங்கப்பட வேண்டியது 'ஆசிரியர்.'

கல்வியைக் கற்பிக்கும் பணியை மேற்கொண்டுள்ள சான்றோரை 'ஆசிரியர்' என்னும் தனித்தன்மை வாய்ந்த சொல்லாலேயே குறிப்பிடவேண்டும்.

அது கல்விக்குத் தரும் தனிப்பெருமையும் நன்றிக் கடனுமாகும்.

**உலக முக்கூறில் ஒருவர்**

ஒரு பெரியவர் அளவில் அடங்காத துலாக்கோல் ஒன்றைப் பிடித்துப் பார்த்துக் கொண்டுள்ளார். இரண்டு தட்டுகளும் சமன் செய்து நிற்கின்றன. ஒரு தட்டில் இந்த உலகத்தை வைக்கின்றார். அதற்கு ஈடாகும் சிறப்புடைய பொருளை மற்றொரு தட்டில் வைத்து உலகத்திற்குச் சமமாக்கிப் பார்க்க விரும்புகிறார். சமப்பொருள் குணத்தன்மையால், செயல் தூய்மையால் நடைமுறைச் சீரால் நிறையவேண்டும் என்பது அவர் அவா. தலில் குணத் தன்மையுடைய ஒருவனைத் தேர்ந்தெடுக்கிறார். தட்டில் வைக்கிறார். அவன் விருந்தினன். அறுசுவைக்காகச் செல்லும் விருந்தினன் அல்லன். என்றோ புதிதாக விருந்தினன் ஆகுபவன். அவன் தன்மை, விருந்து படைப்போனது இயல்பையும் இயலாமையையும் அறியும் குணத்தன்மை. அவனை வைத்ததும், உலகத்தட்டு மூன்றில் ஒருபங்கு உயர்கிறது. அடுத்துச்செயல் தூய்மையுடைய ஒருவனைத் தேர்ந்தெடுக்கிறார். அதே தட்டில் வைக்கின்றார். அவன் உயிர்க்கொலையைத் தடுக்கும் தூய பணியினன் உலகத்தட்டு அடுத்த மூன்றில் ஒரு பங்கு உயர்கின்றது, மூன்றாவதும் இறுதியானதுமாக நடைமுறைச் சீருடைய ஒழுக்கமுடையானைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறார். ஆழ்ந்து தேடுகிறார். ஒருவன் கிடைக்கிறான். அவனைச் சுண்டிப்பார்க்கிறார். தட்டில் வைக்கின்றார். அவன் ஆசிரியன். உலகத்தட்டு கியர்ந்து சமநிலை பெறுகின்றது.

பனை ஏட்டை எடுக்கின்றார்;
எழுத்தாணியைப் பதம் பார்க்கின்றார்;
பொன்னெழுத்துக்களைத் தீட்டுகின்றார்;

“ஒல்வது அறியும் விருந்தினனும்: ஆருயிரைக்
கொல்வது இடைநீக்கி வாழ்வானும்;-வல்லிதின்
சீலம் இனிதுடைய ஆசானும்;இம்மூவர்
ஞாலம் எனப்படு வார்”[38]

- என்னும் பாடலைத் திரிகடுகத்தில்

இணைக்கிறார். இணைக்குபோதே அவர் நெஞ்சம் நிறைவால் விம்ம, முகம் செந்தாமரையாகின்றது. அவர் நல்ல அறிவின் சின்னம். அவர் பெயர் நல்ல ஆதன் (ஆதன் = அறிவு படைத்த வன்) ஆசிரியர் நல்லாதனார்.

உலகத்து மூன்றில் ஒரு பங்கில் இந்த ஆசிரியர்க்கும் ஆசிரியத் தன்மை நிறைந்த அனைவருக்கும் இடம் உண்டு. வாழ்க ஆசிரியர்.

6

# பட்டிமன்றம் என்றால் ......

''பட்டி மண்டபமா? பட்டி மன்றமா?

- என்பது இன்றைக்கு மக்கள் முன்னுள்ள ஒரு வினா''

இவ்வினாவிற்குத் தமிழ் இலக்கண இலக்கியங்கள் சிதறி நின்று விடை பேசுகின்றன. கூர்ந்து கண்டு சிதறலை ஒன்று கூட்டிக் காணலாம்; காண்போம்.

பட்டி அரங்கம்
பட்டி மன்றம்
பட்டி மண்டபம்

- இவை மூன்றும் சொற்போர் நிகழ்ச்சியைக் குறிக்க வழங்கப்படும் பெயர்கள். மூன்றில் எது பொருந்தும்? மூன்றும் வெவ்வேறு பொருளைக் கொண்டவை. ஆயினும், ஒன்றிற் கொன்றுத் தொடர்புடையன.

**அரங்கம்**

அரங்கு என்பது உயரமான களம். அஃதாவது மேடை, சிலப்பதிகார 'அரங்கேற்று' காதையில் நாட்டிய அரங்குக்கு நீளம், அகலம், உயரம் கூறப்பட்டுள்ளன. இதுகொண்டும் மேடை என அறியலாம். பிங்கல நிகண்டு நாட்டியமாடும் களத்தையும் சூதாடும் களத்தையும் 'அரங்கம்' என்கின்றது.[1] சூடாமணி நிகண்டுப் போர்ப்பயிற்சிக் களத்தையும் சேர்த்துக் கூறுகின்றது.[2] சேந்தன் திவாகரம் என்னும் பழைய நிகண்டு, இவற்றுடன் புலவர் கூடும் அவைக்களத்தையும் சேர்த்து,

---

1. பிங் - 662
2. சூடா. - இடம் : 53 : 1

''போரின் இடமும் வட்டாடு இடமும்
ஆடல் இடமும் அவையும் அரங்கம்''[3] என்கின்றது.

நிகண்டுகள் வழங்கும் இக்கருத்துகளுக்கு ஏற்ப இலக்கியங்களும் பேசுகின்றன.

வடநாட்டுப் பயணத்தினின்றும் வென்று மீண்ட சேரன் செங்குட்டுவன் தன் சேரமாதேவியுடன் கொலு வீற்றிருந்ததை,

''அணிமணி அரங்கம்
வீங்குநீர் ஞாலம் ஆள்வோன் ஏறி''[4]

என்கின்றது. சிலப்பதிகாரம். இதனில் ஆட்சிக் களம் அரங்கமாகக் கூறப்படுகின்றது. இவ்வடியில் 'ஏறி' என்னும் சொல்லும் உயரமான மேடை என்பதைச் சொல்லி நிற்கின்றது. இவ்வரச மேடை பொன் தகடுகளால் ஒப்பனை செய்யப்பட்டுப் ''பொன் புனை அரங்கம்'' எனப்பெற்றது.

''பாடுவார் பாணிச் சீரும்
ஆடுவார் அரங்கத் தாளமும்''[5] என்னும்

பரிபாடலிலும் ''அவைபுகழ் அரங்கின்மேல் ஆடுவாள்''[6] என்னும் கலித்தொகையிலும், நாட்டியக் களத்தை அரங்கமாகக் காண்கின்றோம். சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை என்னும் காதைப் பெயரும்,

''ஆடல் புணர்க்கும் அரங்கு இயல் மகளிர்''[7] என்னும் மணிமேகலை அடியும் நாட்டியக் களத்தை அரங்கமாகக் குறிக்கின்றது.

புது நூல் ஒன்றைப் படைக்கும் புலவன், அவை மேடையில் அமர்ந்து நூலைப் படித்து விளக்கங் கூறுவான். சான்றோர் அதனை ஏற்றுக்கொள்வர். அஃது 'அரங்கேற்றம்' எனப் பெற்றது. இது புலமை அரங்கம்.

---

3. சேந். திவா - இடம் : 163
4. சிலம்பு - 23 : 65,66
5. பரி - 8 : 109
6. கலி - 79 : 4
7. மணி 1 - 7 : 44

சூது - வட்டு ஆடும் களத்தை
அரங்கமாக,
''அரங்கின்றி வட்டு ஆடியற்றே''[8]
- என்று திருக்குறளும்,
''கட்டளை அன்ன வட்டு
அரங்கு அமைத்துக்
கல்லாச் சிறுவர்
நெல்லிவட்டு ஆடும்''[9]
- என்று நற்றிணையும்,
''அரங்கினுள் வட்டுக்
காரையிருந்தார்க் கெளிய போர்''[10]

- என்று பழமொழி நானூறும் பகர்கின்றன.

**நம்மாழ்வார்**

''அரங்கின் மல்லரைக் கொன்று''[11]

- என்று பாடி மற்போர்க் களத்தை 'அரங்கு' எனக் காட்டு, கின்றார். ஆற்றின் நடுவே மணல்மேடு இடப்பட்ட மேடைத் திட்டு ஆற்றிடைக்குறை ஆகும்.

''அரங்கமும், ஆற்றிடைக்குறையென அறைவர்''-என்பதே சேந்தன் திவாகரம்''[12]. காவிரியின் இடையே மேடிட்டத் திட்டு 'திருவரங்கம்' என்னும் ஊராகியது. சிலப்பதிகாரம் இதனை ''ஆற்றல் அரங்கம்'' என்கின்றது''[13] இவற்றால் மேடான திட்டையும் அரங்கமாகக் காண்கின்றோம்.

இவைமட்டும் அன்றி, அடுப்புப் புடை என வழங்கப்படும் அடுப்பு மேடையும் அரங்கம் என்பதை,

''தீயில் அடுப்பின் அரங்கம் போல''[14]

---

8. குறள் - 401
9. நற் : 3, 3, 4
10. பழ - 177-3,4
11. நாலா.தி. பிர- 2887 - 2
12. சேந். திவா - இடம் - 60 : 2
13. சிலம்பு - 10 - 156
14. அகம் - 137 - 11

- என அகநானூறு பாடி 'அரங்கம்' என்பது மேடான இடம். மேடை என்பதற்கு முத்திரை இடுகின்றது.
எனவே,

ஆட்சி மேடை, புலமை மேடை, நாட்டிய மேடை, சூதாடும் மேடை, போர்ப்பயிற்சி மேடை, மணல் மேடை, அடுப்பு மேடை எனும் மேடான களம் 'அரங்கம்' எனப்பெற்றதை அறியலாம்.

**மன்றம்**

ஊர் மக்கள் வழக்குகளை உசாவித் தீர்க்கவும், பொது நலன்களைப் பேசி முடிவெடுக்கவும் பரந்த நிழல் தரும் ஆல மரத்து அடியில் ஊர்ப்பெரியோர் கூடுவர். திருமுருகாற்றுப் படையில் "மன்றமும்" என்பதற்குப் பொருள் விரித்த நச்சினார்க்கினியர்.

"ஊருக்கு நடுவே எல்லாரும்
இருக்கும் மரத்தடி" என்றார்.[15]

எனவே, மரத்தடியில் கூடும் ஊர்ப்பொது அவை, 'மன்றம்' எனப்பெற்றது.

"பொதியில், மன்றம், பொது, சபை, அம்பலம்" - என்று பிங்கல நிகண்டும்[16] பிற நிகண்டுகளும் பேசுகின்றன.

"மன்றில் பழிப்பார் தொடர்பு" - எனத் திருக்குறளும்[17] மற்றும் பல இலக்கியங்களும் பகர்கின்றன. அம்மரத்தடியில் மாடுகள் கட்டப்படுவதால் மாடு கட்டும் இடமும் 'மன்றம்' எனப் பெற்றது. 'மன்றம்' என்றாலே பொது இடம் என்னும் பொருள் கொண்டதாயிற்று. பொதுஇடத்தில் வளர்ந்த ஊர்க்குப் பொதுவான மரங்களும், "மன்றப் பலவ" "மன்றப் பெண்ணை", மன்றப் புன்னை" என 'மன்று' என்னும் சொல் கொண்டு குறிக்கப்பெற்றன.

இவ்வாறு மன்றம் மாடுகள் உறையும் இடமாயினும், பொது நலம் பேசுவதற்குக் கூடுகின்ற அவையாயினும் சிறப்பாக வழக்கைத் தீர்க்கும் இடமாக அமைந்தது. இதனால், 'மன்று'

15. முருகு - 226 உரை
16. பிங் - 651
17. குறள் - 820

என்பது ஆகுபெயராய் 'வழக்கு' என்னும் பொருள் தருவதாயிற்று.

பிற்காலத்து அவ்வையாரும், வழக்காடு மன்றத்தில் வழக்காடிப் பிறர் பொருள் பறிப்பதைக் கடிந்து,

''மன்று பறித்து உண்ணேல்''[18]

என்றார். வழக்கு மன்றில் ஒரு சார்பாகத் தீர்ப்பளிப்பவனுடைய மனை பாழாகும் என்பதை,

''மன்று ஓரம் சொன்னார் மனை''[19] என்றார்.

பெரிய புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் திருமணத்தில் புகுந்து வம்பு வழக்குச் செய்த சிவபெருமானைச் சேக்கிழார் ''பழைய மன்றாடி போலும் இவன்''[20] என்று கூற வைத்தார்.

ஆலமரத்தின் அடியிடமாக இருந்த மன்றம் கட்டட வளர்ச்சியில் கூடத்திற்கு வந்தது.

எனவே,

மன்றம் என்பது வழக்கைத் தீர்க்கும் சான்றோரும் பொது மக்களும் அவையாகக் கூடும் கூடத்தைக் குறிப்பதாயிற்று.

**மண்டபம்**

'மண்டபம்' என்பது கட்டி எழுப்பப்பட்டக் கட்டடத்தைக் குறிக்கும். பண்டைக்கால மண்டபம் எளிய கட்டடம் அன்று. எழிலோடும் மெருகோடும் இயற்றப்பட்டது. தோற்றப் பொலிவும் ஏற்றத் திறனும் கொண்டது. பொன்னால் புனையப்பட்ட மண்டபம்'' தமனிய மண்டபம்'' எனப்பெற்றது. மணியால் அணி பெற்ற மண்டபம் ''மணிமண்டபம்'' எனப்பெற்றது. பளிங்கு பாவப்பட்ட மண்டபம் ''பளிங்கு மண்டபம்'' எனப்பெற்றது.

'மண்டபம்' என்பது கட்டடச் சிறப்பை மட்டும் கொண்டது அன்று. இது கலைகள் தவழும் கவின் பெருங் கலைக்கோவிலாய்த்

---

18. ஆத்தி - 23
19. நல் - 23
20. பெரி. புரா - தடுத்தாட்கொண்ட புராணம் - 48

திகழ்ந்தது. இங்கு ஆட்சிக்கலை அமர்ந்திருக்கும்; புலமைக் கலை பூரிக்கும்: ஓவியக் கலை ஒளி வீசும்; சிற்பக்கலை சிறக்கும். இசை, நாட்டியக் கலைகள் இனிது வளரும். படைக்கால மண்டபத்தின் பாங்குகள் இவை.

இத்தகைய சீர் பெற்ற மண்டபம் அரசன் அரண்மனை களிலும், இறைவனது திருக்கோவில்களிலும், இயற்கைச் சோலை களிலும் எழுப்பப்பட்டது.

அரசன் அமர்ந்து ஆட்சிமுறை செலுத்தும் இடம் 'திரு வோலக்க மண்டபம்' எனபபெற்றது. வட நாட்டிலின்றும் மீண்ட சேரன் செங்குட்டுவன் மகிழுமாறு கூத்தச் சாக்கையன் 'கொடு' கொட்டி என்னும் கூத்தை ஆடினான். ஆடி அவன் நீங்கியதும் மன்னன் ஆட்சி மண்டபத்தில் அமர்ந்தான். இவ் வாட்சி மண்டபம் சிலப்பதிகாரத்தில் ''வேத்தியல் மண்டபம்''[21] எனப்பெற்றது. வேந்தன் அமர்ந்து ஆட்சிமுறை செலுத்தும் மண்டபம் என்றும் பொருள் கொண்டது இது.

நெடுஞ்சேரலாதன் தன் மக்கள் செங்குட்டுவன், இளங்கோ ஆகிய இருவருடன் அமர்ந்திருந்த ஆட்சி அரங்கு கொண்ட மண்டபம் ''மணி மண்டபம்'' எனப்பெற்றது. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரப் பதிகத்தின் உரையில்,

''தென்னவர் செம்பியர்
தன்னடி போற்றத்
தமனிய மண்டபத்து (தமனியம்-
பொன்) வேந்தன் இருந்துழி''[22]

- என்று எழுதினார்.

சோழநாட்டு அரசனது ஆட்சி மண்டபம் ''சித்திர மண்டப''[23] மாக விளங்கியது. இதன் சிறப்பால் இது பெறுவதற்கு அருமை யான மண்டபம் என்னும் கருத்தில் ''அரும்பெறல் மரபின்

21. சிலம்பு - 28-70
22. ,, பதிகம் - 1,2 அடி. உரை
23. ,, 28 - 87

மண்டபம்''[24] எனப்பெற்றது. இதன் கலைநுணுக்கத்தைக் கண்டோர் உயர்வு நவிற்சியாக 'இது மனிதனால் உருவாக்கப் பட்டதன்று; 'மயன்' என்னும் தெய்வத்தினால் ஆக்கப்பட்டது' என்று புகழ்ந்தனராம்.

இவை அரண்மனையில் அமைந்த அரசாட்சி மண்டபங்கள்.

திருப்பரங்குன்றத்து முருகன் கோவில் ஓர் அழகிய மண்டபம் எழுந்தது. அதில் ஓவியங்கள் ஒளிர்ந்தன. சிற்பங்கள் சிறந் திருந்தன. பலவகைப் புராணக் கதைகள் ஓவியங்களாகத் தீட்டப் பட்டிருந்தன; சிற்பங்களாக வடிக்கப்பட்டிருந்தன. இரதி, காமன் உருவம் தீட்டப்பட்டன. இந்திரன் பூனையாக வந்து அகலியைக் கூடியதும், அஃதறிந்த கௌதமன் சினந்து அகலிகையைக் கல்லுரு வாக்கியதுமான கதை தீட்டப்பட்டிருந்தது. இம்மண்டபத்தை "எழுத்து நிலை மண்டபம்'' [25] என்று பரிபாடல் பாடுகின்றது.

இது திருக்கோவிலில் அமைந்த கலை மண்டபம்

சோழநாட்டு அரண்மனைச் சோலையில் மன்னன் பொழுது போக்கிடம் இருந்தது. அங்கு அரசன் அமர ஒரு மண்டபம் எழுப்பப்பட்டிருந்து. அம்மண்டபத்தின் ஆக்கம் மிகச் சிறப்பாக வர்ணணிக்கப்பெற்றுள்ளது. அஃது எட்டுக்கோண வடிவில் அமைந்தது. அதன் திரண்ட தூண்கள் பவளம் பதிக்கப்பட்டவை. தூண்களின் மேல் அமைந்த போதிகைகள் மணிகள் கொண் டவை. மேற்கூரையாம் விதானம் சிறந்த வேலைப்பாடுகளுடன் பொன்தகடு வேயப்பட்டது. தரைச் சுண்ணாம்புச் சேற்றால் மெழுகப்படாமல் பொன்னால் தளம் போடப்பட்டதாம். இத னால் இம்மண்டபம் 'பொன் மண்டபம்''[26] எனப்பெற்றது. இதனை விளக்கும் மணிமேகலைக் காப்பியம் மற்றொரு மண்டபத்தையும் காட்டுகின்றது.

மணிமேகலை, உதயகுமாரனுக்கு அஞ்சி ஒளிந்துகொண்ட மண்டபம் ஒன்று உவவனத்தில் இருந்தது. அஃதும் பவளத்தூண்,

---

24. ,, 5 - 110
25. பரி - 19 - 53
26. மணி - 19-115

பொன்சுவர், முத்துமாலை, ஓவியக்கரை கொண்டது. பளிங்குக் கண்ணாடி முகப்பைக் கொண்டது. இந்தப் பளிங்கு அறை 'பளிங்கு செய் மண்டபம்'[27] என்றும், 'பளிக்கறை மண்டபம்'[28] என்றும் புகழப்பட்டது.

கோவலன் கொலையுண்டதும் மணிமேகலையுடன் துறவை மேற்கொண்ட மாதவி புத்த மடத்தில் அமைந்தாள். அங்கு மலர் தொடுப்பதற்காக ஒரு மண்டபம் இருந்தது. அது 'மலர் மண்டபம்'[29] எனப் பெற்றது.

இவை சோலைகளில் எழுந்த மண்டபங்கள். இச்சோலை மண்டபங்கள் நான்கு, ஆறு, எட்டு தூண்களைக் கொண்டவையாகச் சிறிய அளவில் எழுப்பப்பட்டவை. இவை நற்காட்சிகளைக் கண்டு மகிழ அமைக்கப்பட்ட பார்வை மண்டபங்கள்.

## பட்டி மண்டபம்

இவ்வாறு எழுந்த மண்டபங்கள் யாவும் தத்தம் இயல்புக்கேற்ற அடைமொழி பெற்றதைக் கண்டோம். கட்டடம் எழுப்பப்பட்ட மதிப்பரிய பொருள்களால் பொன் மண்டபம், பளிங்கு மண்டபம், மணி மண்டபம், பளிங்கு மண்டபம், (மணி மண்டபம்) எனப்பெற்றன. செய்யப்பட்ட கலை ஒப்பனைகளால் சித்திர மண்டபம், எழுத்துநிலை மண்டபம் எனப்பெற்றன. நிகழ்ந்த நிகழ்ச்சிகளால் அடைமொழி பெற்றவை திருவோலக்க மண்டபம், வேத்தியல் மண்டபம் என்பன. இறுதி இரண்டு பெயரும் ஆட்சிக் கலை நிகழும் மண்டபத்தைக் குறிப்பன. இங்கு வேந்தன் கொலுவீற்றிருந்து ஆட்சி செலுத்தும் நிகழ்ச்சியும் நிகழும்; வழக்குகளை உசாவித் தீர்ப்பளிக்கும் நிகழ்ச்சியும் நிகழும். இவ்விரண்டு நிகழ்ச்சிகளுள் கொலுவீற்றிருக்கும் நிகழ்ச்சி அன்றாடம் நிகழும் பெரும்பான்மை நிகழ்ச்சியாகும்.

இதேபோன்று, இவ்விரண்டு வகையிலும் புலமை ஆய்வு

27. ,, - 18 - 47
28. ,, - 3 - 64
29. ,, - 2 - 3

புலமை வழக்கு என்னும் புலமைக் கலை நிகழும் மண்டபம் "பட்டி மண்டபம்" எனப்பெற்றது.

பட்டி மண்டபம் என்பதற்குப் பிங்கலம்.

"பாடல் பயில் இடம் பட்டி மண்டபம்"[30]- எனப்பொருள் விரித்துக் காட்டுகின்றது. "பன்னரும் கலைதெரிபட்டி மண்டபம்"[31] - என்று பட்டி மண்டபத்தைச் சொல்லால் அளவிட்டுச் சொல்ல முடியாத சிறப்புடைய கலைகள் ஆராயப்படும் கலை மண்டபமாகப் பாடினார் கம்பர். இப்புலமைக் கலை ஒரு மண்டபத்தில் நிகழாமல் தனி அரங்கம் களத்தில் நிகழ்ந்தால் அது "பட்டிமம்" எனப்பெற்றது. இதனையும் பிங்கல நிகண்டு.

"கழகம் பட்டிமம் கல்விபயில் களம்"[32] என்று அறிவிக்கின்றது.

புலமைக் கலைஞர்களாம் புலவர்கள் வீற்றிருந்து பழைய நூற்பாடல்களைப் பயின்று ஆராய்வர்; புது நூல்களைப் படைப்பர்; படைத்து அரங்கேற்றுவர். இப்புலமைக் கலை நிகழும் மண்டபமே 'பட்டி 'மண்டபம்' எனப்பெற்றது. புலமை ஒரு வித்தை. இவ்வித்தை நிகழ்வதால் இதனை "வித்தியா மண்டபம்" என இடைக்காலத்தில் உரையாசிரியர்கள் குறித்தனர். இப்பட்டி மண்டபத்தில் அமர்ந்து பாடல்களை ஆராயும் போது கருத்து மாறுபாடு எழுவது இயல்பு. எழுந்த கருத்து மாறுபாடு, உரையாடலாய்ப் பின் சொல்லாடலாய் வளர்ந்து, சொற்போர் புரிந்து வழக்காடும் அளவில் பெருகும். சொற்போர் புரிந்து முடிவு காண இம்மண்டபத்தையே கொண்டனர். அதனால் 'பட்டி மண்டபம்' சொற்போருக்கு உரிய இடம் ஆயிற்று.

"மதுரைப் பட்டி மண்டபம் புகுந்து குயக்கொண்டான் ஆரியம் நன்று; தமிழ் தீது என்றான்"[33] எனப் பேராசிரியர்

---

30. பிங் - 663
31. கம்ப. இரா நகரப்படலம் 62 - 4
32. பிங் - 706
33. தொல் பொருள் -480 உரை

குறிக்கின்றார். இதுகொண்டு, தம் கருத்தை நிலைநாட்ட விரும்புவோர் எவரும் அதற்குரிய இடமாகப் புலவர்கள் வீற்றிருக்கும் இப்பட்டி மண்டபத்தையே கொண்டனர் என அறிகின்றோம். பொதுவில் வெளியே எங்கேனும் அறை கூவுவோர்க்கும் இவ்விடமே சொற்போரிட்டு முடிவு காணும் களமாக அமைந்தது.

எனவே,

பட்டி மண்டபம் என்பது புலமை ஆய்வுக்கும், புலமை வழக்குக்கும் உரிய இடமாகும். இங்குப் பெருகிய நிகழ்ச்சியாக நாள்தோறும் புலமை ஆய்வு நிகழும். அருகிய நிகழ்ச்சியாக வாய்ப்பு நேரும் போது புலமை வழக்காடுதலாம் சொற்போர் நிகழும். எனவே, புலமை ஆய்வுக்காக எழுந்த பட்டி மண்டபம் புலமை வழக்காடுதலுக்கும் இடமாகி அந்நிகழ்ச்சிக்கும் பெயராயிற்று.

புலமைக் கருத்தை வைத்து வழக்காடுவது போன்றதே மன்னன் முன்னர்க் குற்றம் வைத்து வழக்காடுவதும் ஆகும் எனவே, அவ்வாறான மண்டபமாம் திருவோலக்க மண்டபமும் வழக்கை உசாவி அறியுங்கால் பட்டி மண்டபமாகக் குறிக்கப் பெற்றது.

முன்னே விரிவாகக் கண்டபடி.
அரங்கம் என்பது மேடை,
மன்றம் என்பது அவை கூடும் இடம்.
மண்டபம் என்பது கட்டடம்.
இவற்றின்படி,

சொற்போர் புரிவோர் இருந்து சொற்போர் புரியும் களமாகிய அரங்கம் 'பட்டி அரங்கம்' - எனப் பெயர்பெற்றது.

அந்த அரங்கத்துடன் நடுவரும் சான்றோரும் ஒன்று கூடும் கூடமாகிய அவை 'பட்டிமன்றம்' - எனப் பெயர் பெற்றது.

பட்டி அரங்கையும் பட்டி மன்றத்தையும் கொண்ட கட்டடமாம் மண்டபம் 'பட்டி மண்டபம்' - எனப் பெயர் பெற்றது.

எனவே,

பட்டி அரங்கம்
பட்டி மன்றம்
பட்டி மண்டபம்

— என்னும் மூன்றும் சொற்போருக்குப் பிணைந்த தொடர்புடைய பெயர்கள்.

ஆயினும் இலக்கியங்கள் பட்டி அரங்கையும், பட்டி மன்றத்தையும் கொண்டு திகழும் களத்தை மண்டபப் பெயரிலேயே சொற்போர் நிகழ்ச்சியைப் "பட்டி மண்டபம்" என்றே குறிக்கின்றன. கொங்கு வேளிர் எழுதிய பெருங்கதை மட்டும் "பட்டி நியமம்"[34] என்று குறிக்கின்றது நியமம் என்பது நியமிக்கப்பட்ட இடம் என்னும் கருத்தில் மண்டபத்தையே குறிக்கும்.

சொற்போர் நிகழ்ச்சி'பட்டி மண்டபம்' என மண்டபத்தால் பெயர் பெற்றதோடு, சொற்போர் மன்றத்தாரும் "பட்டி மண்டபத்தார்" என்று அழைக்கப்பெற்றனர். இதனைத் தொல்காப்பியத்துக்கு உரை வகுத்தப் பேராசிரியர்.

"தெற்கண் வாயில் திறவாத
பட்டிமண்டபத்தார் பொருட்டு"[35]

என்று எழுதிக் காட்டுகின்றார். நச்சினார்க்கினியரும் மதுரைக் காஞ்சி உரையில் "மண்டபத்தார்"[36] எனச் சொற்போராளரைக் குறித்துள்ளார்.

## பட்டி மண்டப அமைப்பு

பட்டி மண்டபத்தின் சட்டட அமைப்பை நோக்குவோம்; இம்மண்டபத்தின் நடுவே ஒரு சிறு தனி மண்டபம் அரங்க மேடையாக எழுப்பப்பட்டிருக்கும் இது 16 தூண்களைக் கொண்டதாகும். 4 தூண்களில் சிறு அரங்கமாகவும் அமையும்.

---

34. பெருங் - வத்தவ 2 : 73
35. தொல். பொருள் - 490 உரை
36. மதுரை, - 746 உரை
திருப்புறம்பியம் கல்வெட்டு

16 தூண்களாயின் நடு நான்கு தூண்களின் இடைத்தளம் மேலும் சற்று உயர்ந்த மேடையாக உயர்த்திக் கட்டப்பட்டிருக்கும். 4 தூண்களாயின் அவற்றின் இடைத்தளம் இவ்வாறு மேடையாக்கப்பட்டிருக்கும். இந்த நடு மேடையில் சொற்போராளர் இருந்தோ நின்றோ சொற்போரிடுவர். இஃதே பட்டி அரங்கமாகும். இந்நடு மேடையைச் சுற்றியுள்ள சுற்று மேடையில் நடுவரும் பட்டி மண்டபத்தாராம் சான்றோரும் அமர்வர். இத்தூண்கள்மேல் கருங்கல் பாவப்பட்ட தனிக்கூரை அமைந்திருக்கும். இவ்வாறான அரங்கப் பகுதியே நூல்களை ஆராயும் அரங்கமாகும். இவ்வரங்கமே நூல்கள் அரங்கேற்றப்படும் அரங்கமாகும். புலவர்களுக்குப் பெருஞ்சிறப்பும் பட்டமும் பரிசும் வழங்கும் மன்னவன் இவ்வரங்கிலேயே அச்சிறப்பான நிகழ்ச்சியை நிகழ்த்துவான். பட்டினப்பாலையை எழுதிய உருத்திரங்கண்ணனார்க்குப் பரிசாகப் பொன்னை வழங்கிய சோழன் கரிகாலன் இத்தகைய 16கால் மண்டபத்திலேயே அச்சிறப்பைச் செய்ததாக ஒருகல்வெட்டு அறிவிக்கின்றது.

இக்காலத்திலும் இத்தகைய 16 கால் மண்டபங்கள் தனித்தோற்றமாகத் திருக்கோவில்களின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும், திருக்குளத்தின் மையத்திலும் ஊர்ப்புற எல்லையிலும் காட்சியளிப்பதைக் காண்கின்றோம். திருவிழாக் காலங்களில் கடவுளாரின் திருவுருவங்களை ஒப்பனைகளுடன் இவ்வரங்கில் எழுந்தருளுவித்து மக்கள்கண்டு வணங்கச் செய்வதைக் காணலாம். இது கடவுள் திருவோலக்கக்காட்சி.

இவ்வாறான 16 கால் மேடை அரங்கத்தைச் சூழ அவையோர் கூடும் கூடம் அமைந்திருக்கும். அரங்கத்தையும் கூடத்தையும் கொண்ட பரந்த பட்டிமண்டபத்தின் மேற்கூரை முழுதும் மாட அமைப்பில் செங்கற் சாந்தால் மேல் வளைவு மேல் வளைவாக மூடப்பட்டிருக்கும். கருங்கற்களாலும் பாவப்பட்டிருக்கலாம். சுற்றிலும் சுவர்களால் அடைக்கப்பட்டு வாயில் கதவுகள் கொண்ட கட்டுக்காப்பான மண்டபமாக அமைந்திருக்கும்.

கருத்துப் போருக்காக எழுந்த ‘அறைகூவல்’ ஏற்கப்படும் வரை பட்டி மண்டபம் ‘அடைக்கப்படும்’ என்ற மரபாலும்,

"தெற்கண் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார்" [37] என வருவது கொண்டும் நான்கு புறத்துமோ, தெற்கு, கிழக்கு என இரண்டு புறத்துமோ வாயில்களும் அவற்றிற்குக் கதவுகளும் அமைந்திருப்பதை அறிகின்றோம்.

## பட்டி மண்டபம் - சிறப்பின் சின்னம்

இத்துணைச் சிறந்த பட்டி மண்டபம் மன்னரது அரண்மனைகளில் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. அரண்மனையின் ஒரு சிறந்த உறுப்பாகத் திகழ்ந்தது. மன்னனது சிறப்புகளை அறிவிக்கும் பட்டியலில் பட்டி மண்டபமும் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. மன்னனது வெற்றிச் சிறப்பின் ஓர் அடையாளமாகவும் பட்டி மண்டபம் சிறப்புற்றிருந்தது.

சோழன் கரிகாற் பெருவளத்தான் தன் வீரப் புகழை நிலைநாட்ட வடநாட்டுப் பயணத்தை மேற்கொண்டான்; பகைத்தோரைப் பணிய வைத்தான்: பணிந்தோரை நண்பராகக் கொண்டான்; இமயத்தில் புலி பொறித்து வெற்றியுடன் மீண்டான். தன் வெற்றியின் சின்னமாகத் தன் திருவோலக்க மண்டபத்தைச் சித்திர மண்டபமாக்கினான். அம்மண்டபத்தில் "கொற்றப் பந்தர்" ஒன்று வச்சிர நாட்டு வேந்தனின் திறைப் பொருளாகப் படைக்கப்பட்டது. அவந்தி நாட்டு மன்னன் உவந்து தன் அன்புக் காணிக்கையாகப் படைத்த "தோரண வாயில்" அம்மண்டப முகப்பில் விளங்கியது. பகைத்துத் தோற்ற

"மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்

பகைப்புறத்துக் கொடுத்தப் பட்டி மண்டபமும் [38] அச்சித்திர மண்டபத்தில் அமைந்தது. பண்டைக்காலச் சோழர்களில் பெருஞ்சிறப்புடையவன் கரிகாற் பெருவளத்தான். அவனது வெற்றிச் சின்னமாகப் பட்டி மண்டபம் இடம் பெற்றதை நோக்கும்போது அதன் சிறப்புப் பளிச்சிட்டுத் தோன்றுகின்றது.

---

37. தொல். பொருள் - 490 உரை

38. சிலம்பு 5 -101, 102

ஆனால் இங்கே ஓர் ஐயம் குறுக்கிடுகிறது.

இத்துணைச் சிறப்புடைய சித்திர மண்டபச் செய்தியைச் சிலப்பதிகாரத்தில்தான் காண்கின்றோம். கரிகாற் சோழனைத் தலைவனாக வைத்துப் பாடப்பட்டது பட்டினப்பாலை என்னும் சங்க காலப் பாட்டு. இப்பாட்டில் இதுபற்றிய செய்தி இல்லை. இஃது ஐயத்தைத் தரக்கூடியதே. அதற்கு அமைதியை அந்நூலில் கரிகாற் சோழனது வடநாட்டுப் பயணம் பற்றிய செய்தி குறிக்கப்படாதது கொண்டே கொள்ளமுடிகின்றது. எச்சிறு குறிப்பாகவும் அவனது வடபுல வெற்றிக் குறிக்கப்படவில்லை. இதனால் வடநாட்டுப் பயணமே நிகழவில்லை என்று கூற இயலாது. இமயத்தில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டமைத் தற்காலத்திலும் அறியப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, அவனது வடநாட்டுப் பயணத்திற்கு முன்னர் பட்டினப்பாலை இயற்றப்பட்ட தாகின்றது. இதனால் ஐயம் பைய நையும்.

செங்கோல் ஆட்சியின் நல்லமைப்புக்கள் பல. அவற்றை உதயணன் மேல் வைத்து விளக்குகின்றார் பெருங்கதை ஆசிரியர் கொங்கு வேளிர். அவனது ஆட்சித் திறத்தில் ஒன்றாக,

''பட்டி நியமப் பதிமுறை நிறீஇ''[39] யதைக் குறித்துள்ளார் பட்டி மண்டபத்தில் தலைவனாக-நடுவனாக அமர்ந்து நேர்மை யானத் தீர்ப்பை நிலைநாட்டியதை இவ்வடி குறிக்கின்றது.

இதுபோன்றே மதுரைக் காஞ்சியிலும் ஒரு குறிப்பு உள்ளது 'மதுரைக் காஞ்சி' என்னும் நூல் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் மேல் மாங்குடி மருதனார் பாடிய பாட்டு. அதனில் அவன் நாள் தோறும் நடத்தும் திருவோலக்கத்தில் பல கலைஞரையும் அழைத்து அவரவர் வேண்டுவதை வழங்க வேண்டுமென மருதனார் பாடி யுள்ளார். அவ்வாறு அழைக்கப்பட வேண்டியவருள் ''ஏனோரும்

39. பெருங் வத்தவ - 490

தம்''[40] எனக் குறித்தார். இந்த ஏனோரும் என்பதற்கு நச்சினார்க்கினியர் ''மண்டபத்தாரையும் அறங்கூறவையத்தாரையும்''[41] என்று பொருள் கூறினார். இதற்கும் அடிக்குறிப் பெழுதிய தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் 'இங்கு மண்டபத்தார்'' என்றது பட்டி மண்டபத்தாரைப் போலும்'' என்று எழுதியுள்ளார். இது பாண்டியன் அவையில் பட்டி மண்டபம் இருந்ததற்குச் சான்றாகும். இதுகொண்டு நெடுஞ்செழியன் பட்டி மண்டபத்தாரை அழைத்து வேண்டியன செய்வது செங்கோல் ஆட்சி முறைக்கு வேண்டிய ஒன்றாக இருந்தது என்பதையும் அறிகின்றோம்.

பெருங்கதைச் செய்தியையும், மதுரைக் காஞ்சியின் செய்தியையும் கொண்டு மன்னர் தம் அரண்மனையில் செங்கோலின் சின்னமாகப் பட்டிமண்டபம் இடம் பெற்றிருந்தமை புலனாகின்றது.

கல்வியில் பெரியவராகிய கம்பர் தமிழ்நாட்டு நினைவில் நின்றுகொண்டு அயோத்தி மன்னன் தயரதனது அரண்மனையைப் பாடுகின்றார். அங்கு அமைந்த மண்டபங்களை அடுக்கிப் பாடுகின்றார்.

> ''மன்னர் தருதிறை அளக்கும் மண்டபம்;
> அன்னமென் னடையவர் ஆடும் மண்டபம்;
> உன்னரும் அருமறை ஓதும் மண்டபம்;
> பன்ன அரும் கலைதெரிபட்டி மண்டபம்,[42]

-என்று பட்டி மண்டபம் அரண்மனையில் அமைந்ததை விளக்கத்துடன் குறித்துள்ளார். தென்னிலங்கைப் பெருவேந்தன் இராவணனது அரண்மனையிலும் ''பாடல் வேதிகைப் பட்டி மண்டபம்''[43] திகழ்ந்ததை அனுமன் காண்கின்றான்.

---

40. மது - 746
41. ,, - 746
42. கம்ப இரா நகரப்படலம் - 62
43. ,, ஊர்தேடு - 133 -3

இவ்வாறாகப் பட்டி மண்டபம் அரண்மனையில் ஒரு சிறப்பாகவும், இன்றியமையா உறுப்பாகவும், மன்னனால் போற்றத் தக்க மாண்புடையதாகவும் விளங்கியதாகும்.

திருவிழாக் காலங்களில் இத்தகைய பட்டி மண்டபத்தில் சொற்போராளர் சொற்போர் நிகழ்த்த அழைக்கப்படுவர் மணிமேகலையில் இந்திர விழாவை அறிவிக்கும் அறிவிப்பில்,

> ''ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
> பட்டி மண்டபத்துப் பாங்கறிந்தேறுமின்''[44]

எனப் பட்டி மண்டபத்தில் பங்கு கொள்ளுமாறு அழைக்கப் பட்டதை முன்னரும் அறிந்தோம். இங்கும் ''பாங்கறிந்து ஏறுமின்'' என்னும் குறிப்பால் பட்டி மண்டபம் ஏறும் மேடை அமைப்பை - அரங்கைக் கொண்டது என்பதையும் உணர முடிகின்றது.

இத்தகைய பட்டி மண்டபம் திருக்கோவில்களிலும் அமைந்திருந்தது. அங்குச் சமயத்துறைச் சான்றோர் கூடிச் சமயத்துறை நூல்களைப் பயின்று ஆராய்ந்தனர். அத்தகைய பட்டிமண்டபம் ஒன்றில்தாம் இடம் பெற்றதை மாணிக்க வாசகர் பாடுகின்றார்;

> ''கட்ட றுத்தெனை ஆண்டுகண் ணார நீறு
> இட்ட அன்பரொடு யாவரும் காணவே
> பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
> எட்டினோடு (அ) இரண்டும் (உ) அறியே னையே''[45]

இதனில் மாணிக்கவாசகர் தன்னை 'அ' என்ற எழுத்தும் 'உ' என்ற எழுத்தும் அறியாதவன் என்று தாழ்த்திக் கூறிக் கொண்டது கொண்டு அப்பட்டி மண்டபம் எத்துணை மேம்பட்ட சான்றோரைக் கொண்டு திகழ்ந்தது என்பதை அறியலாம்.

இங்கும், ''ஏற்றினை ஏற்றினை'' என்றிருத்தல் நோக்கத்தக்கது.

---

44. மணி - 1 - 60,61
45. திருவா - திருச்சதகம் - 49

அஃதும் இரண்டிடத்தில் அமைந்து அரங்க மேடைக்குப் படியில் ஏற்றியதையும், பதவியில் ஏற்றியதையும் அடுக்கிக் காட்டுகின்றது.

தஞ்சை மாமன்னன் இராசராசன் தான் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் ஒரு மண்டபத்தில் இலக்கண, இலக்கிய ஆராய்ச்சி நிகழ ஏற்பாடு செய்து அதற்கோர் அறக் கட்டளையும் அமைத்ததை அவனது கல்வெட்டு காட்டுகின்றது. இஃது பட்டி மண்டப வரலாற்றில் ஒரு கல்லாகும்.

இவ்வாறாகத்

தமிழகத்தில் பழங்காலம் முதற்கொண்டே அரண்மனை களிலும் திருக்கோவில்களிலும் பட்டி மண்டபம் எழுந்து திகழ்ந் ததைத் தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன.

இதுவரை கண்ட சான்றுகளைக் கொண்டு பட்டி மண்டபம் என்பது புலமைக்கலை நிகழும் மண்டபம். அப்பட்டி மண்டபம் புலமை வழக்காம் சொற்போர் நிகழும் மண்டபமும் ஆயிற்று காலப்போக்கில், புலமைக்கலை நிகழ்ச்சி அருகிச் சொற்போர் நிகழ்ச்சி பெருகியதால், பிற்காலத்தில் பட்டி மண்டபம் என்பது சொற்போருக்குரியது ஆகிற்று; இப்பட்டி மண்டபம்,

அரங்கும் மன்றமும் கூடிய கட்டடமாயினும் அங்கு நிகழும் சொற்போர் நிகழ்ச்சிக்கு ஆகுபெயராகியது.

ஆகி,

சொற்போர் நிகழ்ச்சியே பட்டி மண்டபம் என்னும் பெயரைப் பெற்றது.

7

# வாயும் சொல்லும்

**வாயில்லா உயிரினம்**

வாய் என்ற உறுப்பு இல்லாத உயிரினம் இல்லை. உடலுக்கு அமைந்த வாய் என்ற அளவில் நோக்கினால் மாந்தன் வாயை விட விலங்கு, பறவை முதலிய மற்றைய உயிரினங்கள் பெரிய, வாய்களையே பெற்றுள்ளன எனலாம். அவ்வாறு பெற்றிருந்தும் அவற்றை ''வாயில்லா உயிரினம்'' (வாயில்லாப் பிராணி) என்கின்றோம், ஏன் அவ்வாறு கூறுகின்றோம்? அவை வாயால் பேசுவதில்லை; நாம் பேசுகின்றோம். பேசத் தெரிந்ததால் பேசத் தெரியா அவற்றை இவ்வாறு கூறுவதா? இது முறையா? இவ்வாறெல்லாம் வினவத் தோன்றும். 'கூறலாம்; முறைதான்' என்பதற்குத் தக்க அமைப்பான கரணியங்கள் உள.

வாய் செய்யும் செயல்கள் இரண்டு. ஒன்று உள்ளே வாங்கும் செயல். அஃது உணவைக் கொள்ளல். மற்றொன்று வெளியே விடுதல். அஃது ஒலித்தல்.

உணவு கொள்ளுதலின் நோக்கம் உடலைப் பேணல். ஒலித்தலின் நோக்கம் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தல். இவ்விரண்டையும் பிற உயிரினங்களும் செய்கின்றன. செய்தும் 'வாயில்லா உயிரினம்' என்னும் பட்டத்தைத்தான் அவை பெற்றுள்ளன.

உணவு கொள்ளும் வாயின் செயல் மாந்தர் முதலிய உயிரினங்கள் யாவற்றிற்கும் பொது. உள்ளத்து உணர்வை வெளிப்படுத்துவதிலும் பிற உயிரினங்கள் பலவகை உணர்வுகளைக் காட்டி ஒலிக்கின்றன.

நாய் வாயால் ஒலித்தலைக் குரைத்தல் என்கிறோம். அக்

குரைத்தலிலும் பல வகையான மாற்ற ஒலிகளால் தனது பல வகை உணர்வுகளை அது வெளிப்படுத்துகின்றது. மொணங்கிக் குரைத்தால் காதல் உணர்வு. உரக்கக் குரைத்தால் பகை உணர்வு. உறுமிக் குரைத்தால் சின உணர்வு. கனைத்துக் குரைத்தால் விட்டுக்கொடுக்கும் உணர்வு, மேலும், நாம் அறிய இயலாமல் ஒன்றற்கொன்று தன் தன் உணர்வுகளைக் காட்டிக் கொள்ளக் குரைக்கும் ஒலிகள் பல.

நாயைப் போன்றே உயிரினங்கள் பலவும் தத்தம் உணர்வு களை வெளிப்படுத்த வாயால் ஒலிக்கின்றன. ஆனாலும், அவை கள் யாவும் வாயில்லா உரியினங்களாகவே குறிக்கப்படுகின்றன. வாயிருந்தும், வாயால் ஒலித்தும் அவை இப்பெயர் பெற என்ன தீவினை செய்தன? தீவினை ஒன்றும் செய்யவில்லை. ஆனால், நல்வினை ஒன்றைச் செய்வதில்லை.

'அவைதாம் தம் உணர்வை ஒலித்துக் காட்டுகின்றனவே என்றால், அவை ஒலிக்கு வாயை நிறைவாகத் தொழிற்படுத்து வதில்லை. அவை வெளியிடும் ஒலிகளுக்குத் தொண்டைதான் செயற்படுகின்றது. வாய் உதவுகின்றது. வாய் முயன்று தொழிற் படுவதில்லை. தொண்டையிலிருந்து எழும் ஒலியை வெளியே விட வாய் ஒரு வாயில் ஆகின்றது. தொண்டையிலிருந்து உண் டாகும் ஒலியை வாயில் உள்ள நா, பற்கள், உதடுகள் மேல் வாய் ஆகிய உறுப்புகள் முயன்று தொழிற்பட்டு வெளியிட்டால் அவ்வொலி வெவ்வேறு எழுத்து ஒலிகளாய் வெளிவரும். அந்த எழுத்துக் கூட்டல்களே சொல் - மொழி - பேச்சு எனப்படும்.

இதனைப் பிற உயிரினங்களின் வாய்கள் செய்வதில்லை. அஃதாவது வாய் ஒலியை எழுத்தாகப் பலுக்குகின்ற (உச்சரிக் கின்ற) செயலினைச் செய்வதில்லை, சொல்லாக, — மொழி யாகப் பேசுவதில்லை.

வாய் செய்ய வேண்டிய இரண்டு செயல்களில் உணவு கொள்ளும் ஒன்றைச் செம்மையாகச் செய்து மற்றொன்றுக்கு வாயைப் பயன்படுத்த அறியாமல் தொண்டையைப் பயன் படுத்தி வருவதால் அவை வாயில்லா உயிரினம் ஆயின.

## வாயுள்ள பிள்ளை

மாந்தன் இரண்டையும் செம்மையாகச் செய்ய அறிந்தவன். இரண்டுள்ளும் பேச அறிந்ததாலேயே மற்றைய உயிரினங்களை விட மேம்பட்ட உயிரினமாக விளங்குகின்றான். மன உணர்வை-பகுத்தறிந்த ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப் பேச்சால்தான் அவன் ஆறு அறிவுடையமாந்தன் ஆனான். பேச்சுத்தான் அவனை மாந்தனாக அடையாளங் காட்டி நிற்கின்றது. அப் பேச்சுக்கு அவன் வாய் உறுப்புக்களை முழுமையாகப் பயன் படுத்தியதால் வாயுள்ளவன் ஆனான்.

மேலும், வாயின் செயல்கள் இரண்டிலும் பேச்சே சிறந்தது. வாயின் உணர்வு உண்டு சுவையறிதல். அதனை மட்டும் பெற்றவன் நல்ல வாழ்வுடையவன் ஆகான். திருவள்ளுவப் பெருந்தகை வாய் உணர்வு மட்டும் பெற்றவரை மக்கள் இனத்த வராகக் கொண்டாரல்லர். விலங்காகவே கொண்டு 'மாக்கள் என்றார். 'வாயுணர்வின் மாக்கள் அழியினும் வாழினும்என்?[1]' என்று, அன்னார் அழிந்தால் என்ன? வாழ்ந்தால் என்ன' என்று வெறுத்துப் பேசினார்.

ஒருவனது குடியின் பெருமையையும், அவன் பண்பையும் அவனது வாயிலிருந்து வரும் சொல்லே காட்டும் என்பது வள்ளுவர் கருத்து. நல்ல வளமான நிலத்தின் தன்மையையும் அதில் பதிந்த வித்தின் வளத்தையும் முளைக்கும் முளை காட்டும். இதனை உவமையாக்கித் திருவள்ளுவப் பெருந்தகை

''நிலத்திற் கிடந்தமை கால் காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்''[2] —என்றார்.

சொல் வாயிலிருந்துதான் வரும். ஆனாலும், சொல்லை குறிக்கும்போது வாயையும் சேர்த்து ''வாய்ச் சொல்'' என்று இலக்கியம் வழங்கும். வாய் என்று சொல்லாமலே சொல்லை மட்டும் சொல்லலாம். வாயின் சிறந்த செயல் சொல்தான்.

---

1. குறள் - 420
2. ,, - 959

அதனினும் நல்லசொல்தான் வாயின் தன்மை என்னும் கருத்திலேயே "வாய்ச் சொல்"[3] என்றனர். பரிமேலழகரும்,

"வாய் என வேண்டாது கூறினார் தீயன பயிலாதது என்பதை அறிவித்தற்கு"[4] என்று வாயைச் சேர்த்துச் சொல்வதற்கு விளக்கம் கூறினார் "வாய்ச் சொல்" என்பது போன்று "வாய்மொழி" என்றொரு தொடர் உளது. இதற்கு வாயிலிருந்து வரும் மொழி என்பது மட்டும் பொருளன்று. உண்மை மொழி என்ற பொருள் தருவது. இதன் கண் 'வாய்' என்பது உண்மைச் சொல்லைக் குறித்து நிற்கின்றது.

**வாயே சொல்:**

இதற்குமேலும், சொல்லைக் குறிக்க 'வாய்' என்ற சொல்லை மட்டுமே பயன்படுத்தினர். 'வாய்' என்றாலே 'சொல்' என்னும் பொருளைத் தருகின்ற வழக்கு எழுந்தது. 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்" என்னும் பழமொழியிலும் இக்கருத்து ஒலிக்கிறது.

"வணங்கிய வாயினர் ஆதல் அரிது"[5] —என்னும் குறளில் திருவள்ளுவர் தம் வாய் மொழியாகவே 'வாயினர்' என்னும் சொல்லைப் பயன் படுத்தியுள்ளார். இங்கு 'வாயினர்' என்றதற்கு 'வாயை உடையவர்'. என்பது பொருளன்று. சொல்லை உடையவர்' என்பதே பொருள். சொல்லுக்காக 'வாய்' அமைந்துள்ளது. இவ்வமைப்பிலேயே'

"ஒத்த குறியென் வாய்க் கேட்டொத்தி"[6]
—எனக் கலித்தொகையிலும்,

"... ... ... ... ... நீள் நிமிர் சடை
முழுமுதல்வன் வாய்போகா"[7]
—எனப் புறநானூற்றிலும்

---

3. ,, - ,,
4. குறள் - 91 - பரி. உரை.
5 ,, 419
6. கலி - 86 - 12.
7. புறம் - 116-2

"தன்கையும் (செய்கையும்) வாயும் (மழலைச் சொல்லும்) அறியாமல்" - எனத் திணைமாலை[8] நூற்றைம்பதிலும் சொல்லுக்காக 'வாய்' ஆளப்பட்டது.

"வெவ்வாய்ப் பெண்டிர்"[9]
"வெவ்வாய் வேலன்"[10]

"தீவாய்ப் பெண்டிர்"[11] என்றெல்லாம், அலர் தூற்றும் சொல்லையோ, பழிச்சொல்லையோ, பொய்ச் சொல்லையோ சொல்பவர் சொல் என்னும் சொல்லால் குறிக்கப்படாமல், அச்சொல்லைச் சொல்லும் வாயாலே குறிக்கப்பட்டனர். புறங் கூறலாகிய கொடுமையான சொல்லைக் 'கொடுவாய்'[12] என்று நிகண்டுகள் பேசுகின்றன. இவ்வாறு சொல்லின் பழியை வாய் ஏற்றது.

**வாயே உண்மை**

வாயின் இயல்பான தன்மை உண்மை பேசுவதாகும். இதனை வாய்மையென்னும் சொல்லில் காண்கின்றோம். வாய்மை என்பது 'வாயின் தன்மை' என்று பொருள்படும் சொல். இப்பொருளில் கிளைக்கும் பொருள் 'உண்மைப் பேச்சு' என்பது. இவ்வமைப்பில் வாய் உண்மைச் சொல்லுக்காக நிற்கின்றது.

'வாய்மை' என்னும் சொல் வாய்+மை என வாயுடன் மை' என்னும் இறுதிநிலை சேர்ந்து நிற்கும் சொல்லாகும். இந்த 'மை' இன்றி, 'வாய்' மட்டும் உண்மைச் சொல்லை உணர்த்தக் குறியீடாய் நிற்பதுண்டு.

"வாய்மை, சாதம், சரதம், வாய் ஆணையும் திடமும்
மெய்யென அறைவர்"[13] என்று சேந்தன் திவாகரம்,

---

8. திணை. நூற் - 136
9. நற். - 133 - 6
10. தொல். பொ - 63-7
11. அகம். - 203 2, 3
12. பிங். - 2020
13. சேந். திவா. ஒலிபற்றிய பெயர்த்தொகுதி - 7

மெய்மைக்கு வாய்" என்னும் சொல்லையும் காட்டுகின்றது. பிற சொற்களும் இவ்வாறு காட்டுகின்றன.

ஒரு கட்டழகுக் குமரி சோலையில் தோழியுடன் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தாள். அப்பக்கம் வந்த கட்டிளங் குமரன் ஒருவன் 'ஊசலை ஆட்டவோ' என்றான். அவளிடமிருந்து மறுப்போ," இசைவோ வராததால் அவனாகவே ஊக்கி ஆட்டினான்." அதனை விரும்பிய அவள் நாணத்தால் அடிபட்டு மயங்கியவள் போன்று வேண்டுமென்றே ஊசலிலிருந்து சாய்ந்தாள். அவனோ அவளது மயக்கத்தை 'உண்மை என்று நம்பி' அதனைத் தனக்கு வாய்ப்பாக்கிக் கொண்டு மயங்கிய அவளைத் தனது இரு கைகளாலும் ஏந்தித் தாங்கினான். இதனைப் பாடும் கலித்தொகை, குமரன் 'உண்மை எனக்கருதி' என்பதை 'வாயாச் செத்து' [14] என்னும் சொற்களால் குறிக்கின்றது. இத்தொடரில் "வாயா" என்பதற்கு உண்மையாக என்பது பொருள். இங்கு வாய் என்னும் சொல், தான் மட்டும் நின்று உண்மை என்னும் கருத்தை உணர்த்துகின்றது.

இது போன்றே,

பொய்யாடி அதிர்குரல் வாய்
செத்தும் ஆலு இளமயில்'[15]

—நற்றிணை

'அவை, வாயும் அல்ல: பொய்யும் அல்ல"[16] —பரிபாடல்
"வாய்போல் பொய்ம்மொழி கூறல், அஃதெவனோ"[17]

—குறுந்தொகை

"நின் வாய்போல் பொய்ம் மொழி எவ்வமென் களைமோ"

—அகநானூறு[18]

---

14. கலி. - 37 - 3
15. நற். - 248 - 7
16. பரி. - 5 - 16
17. குறு. - 259 - 6
18. அகம். - 3 - 14

''இன்றீங் கிளிவியாய் வாய் மன்ற''

—கலித்தொகை[19]

''பல்லோர் கூறிய பழமொழி எல்லாம் வாயே ஆகுதல் வாய்த்தனம்''

—அகநானூறு[20]

''கோசர் நன்மொழி போல வாய் ஆகின்று''

—குறுந்தொகை[21]

முதலிய நூல்களிலும் பிற நூல்களிலும் 'உண்மை' என்னும் பொருளுக்கு 'வாய்' என்னும் சொல்லே அமைந்தது.

இவ்வாறு பேசப்படும் சொல்லுக்காகவும் உண்மைக்காகவும் வாய் நின்றது போன்று பேசாமையை — சொல்லாமையைக் குறிக்கவும் 'வாய்' என்னும் சொல் பயன்பட்டது.

'வாய்வாளாமை' என்பது ஒரு தொடர், இதற்குச் சொல்லா திருத்தல் (மௌனம்) என்பது பொருள். சொல்லுக்கு வாயை அமைத்த இலக்கியங்கள் சொல்லாமைக்கும் வாயை அமைத்துள் ளன.

''வினாவிடை நான்குள் துணிந்து சொல்லல்,
கூறிட்டு மொழிதல்,
வினாவின் விடுத்தல்,[22]
வாய்வாளாமை''

--மணிமேகலை

''பைக்கழித்துக் கொண்டீ எனத்தானும் யாதொன்றும் வாய்வாளேன் நிற்ப''

—கலித்தொகை[23]

---

19. கலி. - 24 - 3
20. அகம் - 66 - 5
21. குறு. - 15 - 3
22. மணி. - 30 - 235 237
23. கலி - 65 - 15

''சொல்நல்லவை நாணாமல்
தந்து முழவின் வருவாய் வாய்வாளா''[24]
—பரிபாடல்

வாயின் உறுப்புகளும் சொல்லும்.

சொல்லுக்குத் தாயான வாய் தான்மட்டும் சொல்லுக்காக நிற்பது மட்டுமன்றித் தன் குழந்தைகளையும் சொல்லுக்காக நிற்க வைத்துள்ளது. வாய் என்னும் தாயின் சேய்கள் நா, பல், உதடு, அண்ணம் முதலியன.

வாய் என்பது உறுப்பாயினும் அது தனித்து விளங்கும் ஒன்று அன்று. பல உறுப்புக்களின் தொகுப்பையே வாய் என்கின்றோம். நா, பற்கள், இதழ் அண்ணம் என்னும் மேல்வாய் முதலியவற்றின் தொகுப்பே வாய். இவ்வுறுப்புக்களே எழுத்துக்களை-சொற்களை உருவாக்குவன என முன்னரே கண்டோம். சொல்லைக் குறிக்க 'வாய்' என்னும் சொல் அமைகின்றமை போன்றே வாயின் உறுப்புக்களும் ஆகுபெயராய்ச் சொல்லைக் குறிக்கப் பயன்படு கின்றன.

''யா காவார் ஆயினும் நா காக்க''[25] என்னும் குறளடியில் ''நா காக்க'' என்பதற்குத் 'தீயசொல்லைச் சொல்லாமல் நீக்குக' என்பது பொருள். இங்கு ''நா'' சொல்லுக்காக நிற் கின்றது.

''நாவினால் சுட்ட வடு''[26]
''நா நலம் என்னும நலனுடைமை''[27] என்பனவற்றிலும்

'சொல்' என்னும் பொருளையே 'நா' தருகின்றது.

''பல் போனால் சொல் போச்சு'' என்பது நாட்டு வழக்கு. இவ்வழக்கில் சொல்லுக்குப் பல் உடலாய் நிற்பதைக் காண் கின்றோம். மேலும் சொல்லை ஒலித்துக் காட்டுவதற்குக்

---

24. பரி. - 20 - 74, 75
55. குறள் - 127
26. ,, - 129
27 ,, 641

''பலுக்குதல்'' (உச்சரித்தல்) என்பது ஒரு சொல். ''பலுக்குதல்'' என்னும் சொல்லுக்கு மூலச்சொல் பல் என்பது. பல் இன்றேல் பலுக்குதல் இல்லை. சொல்லுக்குப் பல் இவ்வாறு குறியீடாய் நிற்கின்றது.

''உதடு இல்லாதவன் ஊமை'' என்பர். ''உள்ளத்தில் கள்ளமும் உதட்டில் வெல்லமும்'' என்னும் பழமொழியில் உதடு சொல்லுக்காக நிற்கின்றது.

எனவே, வாயும் சொல்லும் ஒன்றிற்கொன்று நீங்கா இயைபு கொண்டவைகளாய் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று விளங்குகின்றன.

8

# நூலகர் ஒரு புலவர்

நூல் அறிவு விளக்கின் அகல்;
நூல் தனிமைக்குத் தக்க நண்பன்;
நூல் மனக்கவலைக்கு மருந்து;
நூல் உணர்வினுக்கு ஊட்ட உணவு;
நூல் வியத்தகு விலை மகள்.

இவ்வாறே நூலின் விளக்கத்திற்கு மேலும் மேலும் தொடர்களை அடுக்கலாம். சுருக்கம் கருதிப் பெருக்கவில்லை. இத் தொடர்கள் உண்மையான படப்பிடிப்புகளே. அத்துடன் பொருத்தமான விளக்கத்திற்கு விரிந்து கொடுப்பவை. ஆயினும் நூலை விலைமகளாகக் குறிக்கும் இறுதித்தொடர் நெஞ்சில் நிறையவில்லை; மனக்குறையைக்கிள்ளி விடுகிறது; அத்துணை மதிப்பாகத் தோன்றவில்லை என்று கூறத் தோன்றுவது இயல்பே.

'விலைமகள் பெண்ணுலகத்துக் கோடரிக் காம்பு; ஆணுலகுக்கு நச்சுப்புகை; மன்பதையின் புரையோட்டம். அத்தகு புலைமகளாம் விலைமகளை வாழ்வுக்கு வளந்தரும் நூலுக்குத் தொடர்புபடுத்துவதா' என உள்ளம் மொணங்குவதும் இயல்பே. விலைமகள் மாந்தரினத்தினின்றும் ஒதுக்கப்பட்ட குப்பைதான். "குப்பையிலே மலர் கொஞ்சும் குருக்கத்துக் கொடி வளராதோ? சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடும் செய்தி அறியோமா?" இத் தொடர்களைக் கிண்டினால் எளிய மலர் ஏடவிழும்; அரிய முத்து அழகு கூட்டும்.

விலைமகளிர் மாந்தளிர் போலும் உடல் (முறிபுரை மேனி) மெருகு கொண்டு காண்போர் உள்ளத்தைக் கவர்பவர். எழில் வண்ண மேலட்டைகளால் இக்காலத்து நூல்களும், மஞ்ச

பூசப்பட்டு மலர் சூட்டப்பெற்ற அக்காலத்து ஏடுகளும் படிப் போர்தம் உள்ளத்தைக் கவர்வனவே.

விலைமகளிர் நாம் பெறுகின்ற பொருள் மதிப்பை மனத் திற் கொள்வாரேயன்றித் (பெறுவது கொள்பவர்) தருபவர் தகுதியைக் காண்பவரல்லர். இதனால் பொதுமக்களில் எவர்க் கும் விலைமகளிரின் உடலின்பம் - உள்ள அன்பு அன்று - எளி தாகக் கிட்டும். நூலும் படிப்பவர் ஏதேனும் ஒரு தொடர்பாக எடுப்பினும் அவர் தகுதி நோக்காமல் எடுப்பவர் தம் கைகளி லெல்லாம் போகும். இதனால், படிப்பவர் எவருக்குமே நூல் களின் மேலோட்டமான பொதுக்கருத்து - உள்ளார்ந்த கருத்து அன்று - எளிதாய் விளக்கும்.

ஆனால், விலைமகளிரது உள்ளத்தை அறிவது அரிதாம். அவர் இருமனப் பெண்டிர். அவர்களிலே பல மனப் பெண்டி ரும் உளராம். இது போன்றே நூல்களின் உள்ளே பொதிந்துள்ள ஆழ்ந்த பொருள்களை அறிதல் அரிது.

எனவே, விலைமகள் ஒரு வகையில் எளியளாகவும், மற் றொரு வகையில் அரியவளாகவும் அமைதலால் வியத்தற்குரி யளாம். நூலும் ஒருவகையில் எளிதாகவும், மற்றொரு வகையில் அரிதாகவும் அமைதலால் வியத்தகு நிலையதே. எனவே, நூல் வியத்தகு விலைமகள் என்ற தொடர் உண்மை பொதிந்ததா கிறது; பொருத்தமான தொடருமாகும். 'எத்துணைதான் உண் மையும் பொருத்தமும் இருந்தாலும் விலைமகளாகக் குறிப்பதில் மதிப்பில்லைதான்' என்று குறைபட்டுக்கொள்வார் உளரெனில் இடையில் நான் நிற்க விரும்பவில்லை. இக்கருத்தை அறிவித்த நாலடியாரைப் பேச விடுதலே நலம்:

> பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிப்பட்டுக்
> கற்பவர்க்கெல்லாம் எளிய நூல் - மற்றம்
> முறிபுரை மேனியர் உள்ளம்போன் றியார்க்கும்
> அறிதற் கரிய பொருள்[1].

---

1 நாலடி - 317

படிக்க நூலை எடுப்போர்க்கெல்லாம் நூல்களில் மேற் போக்கான பொதுப்பொருள் எளிதிற்படும். ஆழ்ந்த சிறப்புப் பொருள் யாவர்க்கும் படுதல் அரிது. இவ்வரிய கருத்தை எளிமை யாய் விளக்க விலைமகளை உவமை காட்டினார் நாலடியார். கருத்து தெளிவானதும் உவமையாக நின்ற விலைமகளை விலக்கி விடலாம்.

ஒதுக்கிய குப்பையை மீண்டும் சேர்ப்பதில்லை; பூத்த குருக் கத்தியைச் சூடிக்கொல்வதுண்டு. அருவெறுக்கத்தக்க சிப்பியை அணைப்பதில்லை; முத்தை அணிய மறுப்பதில்லை. ஆயினும் மலர் வாடும்; முத்து என்றும் ஒளிரும். நாம் வாடும் மலரையும், என்றும் ஒளிரும் முத்தையும் அணிவோம். நூலின் எளிமையை யும் உணர்ந்து அரிதையும் சுவைப்போம்.

மக்களில் பல நாட்டத்தவர் உளர். அவரவர் நாட்டத்திற் கேற்பப் பேசி, அவரவர்தம் உள்ளத்தை மடைதிருப்புதல் சான் றோர் கையாண்ட முறைகளில் ஒன்று, அவ்வகையில் இவ் வுவமை காட்டப்பட்டதாகும். திருவள்ளுவப் பெருந்தகையும்,

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று[2] - என்றமையும் இப் போக்கினதே.

விலைமகள் உவமையை இத்துடன் நிறுத்தி மேலே தொடர்பு கொள்ளாமல் நூல்கள் அமைந்த நூலகத்திற்குள் புகுவோம்.

## போற்றும் புலவர்

கருத்து நிறைந்த நூல்கள்; நூல்கள் நிறைந்த பேழைகள்; பேழைகள் நிறைந்த கூடம்; கூடம் நிறையத் தூசிகள் - நூலக மாகாது. தூசிகள் நீக்கிய கூடம்; வழங்கும் பாங்கறிந்த பணி யாளர்கள்; வண்டுகளன்ன படிப்போர்; பேணும் நெறியறிந்த நூலகர். இவைகள் கூடினால் நூலகமாகும்.

---

2. குறள் - 402

தனியார் நூலகமாயினும், பொது நூலகமாயினும் புத்தகங்களைத் தொகுப்பது ஒரு பணிமட்டுமன்று; அஃது ஒரு கலை; ஒரு திறன். தொகுக்கப்பட்ட புத்தகங்களைப் பகுப்பது ஒரு நுண் கலை எனலாம். ஒவ்வொரு நூலின் மேலோட்டமான நூலை அறிந்தால்தான் பகுக்க இயலும். நூல்களைப் பெறப் பெறத் தொடர்ந்து அடுக்கிவைப்பவர் புத்தகத்தைச் சாலத் தொகுத்தும் பொருள் தெரியாதவர். அந் நூல்களுக்கும், அவருக்கும் என் வகையிலும் நூலகம் என்ற பெயரும், நூலகர் என்ற பெயரும் பொருந்தா.

இன்னின்ன நூல்களைத் தொகுக்க வேண்டும் என்று உய்த்து அறிவது, உய்த்துத் தொகுப்பது, உய்த்துப் பகுத்து வைப்பது முதலியவற்றால் நூலகம் பொருள்பொருந்திய பெயர் பெற்றதாகலாம்.

முற்காலத்தில் தனியார் தாமே இல்லங்களில் ஏடுகளைத் தொகுத்தனர். தொகுக்கும் வாய்ப்புடையார்பால் பிறர் தம் பாலுள்ள ஏடுகளை வழங்கித் தொகுக்கச் செய்தனர். கோயில் களிலும், அரசர் அரங்குகளிலும், அரசர்கள் புலவர்களைக் கொண்டு இவ்வாறு தொகுத்தனர். சங்க நூல்கள் தோன்றிய வரலாறும், தொகை நூல்கள் அமைந்த வரலாறும் இம்முறையை அறிவிப்பவை. இக்காலத்தில் தொகுக்கும பொறுப்பை அரசும் பொதுமன்றங்களும் மேற்கொண்டுள்ளன. பகுக்கும் கலையும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வமைப்புக்கள் நிறைவானாலும் நூலகம் நிறைவுடையதாகாது. நிறைவுடையதாக இருவகைப் புலவர்கள் ஈடுபாடுகொள்ள வேண்டும். அவ்விரு புலவருள் ஒருவர் தேற்றும் புலவர்; மற்றவர் போற்றும் புலவர்.

நூலகமெல்லாம், அமைந்த நூல்களில் உரியவற்றைத் தேர்ந் தெடுத்து ஆழ்ந்து பயின்று தானும் தெளிவடைந்து பிறருக்கு அறிவித்து அவரையும் தெளிவடையச்செய்பவர் தேற்றும் புலவர். இவர் நூல்களின் ஆழ்ந்த பொருளை உய்த்து அறிந்த வர்.

நூலகர் தொகுப்பதும், வகுப்பதும், பதிவதும் வழங்குவ, தும், பெறுவதும் அமைப்பதும் முதலிய பணிகளோடு நிற்பவரல்

லர். நூல்களைப் பேணும் பொறுப்பையும் கொண்டவர். நூலைப் பேணல் என்பது இருவகைப்படும். ஒன்று பழுதாகாமல் ஓம்பி பகுப்பிற்கேற்ப அமையுமாறு பேணுதல், மற்றொன்று படிப்போர்தம் தகுதியறிந்து படித்தோர்தம் நூலறிவையும்முன் படிப்பையும் அறிந்து ஏற்ற கருத்துடைய நூல்களைப் பக்குவ மாக வழங்கி நூலின் குறிக்கோள் நிறைவேறும் பாங்கில் அதன் கருத்தைப் பேணுவது. இதற்கு நூலின்கருத்தை அறிந்திருக்க வேண்டும். அதற்கு ஒவ்வொரு நூலும் நூலகத்திற் புகும்போதே நோட்டமிடப்படவேண்டும். இதனால் நூலகரும் நூல்களின் அறிவைப் பெற்றவராவார். இத்தகையவரும் ஒருவகைப் புல வரே, நாலடியார் அவரைப் 'போற்றும் புலவர்' என்கிறார்.

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தக மெல்லாம் நிறைப்பினும் - மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே; பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு;[3]

இந்தப் போற்றும் புலவர்களாம் நூலகர்கள் தேற்றும் புலவர்களை உருவாக்குபவர்கள். எனவே போற்றப்பட வேண் டிய புலவர்களுமாவர். இவர்கள் முகமலர்ச்சியால் வரவேற்கும் கலையறிந்தவர்கள், முறுவலால் பேசும் வித்தகர்கள். ஆர்வத் தால் நூற்பொருளை அறியும் திறனாளர்கள். நினைவால் ஒவ்வொரு நூலிலும் பதிந்தவர்கள். ஒவ்வொரு நூலையும் தனது ஒவ்வொரு குழந்தையாகப் பேணுபவர்கள். இப்போற்றும் புலவர்களைப் போற்றிப் பாராட்ட வேண்டும். பாராட்டிச் சிறப்புச் செய்தல் தகும்.

போற்றும் புலவர் வாழ்க.

3. நாலடி - 318

# வளையல் துண்டு

வரலாற்றுச் சுவடி

*''சத்திரியசிகாமணி வளநாட்டு (சோழ நாட்டின் வடமேற்குப் பகுதி) பட்டினக் கூற்றத்தில் (நாகப்பட்டினம் வட்டம்) நாகப்பட்டினத்தில் தன் உயரத்தினால் பொன்னாலாகிய மலையையும் சிறியதாகச் செய்து தன் அழகினில வியப்படையச் செய்கின்ற சூளாமணி விகாரை''*

— ஆனைமங்கலம் செப்பேடு.

வரலாற்றுச் சுவடியில்

வளையா வைரங்கள்

மூன்று

1. வளையல் துண்டு

*(அனைத்திந்திய அஞ்சல் ஊழியர் மாநாட்டு மலர், நாகை - 1966)*

2. சுளையும் இல்லை; தோலும் இல்லை

*(இராசராசன் சதய விழா மலர், தஞ்சாவூர் - 1971*

3. குடி தழுவிய கோல்

*(இராசராசன் சதய விழா மலர், தஞ்சாவூர் - 1970*

9

# வளையல் துண்டு

## காலில் தைத்த துண்டு

நீல நிற அலைகளுக்குப் பொன்னிற முலாம் பூசுவதற்கு மாலை நேரச் செவ்வானக் கதிரவன் முயன்று கொண்டிருந்தான். அதில் உள்ளத்தை ஊன்றியவாறு நாகர்பட்டினக் கடற்கரைக்கண் நடை விரித்தேன்.

ஏதோ ஒன்று 'சுறுக்' கென்று காலில் தைத்தது. அலை மேல் அடகு போயிருந்த உள்ளம் 'நறுக்' கென்று மீண்டது. தானே கால் மேலே எழுந்தது. பெருவிரல் நகத்தில் பாய்ந்து பதிந்திருந்த ஒன்றை 'வெடுக்' கென்று பறித்தேன். அஃது ஒரு வளையல் துண்டு.

என்னையும் அறியாமல் 'சீ, பாழும் வளையல் துண்டே! காட்சி இன்பத்தில் மிதந்த உள்ளத்தை இப்படித் திருப்பிவிட்டாயே' — என்றேன்.

'நான் வெற்று வளையல் துண்டென்று கருதாதே, சங்கு வளையலின் துண்டு நான்: தாழ்வாகப் பேசாதே' - வளையல் துண்டு பேசிப் பார்த்தது.

வியந்த நான், 'என்ன அவ்வாறா? சங்கு என்றால் மிக மேம்பாடோ' என வம்புக்கிழுத்தேன்,

'இல்லையோ? மேன்மக்களுக்கு என்னையன்றோ உவமை சொன்னார்கள். 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'[1] என்ற வெண்பா உனக்குத் தெரியாதோ? அஃதிருக்கட்டும். எனது நாடு நாக நாடு: நாகரீகம் எனுஞ்சொல்லே எனது நாட்டு மக்ளது அடிப்படை கொண்டு அமைந்தது என்பார்களே. புகழ்

• மூதுரை ; 4 : 1

நிறைந்தது அன்றோ எம் நாக நாடு. புகார் நகரத்தின் சிறப் பைக் கூறப் புகுந்த உங்கள் இளங்கோவடிகளார் எங்கள் நாட்டைச் சுட்டியன்றோ பேசினார்'[2] மேலும் கேள்:

எங்களது நாட்டு மன்னர்பெருமான் பெயர் வளைவணன் என்பது. எங்களது மன்னர் பெருமானது பெயரின் முற்பகுதியில் எங்கள் பெயராம் வளை (சங்கு) அமைந்திருப்பதைப் பார். மன்னர் பெருமானது பட்டத்தரசி வாசமயிலைப் பெற்றெடுத்த மகள் - எங்களது அரசிளங்குமரியின் பெயர் பீலிவளை,[3] அப் பெயரின் பிற்பகுதியில் என்னைப்பார். ஏதோ காலம் இவ்வா றெல்லாம் நேர்ந்து விட்டது.

'என்ன உன் காலமா?

'பின் என்ன? அரசிளங்குமரி பீலிவளையின் உயிர்த் தோழியது கையில் விளையாடிய நான் உன் காலால் உதை பட்டது காலமல்லாமல் என்ன?

'ஏதேது, ஒரு பெருங் கதையே சொல்வாய் போன்றிருக்கின் றதே'

'கதை விட எனக்குத்தெரியாது, வரலாறு கூறுவேன் கேள்'

'மிக மகிழ்ச்சி' கூறுக கேட்பேன்.

வளையல் துண்டு தொடர்ந்தது:

'ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன், அஃதாவது திரு வள்ளுவப் பெருமானார் தோன்றிப் பின் இரண்டாவது நூற் றாண்டுக் காலம். அஃதாவது கி.பி. இரண்டாவது நூற்றாண்டு''

''அஃதாவது கி.பி. இரண்டாவது நூற்றாண்டுக் காலம்'' - என்றேன் நான்.

---

2. ''நாகநீள் நகரொடு நாகநாடதனொடு போகநீள் புகழ் மன்னும் புகார் நகர்'' —சிலம்பு மங்கல வாழ்த்துப்பாடல்: 21, 22

3. நாகநாடு நடுக்கின்றாள்பவன் வாகைவேலான் வளை வணன் தேவி வாசமயில் வயிற்றுள் தோன்றிய பீலிவளை''
— மணிமேகலை காதை 24; அடிகள் 54, 57.

2. சிலம்பு : 1 : 21, 22
3. மணி : 24 : 54 - 57

'அவ்வாறு சொன்னால்தானே உங்களுக்குப் புரியும்' என்று முள்ளில்லாமல் சொல்லால் குத்திவிட்டுத் தொடர்ந்தது.

'இனிமையான இளவேனிற் பருவம். வைகாசித் திங்கள் முழு நிலவுக்கு முதல்நாள் மாலை. இதே கதிரவன்தான் அன்றும் செவ்வானத்தில் நின்றான். இந்தக் கரைக்கண் வந்து நின்ற மரக் கலத்தின் மேல்தட்டில் நின்ற எமது அரசிளங்குமரி பீலி வளையின் பொன்னுடல் மேல் தன் பொன் கதிர்களை வீசிக் கதிரவன் அழகு பெற்றுக் கொண்டிருந்தான். என்னைக் கையில் அணிந்திருந்த உயிர்த் தோழியின் கையைப் பிடித்தவாறு அரசிளங்குமரி இறங்கிக் கரையை அடைந்தாள். நானும் அன்றுதான் இங்கு வந்தேன்.

சுற்றுப்புறத்தில் மக்கள் நடமாட்டம் இல்லை, தொலைவில் மணல் மேடுகளில் சிறுசிறு குடில்கள் தென்பட்டன. அக்காலத்தில் கடல் இத்துணை அண்மையில் இல்லை. ஒரு கடற்கொந்தளிப்பால் ஒரு கல்லுக்குமேல் கடல் இப்போது உள்ளே வந்துள்ளது. இப்பொழுது உங்களூர் அரசு மருத்துவமனை அமைந்துள்ள பகுதி அருமையான மரங்கள் வளர்ந்த தோப்பாக இருந்தது. எங்கள் நாக நாட்டார் இங்கு வந்தால் அந்தத் தோப்பில்தான் பாடி வீடமைத்துத் தங்குவர்.'

நான் ஒரு குறிப்பு வைத்தேன்: 'எனதுதாத்தா கூறக் கேட்டுள்ளேன். அந்த இடத்திற்கு 'நாகர் தோப்பு' என்ற பெயர் உண்டாம்'.

'உன் பாட்டனாருக்கு நன்றி. அவராவது ஒரு வரலாற்றுக் குறிப்பைச் சுட்டினாரே. அந்தத்தோப்பில்தான் அரசிளங்குமரியுடன் வந்த ஏவல் சுற்றத்தார் விரைவில் மூன்று பாடி வீடமைத்தனர். அவற்றில் தலையாய ஒன்றில் அரசிளங்குமரி சிறு பொழுது ஓய்வெடுத்தாள். பின்னர் நிலத்தின் உட்பகுதி நோக்கிப் புறப்பட்டாள். உடன் தோழியரும் சில ஏவலரும் சென்றோம். செல்லச் செல்ல அமைதியான, ஆனால் ஆழ்ந்து ஓதும் மந்திர ஓதை தெளிவாகிக் கொண்டே வந்தது.

'புத்தம் சரணங்கச்சாமி'

'தருமம் சரணங்கச்சாமி'

'சங்கம் சரணங்கச்சாமி' — எனும் ஒன்றுபட்ட ஓதை உள்ளத்தில் படிந்து நெஞ்சை நெகிழ்வித்தது. ஒரு கல் தொலைவு உள்ளே சென்றோம். அங்கு ஒரு மேட்டுப் பகுதி நிலம் திட்டுப் போன்றிருந்தது. அதனைச் சுற்றி இலந்தை மரங்கள் செறிந்து நின்றன. அவ்விடத்திற்குப் 'பததி திட்டை[4] என்று பெயர்.

நான் குறுக்கிட்டேன். 'இப்போது 'அவுரித் திடல்' என்கின்றோமே எந்த இடமோ?

பதரிதிட்டை

'ஆம் ஆம். அதுதான். 'பதரி திட்டை'* என்பதுதான் அவுரித் திடல் என மருவி வழங்கப்படுகின்றது. அந்தப் பதரி திட்டையின் நடுவில் அசோகப் பெருமன்னரது ஆணையால் எழுந்த புத்தக் கோட்டம் ஒன்றிருந்தது.[5] அக்கோட்டம் பதரி திட்டை விகாரை எனும் பெயருடையது. அக்கோட்டத்தின் ஒரு பகுதிப் பள்ளியில் புத்தமத அறிஞர்கள் உறைந்தனர். பதரித் திட்ட விகாரைக்கு மேற்குப் புறத்திலும் சில புத்தக் கோட்டங்களும், ஒறு தொழுகையிடமாம் சைத்தியங்களும், உலாவும் சோலைகளாம் அராமங்களும் இருந்தன. அவ்வவ்விடங்களுக்குப் போய்ப் புத்த பெருமானை நினைந்து போற்றியும், புத்த மதத்துத் துறவுச் சான்றோரது வாழ்த்தைப் பெற்றும் எழுத இளவரசி திரும்பினாள். அக்காலத்தில் இப்பகுதி. மக்கள் வாழும் நகர்ப் பகுதியாக இல்லை. 30கல் தொலைவில் புகார் நகரம் விளங்கிற்று. ஆரவாரம் மிக்க அந்நகரினின்றும் அமைதி நாடியும் நூல்களை ஆராயவும் புத்தச் சான்றோர் இங்கு இடங்கண்டனர். குறிப்பாகக் கூறினால் தன்பாலர் என்ற புத்தத் துறவியர் இங்கு தங்கி 'நெத்தி' என்ற நூலுக்கு விரிவுரையைப் பாலி மொழியில் எழுதினார். என்பர். அது 'நெத்தி பகரண கட்ட கதா' எனப் பட்டது.[6] எனவே, இப்பகுதி புத்தத் திருவிடமாகவே விளங்கியது.

---

4* பாலி மொழியில் இலந்தை மரம் படரி எனப்படும். அம்மரங்கள் சூழ்ந்த இடம் 'படரி திட்டை' எனப்பட்டு நாளடைவில் 'பதரி திட்டை' என்றாயிற்று. அஃதே பிற்காலத்தில் அவுரித் திடலாயிற்று.

மேலும் இங்கமைந்த புத்த விகாரைகள் பல. எம் நாட்டார் வருகையின்போது வழிபாட்டிற் சென்று ஒரு விகாரை இருந்தது. இது 'நாகானை விகாரை' எனப்படும். இதனை மகாகாசபதேரர் என்றும் புத்தப்பெரியவர் எடுத்தார். நாகானனம் என்னும் பெயரில் எம் இனம் ஒலிக்கிறதன்றோ!

எங்கள் நாட்டார் புத்த மதத்தில் ஆழ்ந்த பற்றுடையவர். இந்த நாகை புகார் மணிபல்லவம் முதலிய புத்தத் திருவிடங்களை அடிக்கடி கண்டு போற்றி வருவர். அப்பழக்கப்படியே எமது அரசிளங்குமரியும் இங்கே வந்து உள்ளே சென்று நாகானை விகாரையில் புத்த பெருமானை பரவினாள் மாலைப் போதில் உள்ளே புகுந்த நாங்கள் இரவு தொடங்கி ஐந்து நாழிகையாகியே மீண்டோம். கடலின் விளிம்பின் ஓரத்தில் திங்கள் தங்கத் தகடாக எழுந்து எங்களது இளவரசியின் அழகைக் காணக் காத்துக் கிடந்தான். அவளைக் கரைக் கண்ணே கண்டதும் அவனது முகத்தில் தன்னழகைக் கண்டான். அவ்வழகிற்கு ஈடுகொடுக்க ஆற்றாது தமது விளிம்பின்மேல் ஓரம் வெம்பித் தோன்றினான்.[7]

'ஓ' உங்கள் பீலிவளை அத்துணைப் பேரழகியோ?- என்றேன் நான்.

'அவள் இயல்பிலேயே பேரழகி. தந்தத்தில் வடித்த சிலையை ஒருமுறை தங்கத்தில் தோய்த்து எடுத்தது போன்ற உடலழகி என்று சொன்னால் வேறு சொல்ல வழி தெரியாமல் இவ்வாறு சொல்ல நேர்கின்றது என்று பொருள். அத்துடன் இந்த நிலத்தில் அடிவைத்தது முதல் அவளது உள்ளத்தில் ஒரு தனி இன்பக் கிளர்ச்சித் தோன்றி முகத்தில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு பூரிப்பு அரும்பிக் கொண்டிருந்தது. இதற்கும் ஒரு காரணம் உண்டு.''

'அது என்ன காரணமோ?' - என்றேன் நான்.

---

4. சாசன வமிசம் (பாலி மொழியில்)
5. பர்மா நாட்டு விவரணைச் சுவடி (பாலி மொழியில்)
6. சாசன வமிசம்
7. மோக விச்சேதனி (பாலி)

'துடிக்காதே' உரிய இடத்தில் நானே சொல்வேன். மேலே கேள். இரவு நகர்ந்து கொண்டிருந்தது. காவற் பணியாளர் தவிர்த்து ஏனைய யாவரும் துயின்றனர். விடிந்தால் காவிரிப் பூம்பட்டினமாம் பூம்புகாரில் இந்திரவிழாவின் இறுதி நாள் விழா. இந்திர விழா சித்திரைத் திங்கள் முழு இரவு நாளில் துவங்கி இருபத்தெட்டு நாள்கள் நிகழும் இருபத்தெட்டாவது இறுதிநாள் வைகாசி முழு நிலவு நாளாகும். அன்று கடல் நீரில் விளையாட்டுப் போட்டி நிகழும்[8] பன்னாட்டு வீரரும் கலந்துகொள்ளும் உலகப் போட்டியாம் அது. இந்நாட்டு அரசரும் பெருமக்களும், பன்னாட்டு அரசரும் பெருமக்களும் விளையாட்டுகளைக் கண்டும் கடலாடியும் பூரிப்பர். இக்காட்சிகளைக் காணப் பன்னாட்டுப் பொதுமக்களும் இடம் பிடிக்க முந்துவர்.

இப்பெரு விழாவைக் கண்டு களிக்க வேண்டும். புகாரிக்கண் அமைந்த புத்தக் கோட்டங்களைக் கண்டு தொழ வேண்டும் புத்தச் சான்றோர்களது அறிவும் வாழ்த்தும் பெற வேண்டும் இவை எமது அரசிளங்குமரி பீலிவளையினது வருகையின் தெளிவும் வெளிப்படையுமான நோக்கம்

'அவ்வாறாயின் புலப்படாததும் குறிப்புமான நோக்கம் வேறும் உண்டோ"-என்று இடைவெட்டிப் பார்த்தேன்.

'இருக்கலாம் பொறுமையாகக் கேள்' - என்றது.

## மாந்தர் இயல்பு

நான் மற்றொரு முறை வினாவை எழுப்பினேன்: 'கேட்கிறேன் ஓர் ஐயம். ஒரு வெளிநாட்டு அரசிளங்குமரி - அதிலும் கன்னிப்பெண்; பெற்றோர் உற்றார் துணையின்றி இவ்வாறு நாடு விட்டு வருவதுண்டோ?'

'அந்தக் காலம் மாந்தர் இயல்பும் நாகரீகமும் மணிமுடி சூடி நின்ற காலம்' என்று ஒரு போடு போட்டுவிட்டு மேலே தொடர்ந்தது. அஃதொடு, 'பீலிவளை இவ்வாறு வந்ததற்கும் தனி அடிப்படை உண்டு; மேலே கேள். யாமம் கழிந்தது.

---

"உருகெழு மூதூர் உவவுத்தலை வந்தென பெருநீர் போகும் இரியல் மாக்களொடு மடலவிழ் காவல் கடல் விளையாட்டு" சிலம்பு காதை: 6:111.113

8. சிலம்பு : 6 : 111, 113

வைகறைப் போது தொடங்கியதும் விழித்து மரக் கலமேறிப் புகார் நோக்கிப் புறப்பட்டாள் அரசிளங்குமரி. சில ஏவலர் மட்டிலும் இங்கமைந்த பாடி வீடுகளில் தங்கினர். விடியலில் புகாரை அடைந்தோம். கடலாடும் கண் கொள்ளாக் காட்சியையும், பிற விழா நிகழ்ச்சிகளையும் நாள் முழுதும கண்டோம். அங்கு வெளிநாட்டுப் பெரு மக்கட்கென அமைக்கப்பட்ட வள மனையில் தங்கினோம். மறுநாள் அங்கமைந்த 'இந்திர விகாரை'[9] முதலிய பெயர் பெற்ற ஏழுபுத்தக் கோட்டங்களைக் கண்டு தொழுதும் சான்றோரது அறவுரை கேட்டும், வாழ்த்துப் பெற்றும் முற்பகலைக் கழித்தோம். பிற்பகல் மாலையில் இவ்விடம் நோக்கி மீளத் தொடங்கினோம். பீலிவளை கடற்கரைக் காட்சியையும், கரையின் ஓரத்தில் அமைந்த சோலைகளின் வளமனைகளின் அழகையும் கண்டவாறே தோழியுடன் கரையோரமாக நடந்து வந்தாள். இவளைத் தொடர்ந்தவாறே மரக்கலம் ஓரளவில் ஓரமாகக் கடலில் வந்து கொண்டிருந்தது. புகார் நகரின் எல்லையைக் கடந்தோம். ஓர் உப்பளப் பகுதியில் வந்தோம், அதனை அடுத்து ஒரு பெரும் மணல்மேடு. அங்கு அழகான பூஞ்சோலை ஒன்று தென்பட்டது. அச்சோலையில் புன்னை மரங்களில் இனிய பசுமை காண்போரை அழைத்தது. அங்கு மலர்ந்த மலர்களின் குளிர் நிறம், கிளர் மனம் ஏதோ ஒருவகை ஈர்ப்பு வலிமை கொண்டு ஈர்த்தன. அச் சோலையைக் காண அவாக் கொண்டாள் இளவரசி. கடற்பக்கம் கழுத் தொடித்து மரக்கலத்தை நிறுத்தி வைக்குமாறு குறி காட்டினாள். அவளது முகத்தில் பூரிப்பின முதல் எல்லை தென்பட்டது. இயற்கை எழிலில் புலன்கள் யாவற்றையும் ஊற்றினாள். பூரிப்பு நிழலாட்டம் போட்டது போன்று முகம் மலர்ந்தாள். சோலைகளிடையே ஓர் எழில்வாய்ந்த

---

* இவ்விகாரைகள் அசோகப் பெருமன்னனது இளவல் எனக் கருதப்படும் மகேந்திரனாள் ஏறத்தாழ கி.மு. 260க்குப் பின் கட்டப்பட்டவை.

9 பின்னர் மகேந்திர விகாரை எனப்பட்டது. மகேந்திரனால் எடுக்கப்பட்டதையே இந்திரனாள் எடுக்கப்பட்டது என உரையாசிரியர் எழுதினர். மகேந்திரனும் இந்திரன் இருக்கிறானன்றோ!

9. ” : 10 : 14

வளமனை இருந்தது. அதனைக் கண்ட பீலிவளை பூரிப்பின் விடிவெள்ளியாக ஒளிர்ந்தாள். அந்த வளமனை முகப்பில் அமைந்த சிறு பூப்பந்தர் மேடையில் ...... மேடையில் ...... மேடையில் ...... பூமாண் நெடுமுடிக் கிள்ளியாம் சோழ நாட்டுப் பேரரசன் அமர்ந்திருந்தான். எம் பீலிவளைதான் முதலில் நோக்கினாள். பூரிப்பின் பிறையானாள். திரும்பி விடுவோம் என்றழைத்த தோழியைக் கையமர்த்தியதுமன்றித் தன்னைப் பின் தொடராமல் நிற்குமாறு கை காட்டிவிட்டு உணர்வின் பிழம்பாக நடந்தாள். ஒரு புன்னை மர மறைவில் தோழி நின்றாள்.

இடம்: சோலை; நேரம் மாலை; வீசுவது தென்றல்; பேசுவது குயில்; உலவுவது மலர் மணம்; குலவுவன புறா; இவற்றினிடையே எழில் கொஞ்சும் அரசிளங்குமரி; ஆண்மை கொழிக்கும் சோழப் பேரரசன். என்ன கதை துவங்கும்? அக்கதை முளைத்தது. குமரியைக் கண்ட மன்னனது வியப்பை விட உணர்ச்சியின் விறுவிறுப்பு மேம்பட்டு நின்றது. 'யாரிவள்' என்ற எண்ணத்தை மீறிக் காதல் மயக்கம் நின்றது.

நாணமும் புன்முறுவலும் ஒன்றையொன்று முந்த நெருங்கி வந்த பீலிவளையை நோக்கினான் மன்னன். அவனது கண்களில் மன்மதன் மல்லிகை அம்பை எய்து வைத்தான். மன்னன் கனிந்த குரலில் 'மலரின் மென்மை எழிலை நிலவொளியில் குழைத்து உன்னைப் படைத்து விடுத்தவர் யார் பெண்ணே' என்றான்.

அவள், 'ஆம், தன்கட்கெனப் படைத்தனுப்பப்பட்ட படைப்பு நான்' - என்று உணர்வின் இழையில் நின்று பேசினாள்.

அச் சொற்களை ஏற்ற மன்னனது செவிகளில் மன்மதன் அடுத்த அசோகந் தளிராம் அம்பைப் பெய்து வைத்தான். தன் கையால் அவளது கூந்தலைத் தைவந்தான். அவள் தன் உள்ளத்தால் தடுத்தாள் அல்லள். அதற்கு மேலும் அங்கு நிற்கத் தோழிக்கு நிலை கொள்ளவில்லை. அவளும் பெண் தானே. ஆனாலும், இந் நிகழ்ச்சியால் அவள் வியப்பொன்றுங்

கொள்ளவில்லை. எதிர்பார்த்திருந்த ஒன்று திடீரென்று நிகழ்ந்தது போன்ற நிலையில் காணப்பட்டாள். கடற்கரை நோக்கித் தோழி திரும்பி விட்டாள்.

இவளையோ தலைவி எண்ணியிருப்பாள்? அவள் அரசனது கவ்வுக் கைகளுக்குள் கிடந்திருப்பாள். வாலெயிறு ஊறிய நீருண்ட மன்னனது வாயில் மன்மதன் மாம்பூவாம் மூன்றாவது அம்பால் தைத்திருப்பான். பருவக் குமரியின் பக்குவம் பெற்ற உடல் மணத்தை உயிர்த்த மூக்கில் மன்மதன் நான்காவது குவளை மலராம் அம்பால் குத்தியிருப்பான். உற்று இன்பங் கண்ட மன்மதனது உடலில் இறுதிமலராம் தாமரை மலரம்பைப் பதித்திருப்பான். ஆயிரம் அம்புகளானாலும் அமர்க்களத்தில் ஆற்றி நின்று மாற்றாரைப் புறங்கண்ட மன்னன் இந்த ஐந்து அம்புகளால் அடிப்பட்டுப் பீலிவளையின் இரு கண்ணம்பின் அடியால் மயங்கி அவளைப்பணிந்து குற்றேவல் செய்திருப்பான்.[10]

''கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலமும்

ஒண்டொடி கண்ணே உள'[11] - என்னும் குறளுக்குப் பொருளை ஆராய்ந்திருப்பான். இனியும் அந்தக் கதையை விவரிக்க வேண்டா. மேலே கேள்:

தோழி திரும்பிக் கடற்கரைக்கு வந்தாள். காத்துக் கிடந்த ஏவலர்கள் மரக்கலத்தினின்றும் வந்த செய்தியறிந்தனர். ஒருவனைத் தவிர மற்றவர் பால் இச்செய்தி ஏதும் புதுமையான வியப்பைத் தோற்றுவிக்கவில்லை. அரை குறையாகப் புரிந்த ஒருவன் சொன்னான்;

'அரசிளங்குமரி பிறந்த நாளில் கணி சொன்னது உண்மையாகி விட்டது.'

ஒன்றும் புரியாதவன் கேட்டான்: என்ன சொன்னான் கணி? இதையா அப்பொழுதே சொன்னான்?

10. மணி : 24 : 87

11. குறள் : 1101

அரை குறை சொன்னான்: ஓ, உனக்குத் தெரியாது. நீ இளையவன், பீலிவளை பிறந்த நாளில் குழந்தையின் எதிர் காலத்தைக் கணித்துக் கூறவந்த கணி 'இப்பெண் குழந்தை எதிர் காலத்தில் பருவம் அடைந்ததும் சோழகுல மன்னன் ஒருவனால் கடப்பட்டு அங்கு தங்காது மீள்வாள்' - என்றான். அதுதான் அப்படியே இப்போது நேர்ந்துள்ளது. எல்லாம் புரிந்த மூன்றாமவன் முடித்துப் பேசினான்: கணி சொன்னதால் மட்டும் அப்படியே நிகழ்ந்து விட்டதாக எண்ணக்கூடாது. இந்தச் செய்தி மறைத்து வைக்கப்பட்ட செய்தியன்று. பீலிவளை அறியுமாறும் அவ்வப்போது பேசப்பட்டு வந்ததே. நாளொரு மேனியாய் அவள் வளர்ந்தபோது இந்த எண்ணமும் பொழுதொரு வண்ணமாய் அவளது உள்ளத்தில் வளர்ந்து வந்தது. அந்த உணர்வுக் கொப்பளிப்பு இந்த ஆண்டு இந்திர விழாவிற்கு வரவேண்டு மென்றும் துடிப்பை அவளது உள்ளத்தேத் தூண்டியது. வந்தும் விட்டாள். நடந்தும் விட்டது. அஃதிருக்கட்டும்; எப்பொழுது அரசிளங்குமரி - இல்லை, இல்லை - அரசி மீள்வாள்?

தோழி, கைகளைவிரித்தாள். ஒருவன் 'எப்படியாகிலும் தாய்த்தன்மையுடன்தான் வருவாள்' என்று கிண்டலாக ஓர் உண்மையையும் சொல்லி வைத்தான். வரவை எதிர் நோக்கிக் காத்திருந்தார்கள். புகாருக்குள் செல்வதும் அன்றாடக் கடன்களை நிறைவேற்றிக் கொள்வதும் மீளுவதுமாக மாறி மாறி மரக் கலத்திலேயே காத்திருந்தனர்.

ஒரு திங்கள் கழிந்தது[12] ஆனித்திங்களின் தொடக்கத்தில் ஒரு நாள் அந்தி மாலை நேரம். திடீரென்று பீலிவளை விரைந்து ஓடி வந்தாள். மரக் கலத்தில் ஏறத் துடித்தாள். அவ்வாறே ஏற்றினர். மரக்கலம் விரைந்துநாகை நோக்கிவந்தது. இடையே

---

12. ''ஒருமதி எல்லை கழிப்பிலும் உரையாள்
பொருவரு பூங்கொடி போயின அந்நாள் - மணிமேகலை: 24:42,

12. மணி : 24 : 42, 43

ஒன்றுதான் கூறினாள். 'அரசர்பட்டினத்திற்குள் சென்றுள்ளார். அந்த நேரம் பார்த்து வந்தேன் எனது பெற்றோரைக் காணும் அவாவினேன். அவர் வந்தால் விடமாட்டார். விரைவில் கலத்தை விடுங்கள்' என்றாள். அவ்வளவு துடிப்புள்ளவரானால் அப்பெருமன்னர் நாகநாட்டிற்கே வந்தாலும் வந்துவிடுவாரே, - என்றாள் தோழி.

'போடீ, போ, இந்த ஒரு திங்களிலும் நான் யார் என்பதை அரிய முயன்று அவர் தோற்றார். அறிவிக்காமலே வந்துள்ளேன்' என்று பெருமையடித்துக் கொண்டாள் பீலிவளை. பேச்சு நின்றது.

மரக்கலம் இரவில் இந்தக் கரையை அடைந்தது. தோழியும் ஓர் ஏவலனும் இரங்கி வந்தனர். இங்குள்ள பாடி வீடுகள் விரைவில் பிரிக்கப்பட்டன. பொருள்களை வாரினர் விரைந்து கலத்தில் ஏற்றினர்; ஏறினர். தோழி ஏறிய விரைவில் அவளது கையில் விளையாடிய நான் மரக்கலக் கம்பி ஒன்றில் சிக்கி உடைந்தேன் கரையோரக் கடலில் விழுந்தேன். எனக்காக அவர்கள் பயணம் நிற்குமா என்ன? நீர்க்குள்ளேயே கிடந்தேன். அலைகளின் மோதலால் இங்குத் தள்ளப்பட்டுக் கிடந்தேன்.''

நான் ஓர் ஐயத்தை உசாவினேன்: ''இடையில் கேட்பதற்கு வருந்தாதே. பீலிவளை பிரிந்து சென்றதை அறிந்த மன்னன் என்ன செய்தான் என்பதை அறிவாயோ?''

''ஆம், அதனைப் பின்னர் அறிந்தேன். அரசனுடன் பீலிவளை இருந்தபோது இன்றியமையாத அரசியல் அலுவல் காரணமாக அரண்மனைக்குச் சென்று மீண்ட மன்னன் இவளது பிரிவை எண்ணி மயங்கிக் கலங்கினான். அவளே முன்னின்று தேடினான். தானே இப்பகுதிக்கு வந்தாள். இங்கேயிருந்த ஒரு புத்தச் சாரணரைக் கண்டான். அவரிடம் அவளைப் பற்றி உசாவினாள் நிலம், நீரெல்லாம் திரிந்து புத்தரைப் போற்றி வரும் அச்சரணர் தாம் அறிந்ததைக் கூறினார்:

'மன்னவ' நீ குறிப்பன கொண்டு அவள் இன்னள் என்பதை உணர்கிறேன். இப்போது யான் அவளைக் காணேன். ஆயி

னும். அப்பெண்ணைப் பற்றியான் பல்லாண்டுகளாகவே அறி வேன். அவள் பிறந்தபோதே இவள் இரவிகுல மன்னன் ஒருவனைக் கூடிக்கருவுடன் வருவாள்'' என்று கணி எடுத் துரைத்தான். அதன்படியே நிகழ்ந்துள்ளது. ஆனால், அவள் உன்னிடம் வரமாட்டாள். அவள் வயிற்று நினது மகன் வரு வான். அந்நினைவை ஒதுக்கி நினது கடமைகளைச் செய்வா யாக''[13] - என்று கூறிப் போனார்.

பொங்கி வரும் கவலையில் அழுந்திய மன்னன் மீள வகையின்றிப் போனான்.

நான் பத்துத் திங்கள் ஒன்றுமறியாது கிடந்தேன். பத்துத் திங்கள் கழித்து மறு சித்திரைத் திங்களில் முதல் கிழமையும் வந்தது. ஒரு நாள் நள்ளிரவு. முழு நிலவுக்கு இன்னும் நான் கைந்து நாள்கள் இருந்தன. யாரோ ஒருவன் கடலிலிருந்து கரையேறித் தள்ளாடி நடந்து வந்தான். களைத்தவனாக எனது அண்மையில் படுத்தான்.

'உயிரோடு தப்பிப் பிழைத்தாயே அந்தோ கலம் கவிழ்ந் ததோ? எந்த நாட்டவன் நீ?' - என்றேன் நான்.

பெருமூச்சோடு அவன் பேசினான்: 'நான் பிழைத்தது இருக்கட்டும். அந்தப் பச்சிளங் குழந்தை என்ன ஆயிற்றோ? அதற்குப் பொறுப்பேற்று வாங்கி வந்த எம் தலைவர் கம்பளச் செட்டியார் என்ன ஆனாரோ' என்று அழுதான்.

'என்ன பச்சிளங் குழந்தையா? என்ன ஏதோ புதிர் போடு கின்றாய்? சிறிது விளக்கக் கூடாதா?' - என்றேன்.

புதுச் செய்தியைக் கூறத் தொடங்கினான்:

''எமது தலைவர் கம்பளச் செட்டியார் புகார் நகரத்துப் பரதவர்: கடலோடும் வணிகர். சில திங்களுக்கு முன் வணிகம் கருதிப் பண்டைப் பொதிகள் ஏற்றிய மரக்கலத்துடன்

---

மணி: 13. " : 24 : 44 - 61

கடாரத்திற்குச் சென்றோம். எங்கள் தலைவரும் உடன் இருந்தார். கீழ் கடலிற் செல்வோர் செல்லுங்காலும் மீளுங்காலும் மணி பல்லவத் தீவில் இறங்கி அங்கமைந்த புத்தபாத மேடையை - பீடிகையைத் தொழுது செல்வது யாவருக்கும் பழக்கம். இஃது உனக்கும் தெரிந்திருக்கலாம். கடாரத்தில் வணிகத்தை முடித்துக் கொண்டு பண்டமாற்றாகப் பெற்ற ஆக்கப் பண்டங்களுடன் மிகுங்கால் மணிபல்லவத் தீவில் இறங்கினோம்.

அங்கு நாக நாட்டரசன் மகள் பீலிவளை எங்கட்கு முன்பே வந்திறங்கியிருந்தாள். அவளது ஏவற் சுற்றத்தாருடன் ஓர் அழகிய பச்சிளங் குழந்தை இருந்தது. அரச குலத்துக் குறிகளுடன் விளங்கிய அக் குழந்தை பிறந்து பத்தே நாள்கள் ஆகியிருக்கும். அதன் கையில் ஆதொண்டக் கொடியாலாகிய அணி இருந்தது அது நாக நாட்டு வளப்பத்தின் அறிகுறி போலும். அக்குழந்தைப் பக்குவமான பேழையின் உள்ளே அமளி போன்றமைந்தத் தொட்டிலில் கிடத்தப் பெற்றிருந்தது.

## பேழையில் குழந்தை

எங்கள் தலைவரும் நாங்களும் புத்த பீடிகையை வணங்கி மீளுங்கால் அரசி பீலிவளை எமது தலைவரை வணங்கி உசாவி யாரென்று அறிந்தாள். புகார் நகருக்குச் செல்லும் தக்கவர் ஒருவரை எதிர்நோக்கி இருந்த அவள் மிக மகிழ்ந்தாள். எங்கள் தலைவரிடம் அவள் அறிமுகப்படுத்திக் கொண்டதும் அங்கிருந்த பேழையைக் காட்டி 'இக்குழந்தை சோழ மன்னர் நெடுமுடிக் கிள்ளிக்கு உரிய குழந்தை. இதனை அவர்பால் சேர்த்து உதவ வேண்டும்'.[14] என்று வேண்டினாள். தான் வர இயலாதவள் என்பதையும் குறிப்பாக உணர்த்தினாள்.

பீலிவளை நெடுமுடிக் கிள்ளி பற்றிய செய்தி இலைமறைகாயாகப் பலராலும் அறியப்பட்ட செய்தியாகையால் அதனை

14. பீலிவளை தான் பயந்த புனிற்றிளங் குழவியைத் தீவகம் பொருந்தி தனிக்கலக் கம்பளச் செட்டிகைத் தரலும் மணிமேகலை; 24:44. 6.

14. ,, : 29 : 4, 6; 25 : 178 - 188

அறிந்திருந்த எமது தலைவரும் மிக மகிழ்ச்சியுடன் அதற்கிசைந்தார். வணங்கிப் பேழையுடன் குழந்தையைப் பெற்றுக் கொண்டார்.

அந்தப் பீலிவளை மிக நெஞ்சுரம் வாய்ந்தவள் போலத் தென்படினும் குழந்தையை இறுதியாக உச்சிமோந்த போதும், குழந்தையுடன் எமது மரக்கலம் புறப்பட்ட போதும் அவளது வாய் அலறவில்லை. கண்கள் அலறின. உரை பதறவில்லை. உள்ளம் பதறியதை மார்பின் விம்முதல் காட்டியது. அப்பதறல் வியர்வை மழையாகச் சிதறியது. எங்கள் மரக்கலம் கண்பார்வைக்கு எட்டாமல் மறைந்த பின்னர் என்ன நிலை பெற்றாளோ? சோழநாட்டு அரசகுமரனுடன் மிதந்து வந்த மரக்கலம் சோழ நாட்டுக் கடற்கரையை அடைய ஒரு நாட் பயணம் இருந்தது. திடீரென்று பெருங் காற்றும் கடற் கொந்தளிப்பும் எழுந்தன, மரக் கலத்தைப் பலவகையிலும் கரையில் சேர்த்துவிட முயன்றோம். இந்த இரவு தொடங்கியதும் முயற்சிகள் பயனற்றுப் போயின. நடுயாம இருளில் கலம் கவிழ்ந்தது..[15] அந்த நேரத்திலும் எமது தலைவர் பேழையின் பக்கத்திலேயே. இருந்தார். நான் அலைகளால் மோதுண்டு இங்கு வந்து கரையேறினேன்[16] கரைக்கு இரண்டு கல்களுக்குள்ளேயே இது நேர்ந்ததால் பலரும்பிழைத் திருக்கலாம். குழந்தை இருந்த பேழையும் மிதக்கும் அமைப்புடையது. பச்சிளங் குழந்தை என்ன ஆயிற்றோ? கம்பளச்செட்டியார் எவ்வாறு மன்னரைக் காண்பாரோ? எப்படிக் கூறுவாரோ? இப்பழிக்கு அஞ்சி என்ன ஆனாரோ? அறியேன்?-என்று அவன் கண்ணீர் விட்ட வாறே கூறி முடித்தான்.

விடிந்தது. கடற் கொந்தளிப்பும் காற்றும் குறையவில்லை: அக் கொந்தளிப்பிலும் காற்றிலும் சோழ நாட்டு வீரர்கள் கடற்கரையெல்லாம் எதையோ தேடி அலைந்து திரிந்தார்கள்.

கம்பளச் செட்டி உயிர் பிழைத்துக் கரை சேர்ந்து விட்டார். ஆனால் குழந்தையிருந்த பேழை கடலில் வீழ்ந்தது. பின்னர்

15. ,, ; 25 : 191

16. ,, : 29 : 8,9

காண முடியவில்லை. இச் செய்திய மன்னர்பால் செட்டி கூறியுள்ளார், என்பன அவர்கள் பேச்சிலிருந்து அறிய முடிந்தன. மன்னன் உள்ளத்திலும் கொந்தளிப்பும் புயலும் புகுந்தன. அயர்ந்து சோர்ந்தான். விரைந்து தேடச் செய்தான், கடற்கரைக்கண் பலகல் நீளம் இரண்டு நாள்கள் துழாவித் துழாவித் தேடினர். முடிவு குழந்தை இறந்திருக்க வேண்டும் என்பதாயிற்று.

அன்று பீலிவளை பிரிந்த போது சாரணர் கூறிய ''ஆங்கப் புதல்வன் வருஉ மல்லது பூங்கொடி வாராள்'' என்று கூறிய சொற்கள் அவனது நினைவில் நின்று அவனை ஊசலாட்டின. அவனுக்கு வேறு எந்த நிலைவும் இல்லை. தன் அரசக் கடமைகளை மறந்தான். இன்னம் இரண்டு நாள்களில் சித்திரைத் திங்களின் முழு நிலவு நாள். அன்று தொடங்க வேண்டிய இந்திர விழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். இந்த நினைவும் அவனுக்கில்லை. விழாவும் நிகழாது போயிற்று. முழு நிலவு நாளில் கடற்கொந்தளிப்புப் பெருகிற்று. பெரும் புயல்வேறு எழுந்தது. கடல் பொங்கியதால் இப் பக்ககத்துக் கடலோரப் பகுதி ஒரு கல் அளவிற்கு மேல் கடலில் மூழ்கியது, நான் ஒரு பேரலையால் இங்கு வந்து விழுந்தேன். கடற் கொந்தளிப்பு நிற்கவில்லை,

புகார் நகர் முழுதுமே கடலில் மூழ்கிவிட்டது என்றனர். அம்மக்களின் பிழைத்தோர் நிலப் பகுதிகளுள் ஓடினர். மன்னர் நெடுமுடிக்கிள்ளி அரசியற் சுற்றமெல்லாம் இன்றி ஒரு தனித்தவனாக புகார் நகரை விட்டுப் போயினானாம்[17] உறையூர் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான் என்றனர்,

புகார் நகரத்திலிருந்த புத்தத் துறவிகளும் இங்கு வந்தடைந்தனர், நாற்புறப் பகுதிகட்கும் ஓடிய மக்களிற் பலர் இப்பகுதியையும் அடைந்து தங்கி வாழத் தொடங்கினர்.

---

12. ''இலங்குநீர் அடைகர அக்கலங் கெட்டது,. -மவிமேகரலை :25: 101.
13. ஞாணர்திடும் அந்நாள் கூரிருள் யாமத்து அடைகரைக் கணித்தா அம்பி கெடுதலும்-மணிமேகலை :2 :8,0.

I . '' : 25 ; 299

'அப்படி ஒரு செய்தி. மிதப்புப் பேழை ஒதுங்கியது. குழந்தையை எடுத்து யாரோ வளர்த்து வருகின்றார்கள் என்று ஒரு பேச்சு. 'ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம் சான்றோ'[18] ரிடம் வளர்கிறது என்று ஒரு கூற்று. அக்குழந்தை உயிருடன் வளர்ந்தான் என்பது ஓர் உண்மை.

அவன் கடல் அலைகள் - திரைகள் தர வந்தவன் என்ற வழக்கால் 'திரையன்' எனப் பெயர் பெற்றான என்பது ஒரு பேருண்மை. அவனே இளந்திரையனாகக் காஞ்சியிலிருந்து ஆண்டான்[19] என்பது ஒரு வரலாறு. 'கடல் இரவும் பகலும் தூங்காது மகிழ்ச்சி கொண்டதாக ஆரவாரிப்பதற்குக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் நயமாக ஒரு காரணங் கூறினார், "வீரமும் ஆட்சித் திறனும் மிக்க திரையனை நான் கொண்டு வந்து தந்தேன் என்ற பெருமை கொண்டு கடல் ஆர்ப்பரிக்கிறது[20]" என்று பாடி மகிழ்ந்தார்.

### இளந்திரையன்

பீலிவளை சுற்றியனுப்பிய தொண்டைக் கொடியின் குறியால் 'தொண்டமான இளந்திரையன்' ஆனான் என்பது ஓர் உரை. அஃதிருக்கட்டும் ஊர்ச் செய்திக்கு வருவோம்.

புகார் நகரைக் கடல் கொண்டதும், கலம் கவிழ்ந்துக் குழந்தை காணாமல் போனதும் எங்கும் பரவின. மக்களிற் பலர் இரண்டையும் இணைத்துக் 'குழந்தையின் கவலையால் மன்னன் இந்திரவிழாவைக் கொண்டாட மறந்தமையான் தெய்வம் சினங் கொண்டு கடலைப் பொங்கவைத்து அழித்தது' என்று கூறினர்.

நாக நாட்டார் செய்தியறிந்தனர். குழந்தையை அனுப்பிப் பிரிந்த கவலையிருந்தாலும் உரியவர்பால் சேர அனுப்பியதையும் தனது குடும்பம்பற்றி அலரும் பழியும் நேராது போனதையும்

---

18. சிலம்பு : 19 : 55, 56
19. பெரும்பாண் : 37 நச்சர் உரை
20. ,, : இறுதி வெண்பா

எண்ணிப் பீலிவளை அமைதியுற்றிருந்தாள். அவளுக்கும் வளைவணர்க்கும் இப்பகுதிபால் நற்கருத்துக் கொண்டிருந்த மக்களுக்கும் புகார் நகர் அழிந்தமை பெருங்கவலையாக இருந்தது. குழந்தை பற்றிய செய்தியறிந்த பீலிவளை சாம்பினாள். குழந்தை உயிரோடிருக்கும் என்ற நம்பிக்கையில் ஐயத்தையே புகவிடாத அவள் இப்பதிக்கு ஒரு குழுவை அனுப்பினாள்.

நாக நாட்டார் கலங்களில் வந்து குழந்தை பற்றி உசாவி அறிந்தனர். காலப் போக்கில் குழந்தையைப் பற்றிய ஏதோ செய்தி அறிந்தவர் போலப் பலர் இங்கே நிலைத்துத் தங்கினர்.

**புகாருக்குப்பின் நாகை**

புகாரின் அழிவிற்குப் பின்னர் புத்த மதத்தார் இங்கு பல்கினர். மக்கட் கூட்டமும் வந்திறங்கிப் பெருகிற்று. ஒரு நகராக உருவெடுக்கும் அடிப்படைகள் அமைந்தன. அக்காலத்தும் இப்பகுதி ஓர் ஊர்ப்பெயராக வழங்கப்படாமல் ஒரு பகுதிப் பெயராகிய "படரி திட்ட" என்னும் பெயராலேயே வழங்கப்பட்டு வந்தது.*

கரையோரத் தோப்புகளில் நாக நாட்டாரின் குடியிருப்புகள் பெருகின. எங்கோ வளர்ந்த திரையனைக் காக்க வந்த நாகர்கள் இங்கு நிலைத்தனர். புகார் வணிகத் துறையாக இருந்தக்கால் வணிகங் கருதி வந்த வெளிநாட்டார் இப்பகுதி மேல் கவனங் கொண்டனர். வேறு அமைப்பான துறையும் இல்லை. சோழ நாட்டுப் பகுதிக்கு வரும் உலகோர்க்கு இப்பகுதியே துறைமுகமாயிற்று. கலங்கள் வந்து நின்றன. வணிகம் பிடித்தது. உள் நாட்டு மக்களும் வந்து குழுமத் தொடங்கினர்.

இஃதுடன் இது நிற்பதாக. இடையே சோழ மன்னர் நெடு முடிக்கிள்ளி பற்றிய செய்தியை அறிவோம். அதனால் மற்றொரு அடிப்படையை அறியலாம்.

ஆண்டுகள் ஓடின. இடைக் காலத்தில் எங்கோ வளர்ந்த திரையன் நாகர்களால் வெளிப்படுத்தப்பட்டான். குழந்தையாய்

---

* "ஆசார்ய தன்மபாலதேரோ ஸிமென திடஸ்வ சமீபே டமிளாரட்டே படரதித்தமிறெ"

– பாலிமொழியில்

வந்தாக்கால் கையில் அணியப்பட்டிருந்த தொண்டைக் கொடி அவன் நாக நாட்டு மகன் என்பதற்கு ஒரு குறியாய்க் கொள்ளப் பட்டது.

நாளடைவில் இச் செய்தி நெடுமுடிக் கிள்ளிக்கு அறிவிக்கப் பட்டது. எதிர்பாராத செய்தியாம் இதனைக் கேட்ட மன்னன் வியந்து பூரித்தான். இச் செய்தியில் மிக்க கருத்தூன்றிய மன்னன் உரிய முயற்சி செய்து தனது அருமருந்தன்ன மகனை அடைந்தான்; செம்மாந்தான்.

புகார் நகரின் அழிவிற்குப் பின்னர் முடிமன்னன் நெடுமுடிக் கிள்ளி உறையூர்க்குச் சென்றான் என்று அறிந்தோம். அதற்கு முன்னரே உறையூர் மேம்பட்ட ஊராகவும் சோழத் தலைநக ராகவும் திகழ்ந்தது. புகார் நிகழ்ச்சிக்குப் பின்னர் அவனது தாயத்தாரிடத்தே பலவகைக் கருத்துக்கள் கிளைத்தன. நெடு முடிக் கிள்ளிக்குப் பின்னர் அரசுரிமை பற்றியக் கருத்துச்சூழல் சிக்கலாகவும் கலவரமாகவும் மாறியது.

ஆவூர் அரணிலும் மனையிலும் இடம் பெற்றிருந்த சோழ குலத் தாயத்தார் இது பற்றி ஆழ்ந்து சிந்தித்தனர். புகார் வள மாக இருந்த போதே காஞ்சிபுரத்தில் நெடுமுடிக்கிள்ளியால் ஆளுநராக அமைக்கப்பட்டிருந்த தொடுகழற்கிள்ளி தனது இள வல் இளங்கிள்ளியோடு ஆண்டான். அங்கும் புத்தம் இடம் பெற் றிருந்தது. இளங்கிள்ளி புத்தக் கோட்டம் அமைத்ததுடன் மணி பல்லவத் தீவுச் சோலை போன்றே ஓரிடத்தைச் செப்பனிட்டு அமைத்து அங்குள்ள புத்த பீடிகை போன்ற ஒன்றையும் அமைத் தான். அதுபோது காஞ்சிநகர் கொடிய வற்கடமாம் பஞ்சத்தில் அடிபட்டுப் புல்லென்றது[21].

பூம்புகாரின் அழிவின்போது வெளி நாட்டிலிருந்து மணி மேகலை மீண்டு வந்து நிலையறிந்தாள். வருந்தியவள் பல இடங் களுக்கும் சென்று இறுதியில் காஞ்சியை அடைந்தாள். தனது அறத்தால் அந்நகரில் வற்கடம் தீர உதவினாள். அங்கேயே தங்கிப் 'பவத்திறம் அறுக' என நோற்றாள்.

---

21. மணி : 28 : 156 - 175

புகார் அறிந்து ஏறத்தாழப் பதினைந்து பதினாறு ஆண்டுகள் பல சிக்கலான சூழ்நிலைகளோடு கழிந்தன. நெடுமுடிக் கிள்ளியின்பாலிருந்து எங்கள் நாட்டுக் குலக்கொழுந்தாம் இளமை பொலியும் திரையன் – இளந்திரையன் நல்ல திறமுடையான் ஆனான். சோழ நாட்டு அரசியற் சூழலை நன்கு ஆய்ந்து பார்த்த மன்னன் இளந்திரையனைக் காஞ்சியில் அமைக்க எண்ணினான். அதற்கேற்பத் தொடுகழற்கிள்ளி இறந்தான். இளங்கிள்ளி ஆட்சியேறி ஆளுங்கால் இளந்திரையனாம் எம் ஏந்தலை இளவரசனாக்கினான். இளங்கிள்ளியின் ஆட்சிக்குப் பின்னர் இளந்திரையன் அரசனாகி ஆளத் தொடங்கினான். அவன் செங்கோலனாகித் திகழ்ந்தான். வீரனாக ஒளிர்ந்தான். வள்ளன்மையிற் சிறந்தான். கடியலூர் உருத்திரங் கண்ணனார் இவற்றையெல்லாம் அமைத்துப் பெரும்பாணாற்றுப் படை என்னும் நூலை இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாக்கிப் பாடிக் களித்தார்.

இவ்வாறு பேசி வந்த வளையல் துண்டு இடை நேரம் விட்டது. நீண்ட நேரம் செவி திறந்து வாயடைத்துப் போய் வியப்பிலும் புதுமை உணர்ச்சியிலும் ஆழ்ந்திருந்த நான் அவற்றினின்றும் சிறிதளவு விடுபட்டுப் பேசினேன்:

‘பெருமைக்குரிய சங்கு வளையலே! நாகர்பட்டின வரலாறு கூறப் புகுந்து அடிப்படை விளக்கந்தந்து வந்த நீ காஞ்சிபுரத்திற்கு இழுத்துச் சென்று விட்டாயே’ என்றேன்.

‘ஆம், அந்தச் செய்தியும் ஒரு துணைச் செய்தியே. ஆயினும், என் நாட்டுத் தோன்றலைக் குறிப்பிடும் ஆர்வத்தில் நான் மிக மகிழ்கின்றேன். அந்தச் செய்தியால் உன்னைப் பதினைந்து ஆண்டுகட்குப் பின்னர்க் கொண்டு சென்று விட்டேன்.

இந்த இடைக் காலத்தில் இந்தப் பதரி திட்டப் பகுதி நினைத்துப் பார்க்க இயலாத அளவில் பொலிவு பெற்று வளர்ச்சியுற்றுவிட்டது.

கடற்கரைக்கண் நாக நாட்டார் குடியிருப்புகள், தோப்புப் பகுதியில் நிறைந்தன. உட்பகுதியிலும் நாக நாட்டார் இடம் பெற்றனர். வெளிநாட்டிலிருந்து வந்தோர் இறங்கியதும் நாகர்

களையே கண்டனர். அவர்கள் காணுமளவு நாகரும் மேலோங்கிய நிலையிலும் வனப்பிலும் தோன்றினர். வந்தோர்பால் இவர்களே முன் நின்று தொடர்பு கொண்டனர்; உதவினர். தன்மையோடு பழகும் பண்புகளை இவர்கள் பெற்றிருந்தனர். இவர்களது குடியிருப்பு அமைப்புகள் செவ்வனே காட்சியளித்தன. இப்பகுதி நாகரது பகுதி என்றே யாவரும் கருதுமாறு இருந்தது.

வெளி நாட்டார் வரவினால் பெருகிய வணிகம் இந்நகரில் பெருகியது. ஏற்றுமதி இறக்குமதிகள் புகார் போன்று பெருகின. இவற்றால் இப்பகுதி ஒரு பட்டினமாக - துறைமுகமாக உருவாயிற்று. நாகரது குறிப்பிடத்தக்க வாழ்வாலும் வணிகப்பெருக்கத்தாலும் இணைந்த நிலையில் இந்நகர் 'நாகர்ப்பட்டினம்' என்று பெயர் பெறுவதாயிற்று.

சீன நாட்டாரும், கடாரத்தாரும், ஈழத்தாரும், யவனத்தாருமாக வெளி நாட்டார் வணிகராகக் குழுமினர். புத்த மதத் திருவிடாகக் கருதி வந்தோரும் பலர். அதற்கேற்ப அம்மதப் பெருக்கமும் வளர்ந்தது. அது குறிப்பிடத் தக்க பெருங்கதை என்பர். என்ன அகல விழித்துப் பார்க்கின்றாய்?

ஆம் வியந்துதான் பார்க்கின்றேன். எமது நகரின் பெயரையே அறியாமல் இருந்து வருகின்றோமே என்ற அவலத்தினால் எழுந்த வியப்பு இது. ஊர்ப் பெயர் பற்றிய எண்ணமே எவருக்கும் எழுந்ததில்லை. எழுந்தவர்க்கும் நாகம்-பாம்பு பட்டினமாகவே பட்டது. 'நாகநாதர்கோவில் இருக்கிறது பார்; அங்கு பாம்பு வந்து இன்றும் பாலும் முட்டையும் குடிக்கிறது பார்' என்போரே காணப்படுகின்றனர். உண்மையை உணர்த்திய உனக்கு நன்றி என்றேன்.

நன்றி இருக்கட்டும். நாகர்பட்டினம் என்ற பெயரே அக்காலத்தில் நிலைத்தது. சோழ நாட்டுத் துறைமுகம் இதுதான் என்றமைந்தது. உறையூர்க்கண் இருந்த சோழப் பெருமன்னரது ஆட்சி அலுவலகங்கள் இங்கு அமைந்தன. வணிகச் செல்வர்களது வளமனைகள் பெருகின. பண்டசாலைகள் மலிந்தன. வணிகத் தொழிலகங்கள் தளம் பெற்றன. புத்தமதப் பெருஞ்சான்றோர் சைத்தியங்கள் அழகுற்றன. வந்து மீளும் வெளி நாட்டார்க்கு வளமனைகள் எழுந்தன. வந்தோரில் பெரும்

பாலோர் புத்த மதக் கோட்பாட்டினராகையால் கடார நாட்டு மன்னன் முயற்சியாலும் முதல் இராசராசன் அருளாலும் பொன் குன்று எனத்தகும் ''சூளாமணி விகாரம்'' உருவாகியது.

இவைகளின் அமைப்பால் இந்நகர் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினம் என்னும் நிறைவைப் பெற்றது; பட்டினப் பாக்கம் என விளங்கியது.

பொது மக்கள், சிறு தொழில் செய்வோர், ஏவலர்கள், கலைஞர்கள் வாழும் பகுதி இப்பட்டினப் பாக்கத்தின் வடக்கே அமைப்போடு ஓர் ஊராக உருவாயிற்று. அப்பகுதியும் நாகர் குறிப்புடன் நாகர் ஊர் - நாகரூர் என்றாயிற்று. நாகரூரே காலப்போக்கில் நாகூர் என வழங்கப்பட்டது.

புகார் நகர் அமைப்பைப் போன்றே பட்டினப் பாக்கமும் மருவூர்ப் பாக்கமும் அமைந்தன. இன்னும் பட்டினம் என்ற சொல்லும் ஊர் என்ற சொல்லும் புகாரின் நிழல்களாகப் புகாரின் தடங்காட்டி நிற்கின்றன.

நாகர்பட்டினத்தின் வளர்ச்சி நாடெங்கும் பரவியது. ஏன், உலகிலும் பரவியது. தமிழகத்திலும் பிற இந்தியப் பகுதிகளிலும் வாழ்ந்தோர் வணிகம் கருதியும், அலுவல் கருதியும், வாழ்வியல் கருதியும் நாகையைச் சூழ்ந்தனர். நகரின் புறத்தே அவ்வவ் வினத்தார் சேர்ந்த சேரிகளை அமைத்துக் கொண்டனர். அங்கிருந்து பகலில் இந்த நகர்க்குவந்து தொழிலும் அலுவலும் ஆற்றி வளர்ந்தனர். இக்காலத்திலும்...

'ஆம், ஆம்' - நான் குறுக்கிட்டேன் - 'இக்காலத்திலும் நீ குறிப்பதன் அமைப்புகள் அப்படியே உள்ளன. நாகை நகரின் கிழக்குப்புறக் கடற் பகுதி அன்றி ஏனைய மூன்று திக்கிலும் நக வளைவாக நோக்கி வந்தால் வெளியிலிருந்து பல இனத்தார் குடியேறிச் சேரி அமைத்துக் கொண்டமை புலனாகிறது. சிறிது தள்ளிய தெற்கில் செட்டிமார் சேர்ந்து வாழ்ந்த சேரி (சேர்ந்து வாழும் இடம்) இன்றும் செட்டிச்சேரி எனப்படுகின்றது. அதற் கப்பால் நாகையில் தென்மேற்கில் வடுக இனத்தார் சேர்ந்து வாழ்ந்த சிற்றூர் 'வடுகச்சேரி' என உள்ளது. இன்றும் அப்

பகுதியில் வடுக மொழி பேசுவோர் பெரும்பாலோராக (நாயுடு மாராக) நிலங்களுக்கு உரியவர்களாக வாழ்கின்றனர். மேற்கில் புறவர் சேர்ந்து வாழ்ந்த சிற்றூர் 'புறவர்சேரி' என உள்ளது. அதனைப் பொருள் வைத்தசேரி என்று வழங்கவும் தொடங்கி அதற்குக் கதையும் கட்டியுள்ளனர். வடமேற்கே பள்ளங்களை மேடுபடுத்தித் தொழில் புரிவோர் திட்டர் என்போர் சேர்ந்து வாழ்ந்த சிற்றூர் திட்டர்சேரி - 'திட்டச்சேரி' என்றுள்ளது. இப் பெயரன்றிப் பெயர்க்குரியார் தொடர்பும் இங்கில்லை. வடக்கே நாகரூர்க்கும் நாகைக்கும் இடையே பார்ப்பனர் சேர்ந்து வாழ்ந்த 'பார்ப்பனர் சேரி' இன்றும் பெயரலவில் உள்ளது.

இதுபோன்ற நிர்த்தன மங்கலம், சங்க மங்கலம், புத்தகுடி, புத்தரூர் - புத்தூர் என்னும் சிற்றூர்கள் சைவ, சமண புத்த மதத்தார் இடம் பெற்றதன் நினைவாக உள்ளன என்றேன்.

'ஆம். இக்கடற்கரைக்கண்ணே உலவ வருவோரது தன்மை கொண்டும் உரையாடல் கொண்டும் யானும் உணர்ந்திருக்கின் றேன்-' என்று என் கருத்தை வழி மொழிந்து தன் பேச்சைத் தொடர்ந்தது வளையல் துண்டு:

'எனக்கொரு பெருங்குறை உண்டு. அதனைக் குறிக்காமல் முடிக்க மனமில்லை. இப்பகுதி நகராக உருவாகவும். நாகர்பட் டினம், நாகரூர் எனப் பெயர் பெறவும் அடிப்படைக் கருவூலமான வித்து என் நாட்டுத் தோன்றல் இளந்திரையனே. அவன் இங்கு அமைந்து ஆள இந்நகர் ஒரு பீடு பெறாது போயிற்றே என்பதே அப்பெருங்குறை. என் செய்வது?- என்றொருபெரு மூச்சு விட்டது

ஆறுதலாக நான் சில சொல்லி வைத்தேன்: இளந்திரையன் ஆளாது போயினும், அவன் வழி வந்தோன் ஆண்டான் என்ப தற்குச் சான்றுகள் உள்ளன. "நாகப்பட்டினத்துச் சோழன்"[22] என்று உரையாசிரியரால் குறிக்கப்படுகின்ற சோழன் இளந் திரையன் வழி வந்த சோழனாக இருக்கலாம். இந்நகரை

22. பெரும்பாண் : 37 நச்சர் உரை

மன்னர் ஆண்டனர் என்பதற்குச் சான்றுகள் இன்றும் சொற்களாக உள்ளன மேலைக் கோட்டை வாயில், வடக்குக் கோட்டை வாயில் என்னும் பெயர்கள் இன்றும் வழங்கப்படுகின்றன. இந்த எல்லைச் சொற்களை வைத்துக் காணும்போது பட்டினப்பாக்கத்தின் எல்லைகள் இவை என்பதையும் அப் பட்டினப்பாக்கத்தைச் சூழக் கோட்டை இருந்தது என்பதையும் அறியலாம் யானைகட்டி முடுக்கு என்னும் தெருப்பெயர் அரசு யானையின் உறையுளைக் குறிப்பதாகலாம். மருத்துக் கொத்தளத் தெரு என்பது போர்க்குரிய வெடிமருந்துகள் உருவாக்கப் படும் இடத்தின் குறிப்பாகலாம். நாணயக்காரர் தெருஎன்பது நாணய வார்ப்பு அல்லது நாணயமாற்று நடந்த பகுதியாகலாம். எனவே நீ பெருங்குறைபடத் வேண்டியதில்லை'' என்றேன்.

முடிவுரையாக வளையல் துண்டு ''இதுவரை யான் கூறியவை நாகர்பட்டினம் உருவான வரலாறு. 'நாகர்பட்டினம்-நாக பட்டினம்' எனப்பெயாபெற்றதன் மூலக் கருத்துகள். கி.பி இரண்டாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையிலான வரலாறு இது. இதற்குமேல் வணிக வரலாறு நீண்டது. புத்தமதப் பெருக்க வரலாறு குறிப்பிடத்தக்கது. பிற மதக் கோவில்கள் எழுந்த வரலாறு செம்மையானது. சைவ வைணவச் சான்றோர் பாடிய வரலாறு பாடல்களாக உள்ளது. மேலை நாட்டார் வருகை அடுத்த வரலாறு. நில மாற்றங்கள், இயற்கை மாற்றங்கள், தொழில் மாற்றங்கள், இன மாற்றங்கள், இருப்பிட மாற்றங்கள், பல சுவையான செய்திகளைத் தருவன. அவற்றினைச் சான்றோர் வாய்க்கேட்டும், கல்வெட்டு, பட்டயம், இலக்கிய இலக்கண நூல்கள், செவிவழிச் செய்திகள், நாட்டுப் பாடல்கள் முதலியவற்றை முனைந்து அறிந்தும் நீ நல்ல வரலாற்றை உருவாக்குவாயானால் இந்தப் பழைமையான நகருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்தவன் ஆவாய்.

வாழ்க 'நாகர்பட்டினம்' என்று சங்கு வளையல் துண்டு முடித்தது.

அதன் விருப்பப்படியே அதனைக் கடற்கரையிலே விட்டுப் பிரியா விடைபெற்றேன்.

(இக் கட்டுரையில் வளையல் துண்டு கற்பனை. பிற யாவும் சான்றுகள் கொண்டவை.)

# சுளையும் இல்லை தோலும் இல்லை

## முடிமேல் அடி

'இதனை ரட்சித்தாரடி இரண்டும் என் முடிமேலின'[1]

- இத்தொடர் கல்வெட்டு ஒன்றின் ஈற்றில் அமைந்த தொடர்,

சென்னை-திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி கோவில் கடவுளுக்கு இரவு அமுதுபடைப்பில் முட்டுப்பாடு ஏற்பட்டது, அதற்குத் தந்திவர்மன் என்னும் பல்லவ மன்னன் ஆட்சியில் அலுவலனாக இருந்த புகழ்த்துணை விசயதரையன், நெல்லும் பொன்னும் வழங்கி ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்தினான். அதைக் குறிக்கும் கல்வெட்டின் ஈற்றுத்தொடரே மேலே குறிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருள் : 'இந்த அறத்தைக் காலமெல்லாம் பேணிக் காத்துச் செய்து வருவோரின் அடிகளை என் தலைமேல் கொண்டு வணங்குகின்றேன்' - என்பது. கடவுள் திருவடியை முடிமேல் கொள்ளும் ஓர் அலுவலன், மாந்தன் காலைத் தலையில் கொண்டு வணங்க முன்வந்தான். தான் வகுத்த நல்லறம் தொடர்ந்து நிகழவேண்டும் எனும் பேரார்வம் அவனை அவ்வளவு பணிய வைத்தது. அவ்வறம் என்னவாயிற்று?

## சுளை இல்லை

விசயதரையனது வேண்டுகோள் மாற்றுமுறை ஒன்றால் நடைமுறையாகியுள்ளது. அக்கல்வெட்டு அமைந்த கல் அக்கோயில் கருவறை வழியில் தளவரிசைக் கல்லாகக் கிடக்கிறது, போவோர் வருவோர் அடி அதன் முடிமேல் படுகிறது. இஃது எத்துணை அவலம்!

1. Epigraphica Indica Vol. VIII P. 290

இவ்வறக் கட்டளையின் பொருட்செல்வம் என்ன ஆயிற்று என்பதற்குத் தடங்களைக்கூடக் காணமுடியவில்லை. அறக் கட்டளை கல்லெழுத்தாய் உள்ளது; அறம் நீரெழுத்தாய்ப் போயிற்று. கல்வெட்டு இருக்கிறது; அறப்பொருள் இல்லை. தோல்சிதையாமல் இருக்கிறது; சுளை இல்லை. விழுங்கியவர் எவரோ?

இதுபோன்று கடவுளுக்கென்றும் மக்களுக்கென்றும் வழங் கப்பட்ட எத்துணையோ விளைநிலங்கள், பொன்னணிகள், முத்துமணிகள், தட்டுமுட்டுப் பொருள்கள் பெரும் மதிப் புடையன சென்றசுவடு தெரியாமல் போயின.

**அறச்செயல் ஆறுமுறை.**

மன்னரோ மற்றவரோ அறஞ்செய்ய எண்ணினர். நிலத்தை, பொருளை ஒதுக்கினர். அறத்தைக் கட்டளையாக்கி னர். அவையில் ஆணையிட்டனர். ஆணையைக் கேட்டு எழுதும் தலைமை ஓலை எழுத்தர் ஏட்டில் எழுதினர். ஏட்டெழுத்து அழியுமே என்று செப்புத் தகட்டில் பொறித்தனர். செப்புப் பட்டயமும் தப்பித் தவறுமே என்றும், கைப்படு கயவரால் காணாமற் போகுமே என்றும் கருதினர். அழியாமல் கல்லில் வெட்டினர். பலரும் காணும் பாங்கில் கோவில் சுற்றுச் சுவர் களில் பதித்தனர்.

இவ்வாறு பொறிக்கும் நோக்கம், மன்னனது வீரமும் வெற் றியும், அறமுங் கொடையும், பெயரும் புகழும் காலமெல்லாம் தெரியவேண்டும் என்பது மட்டும் அன்று; அவ்வறம் தொடர்ந்து நிகழவேண்டும்; அவ்வாறு ஓர் அறம் உளது என்பதை இறையன் பர்கள் காலமெல்லாம் அறிய வேண்டும்; அதன் அறக்காப்பை மேற்கொண்டோர் அஃதுணர்ந்து தொடர்ந்து பேண வேண்டும்; 'இக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அறத்தை நாம் செய்கின் றோம்' என்று செய்பவர் மகிழ வேண்டும்; இவற்றுடன்; 'இவ்வறத்தைச் செய்யாமற் போனால் பழி நேரும், பொது மக்கள் தூற்றுவர்' எனும்அச்சமும் இருக்க வேண்டும் என் னும் கருத்துக்களையும் உள்ளடக்கியதே கல்வெட்டு அமைப்பு.

முற்காலத்தில் எழுந்த இதுபோன்ற அறச்செயல்களை ஆறு முனைகளைக் கொண்டதாகக் கொள்ளலாம்.

ஒன்று, அறங்கொள்ளும் அறக்களம். இக்களம் கோவிலாகவோ பொது அறநிலையங்களாகவோ அமைந்துள்ளன.

இரண்டு, அறக்கொடையாளர். இவர் மன்னராகவோ, ஆட்சி அலுவலராகவோ, செல்வராகவோ, குழுவினராகவோ இருந்தனர்.

மூன்று, அறப்பொருள். இது நிலமாகவோ பொன்னாகவோ அணியாகவோ தட்டுமுட்டுப் பொருள் களாகவோ ஆ, ஆடு உயிரினங்களாகவோ வழங்கப் பட்டவை.

நான்கு, அற ஆவணம். இஃது ஆவண ஓலை, செப்புப் பட்டயம், கல்வெட்டு என விரிந்தது.

ஐந்து, அறத்தைச் செயற்படுத்தும் அறங்காவலர். இவர் கொடையாளரால் ஒப்படைக்கப்பட்டவரோ ஆட்சிக் குழுவினரோ ஆயினர்.

ஆறு, இவ்வைந்தின் அடிப்படையில் நிகழ்ந்த அறச்செயல். கடவுளுக்குரிய வழிபாட்டுப் படைப்புகள், ஒப்பனைப் படைப்புகள், நாளீடு தொடங்கிய பூசெய் விழா நிகழ்ச்சிகள், மக்களுக்குரிய பொதுநலன்கள் என நிகழ்ந்தவை.

இவ்வாறும் இக்காலம் நம்மிடையே எந்நிலையிலுள்ளன?

இவ்வாறனுள் அறக்கொடையாளர் முற்காலத்தவர். அவர் எவரும் இக்காலத்து இலர். கல்வெட்டில் காணப்படும் அறச்செயல்கள் பெரும்பாலும் யாவுமே அப்பொருள்களின் பயன் கொள்ளும் நடைமுறையில் இல்லை என்பது முடிவான ஒன்று. அறங்காப்பாளராக அறிவிக்கப்பட்டோரும் இக்காலத்தில் இலர். அப்பதவிகளும் மாறிவிட்டன.

எனவே, தற்காலத்தில் பொருத்திக் காணுதற்கு இவை மூன்றும் இயைந்து வாராதன.

ஏனைய அறக்களம், அறஆவணம், அறப்பொருள் ஆகிய மூன்றின் தற்கால நிலைகள் எண்ணற்பாலன. இவ்வெண்ணம் பெரும் வியப்பையும், ஏமாற்றத்தையும், மன உளைச்சலையும் தரும் முடிவுரையைக் கொண்டவைதாம். எனினும் அம்முடிவுரையிலும் ஒவ்வொன்றாக இழந்து நிற்கும் படிகளைக் காண முடிகிறது.

தொடக்கத்தில் குறிக்கப்பட்ட திருவல்லிக்கேணி அறச்செயலுக்குரிய அறக்களமாம் பார்த்தசாரதி கோவில் இக்காலத்திலும் இருக்கிறது. அற ஆவணமாம் கல்வெட்டு கிடக்கிறது. நெல்லும் பொன்னும் ஆகிய அறப்பொருள் போன சுவடும் இல்லை. இஃது ஒன்று போனதற்கு எடுத்துக்காட்டாகிறது.

## தோலும் இல்லை

மற்றொன்றும் போன ஒன்றைக் காண முனைந்தால், நம் பெருமன்னன் இராசராசன் நினைவிற்கு வருகின்றான்.

சோழமாமன்னன் இராசராசன் வீரத்தின் விளைநிலம்; வெற்றியின் கொள்கலம்; ஆட்சியில் அணிகலம்; அறச்செயலின் அடித்தளம். இப்பெருமகனது பல்வகைத் திறனையும் கண்டு வியந்தோர் பலர். அவன் காலத்திலேயே அவனுக்குச் சிலை வடிக்கப்பட்டது.

அச்சிலை செம்பால் உள்ளே கூடாக இல்லாமல் கட்டியாகச் செய்யப்பட்டது. $7\frac{1}{2}$ அங்குலம் நீளம் $7\frac{1}{2}$ அங்குலம் அகலம், 4 அங்குலம் உயரமுடைய அடிப்பீடம்; அதன்மேல் $3\frac{3}{4}$ அங்குலம் உயரமுடைய தாமரை வடிவம்; அதன்மேல் அடி முதல் முடி வரை 21 அங்குலம் உயரமுடைய இராசராசனது முழு உருவம் அமைந்தது.

இச்சிலையை உருவாக்க எழுந்தவன் இராசராசனது அரசு அலுவலனாக இருந்தவன்; இராசராசப் பெருவுடையார் கோயில் தஞ்சையில் நிறைவேறியதும் அக்கோயில் நிறைவேற்று அலுவலனாக இராசராசனால் அமர்த்தப்பட்டவன். அவன் பெயர் பொய்கைநாட்டுக் கிழான் ஆதித்தசூரியன் என்பது.

துண்டு

இவன் இராசராச
மூவருடன் ஒப்பவைத்
சிலையையும் செய்தான். உடன் பரவை நாசசய
செய்தான. இராசராசனின் பட்டத்தரசி உலகமாதேவியா
சிலையையும் செய்தான். பெருவுடையார் சிலையையும் செய்து
இணைத்தான். இப்படிமங்களுக்கு அணிகலன்களாக இவனும்
கோவில்வெண்ணி நகரத்தாரும், குடிவாணிக்குடி நகரத்தாரு
மாக ஏறத்தாழ 28 பவுன் அளவில் வழங்கினர். அவ்வணிகள்
பொன் மணியிடையிட்ட அக்கமணிமாலை, சுரி, காறை,
பட்டிகை மோதிரம், பொற்பூ, குதம்பை, தாழ்வடம், கம்பி
முதலியன.

சிலையமைப்பு, சிலைகளின் அளவுகள், வழங்கிய பொன் பொருள்கள் ஆகிய யாவற்றையும் விவரமாகக் குறிக்கும் கல்வெட்டு பெருவுடையார் கோவில் மேற்குப்புற வாயிலில் உள்ள ஒரு மாடத்தில் கலையாமல், குலையாமல் காட்சியளிக்கிறது ஆனால் இதிற்குறிக்கப்பட்டுள்ள சுவையான பொருள்கள் பொன்னணிகள் 'எவர் அறிவார்' என்னும் நிலையில் ஆயின.

அணிகலன்கள் போகட்டும், அவற்றை அணியவேண்டிய பெருமன்னன் இராசராசனது திருவுருவச் சிலைபற்றி உசாவியதில் அப்படியொரு உண்மைப் படிமம் பெருவுடையார் கோவிலில் இல்லாதது தெரியவந்தது. தொடர்ந்து உசாவியதில் அச்சிலை செர்மனி நாட்டுப் பொருட்காட்சி யொன்றில் உளதாகத் தெரிகிறது. முடிவாக அறத்தின் களமாகியச் சிலையே நம் நாட்டில் இல்லாது போயிற்று.

இவ்வறத்தைப் பொறுத்தவரை அறஆவணக் கல்வெட்டு ஒன்றே உள்ளது. அறக்களமாம் படிமச்சிலை இல்லை. அறப் பொருளாம் அணிகலன்களும் இல்லை. எந்தக் காலத்தில் எவர் ஏப்பம் விட்டனரோ?

இரண்டு வகையான அறக்கட்டளைச் சிதைவுகளைக் கண்டோம். இவற்றை மீறியதாய் எத்தடமும் அற்று எம்முனையும் தெரியாத அறம் ஒன்றைக் காண்போம்.

ஒன்றும் இல்லை

தஞ்சையைவிட்டு நாகர்பட்டினமாம் நாகைக்கு வருவோம். தஞ்சைப் பெருமன்னன் இராசராசன் தொடர்பிலேயே நாகையைக் காணலாம்.

சோழநாட்டுத் துறைமுகப் பட்டினமாகவும் தலைநகரமாகவும் திகழ்ந்த பூம்புகார் நகரம் கடற்கொந்தளிப்பில் அழுந்தியது.[2] இது கி.பி 2ஆம் நூற்றாண்டளவில் நிகழ்ந்தது. இதற்குப் பின்னர் நாகர்பட்டினம் சோழநாட்டுத் துறைமுக நகராயிற்று. உலகத்து வாணிகக் களமாக வளர்ந்தது. குறிப்பாகச் சீனநாட்டாரும், கீழ்த்திசை நாட்டாரும் நாகையில் தங்கியும், வந்து சென்றும் வணிகம் செய்தனர் அவர்கள் யாவரும் புத்தமதக் கோட்பாட்டினர். நாகர்பட்டினம் ஒரு நகராக உருவாவதற்கு முன் இவ்விடம் புத்தமதத் துறவிகளின் பெருந்தளமாக இருந்தது 7ஆம் நூற்றாண்டளவில் சீன மன்னன் ஒருவன் தன் நாட்டு. வணிகர் வழிபாட்டிற்கென ஒரு புத்தப் பள்ளியை நாகையில் கட்டினான். அது காலப்போக்கில் காப்பற்றுப் போயிற்று.

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் கடாரம் என்னும் பர்மா நாட்டினை ஆண்ட சைலேந்திர குலத்தைச் சேர்ந்த 'குளாமணி வர்மன்' என்னும் மன்னன் நாகர்பட்டினத்தில் தன் நாட்டு வணிகர்களது வழிபாட்டிற்கென ஒருபுத்த விகாரையைக் கட்ட விரும்பினான்.

அந்நாளில் சோழநாட்டை ஆண்டுவந்த பெருமன்னன் இராசராசனுக்குத் திருமுகம் அனுப்பி அவனது இசைவை வேண்டினான். பரந்த உளப்பாங்குடைய சைவப்பெருமன்னனாகிய இராசராசன் பெருந்தகவுடன் இசைவளித்தான்.

கி.பி. 1005இல் குழாமணிவர்மன் தக்காரை அனுப்பி நாகையில் இசைவு வழங்கப்பட்ட இடத்தில் விகாரை கட்டும் பணியைத் துவக்கினான். பணிநிகழும்போதே நாகையில் உறைந்த புத்தத் துறவிகள் இருவர் தஞ்சை சென்று இராச

2. மணி : 25 : 203

ராசனைக் காண விழைந்தனர். இராசராசன் தஞ்சைப் புறநகர்ப் பகுதியில் இருந்த இராசாசிரய மண்டபத்தில் வீற்றிருந்து இருவரையும் வரவேற்று உரையாடினான். அவர்கள் நாகையில் புத்த விகாரை உருவாவதை அறிவித்தனர். அவர்களது உரையாடலின் குறிப்பை அறிந்து அவர்களைத் தக்க முறையில் வழியனுப்பினான்,

பின்னர்த் தன் அலுவலருடன் கூடிக் கலந்து நாகையில் உருவாகும் புத்த விகாரையின் தொடர்பிலும் பின்னர்த் தொடர்ந்து அதன் நடைமுறைக்காகும் வகையிலும் அறக்கட்டளை ஒன்றை அமைக்க முடிவு செய்தான். அக்காலத்துச் சத்திரியசிகாமணி வளநாட்டுப் பட்டினக்கூற்றத்துள் (பட்டினம் - நாகர்பட்டினம்) அடங்கியதாய் ஆனைமங்கலம் எனும் ஊர் இருந்தது. அவ்வூர் 9 வேலி 18 மா நன்செய் நிலத்தைக் கொண்டது. செப்பேட்டில் கண்டபடி 8943 கலம் 5 மரக்கால் 1 படி நெல் ஆண்டு வருவாயாக அளக்கப்பட்டது. அவ்வூரை நாகைப் பள்ளிக்கு வரியில்லாத நன்கொடையாக வாங்க முன் வந்தான். அவன் எண்ணம் அறக்கட்டளையாக உருவான முறை நோக்கத்தக்கது. ஓர் அறக்கட்டளை எத்துணை ஆய்வுகளுக்குப்பின் - எத்துணை கண்காணிப்புடனும் பொறுப்புடனும், பரவலானதும் நுணுக்கமுள்ளதுமான ஏற்பாட்டில் அமைந்தது என்பதை உணரலாம்.

மாமன்னன் ஆனைமங்கலத்தை நாகை விகாரைக்கு வரியில்லா நன்கொடையாக வழங்க ஆணையிட்டான். அந்த ஆணையை ஓலையெழுதும் அமுதன்தீர்த்தகரன், ஓலைமேலான் மும்முடிச்சோழப் பிரமராயன், மும்முடிச் சோழப் போசன் மதுராந்தக மூவேந்த வேளான் ஆகிய நால்வர் கூர்ந்து நோக்கி எழுதினர். இவர்கள் இக்காலத்து ஆவண வரைவாளர் போன்றோர். அவர்கள் அதனைப் பராக்கிரம சோழ மூவேந்த வேளான், மீனவன் மூவேந்த வேளான் ஆகிய இரு வினைப் பாட்டு ஆய்வாளர்பால் தந்தனர். அவர்கள் புறவுவரித்திணைக் களத்தார் என்னும் வரிவிதிக்கும் அலுவலாளர்பால் தந்தனர். அவர்கள் ஒப்புநோக்கி வரியேட்டுக் கணக்காளாகிய குமரன்

அரங்கன், சிங்கன் வெண்காடன் ஆகிய இருவரிடம் தந்தனர் ஒப்புநோக்கு முடிந்து அறக்கட்டளை உருவாகியது. உடன் ஆனைமங்கலப் பகுதியை எல்லைகட்டி எல்லைக்கல் நாட்டும் பணிக்கு ஏற்பாடு நடந்தது. அதற்குரிய அலுவலன் நல்லூர் தம்மடிப்பட்டன், தூப்பில் சீதரப்பட்டன் ஆகியோரை அழைத்து ஆனைமங்கலத்தில் இவ்வறக்கட்டளைக்குரிய நிலப் பகுதி எல்லையுடன் ஆணையிடப்பட்டது.

அவர்கள் சென்று ஊரார் சூழ ஆனைமங்கலமுடையான் கோன் புத்த வேளான் யானைமேல் ஏறிவர, எல்லையை வலம் வந்து எல்லை சுட்டிக் கல்லை நாட்டினர். நாட்டார் யாவரும் கைச்சான்றிட்டனர். பின்னர் அவ்வோலை இராசராச மன்னன் அவைக்கு வந்தது. அரசுத் தலைமை அலுவலர்கள் இறுதியாக ஒப்புநோக்கினர். இராசராசன் ஆட்சி யாண்டு 25 நாள் 163 இல் கைச்சான்றிடப்பட்டு அறக்கட்டளை உறுதி யாயிற்று.

இந்நாளில் ஆவணம் உறுதியாயினும் முன்கூட்டியே நடை முறைப்படும்படி அவனது ஆட்சியாண்டு 21 நாள் 96 முதல் பயன் கொள்ளும் முறையில் எழுதப்பட்டது.

இவ்வறக்கட்டளைச் செய்தி சூளாமணிவர்மனுக்கு அறிவிக் கப்பட்டது. அவன் கேட்டுப் பூரித்தான். ஆயினும் அவ்விகாரைக் கட்டி முடிப்பதற்குள் அவன் இயற்கையெய்தினான். அவன் மகன் மாற விசயோத்துங்க வர்மன் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றினான். தன் தந்தையின் நினைவாக அதற்குச் ''சூளாமணி விகாரை'' எனப்பெயரிட்டான். அத்துடன் அவ்வி காரையின் ஒரு பகுதிக்கு 'இராசராசப் பெரும் பள்ளி' என்று பெயரிட்டுத் தன் நன்றியுணர்வைப் பதித்தான்.

இவ்வறக்கட்டளை இராசராசனால் நிறைவேற்றப்பட்ட தாயினும் முறையாக உறுதிமுறி வாயிலாகச் சூளாமணி விகா ரைக்கு அது உரிமைசெய்யப்பட்டது இராசராசன் மகன் இரா

சேந்திரன் ஆட்சியிலாகும். இராசேந்திரன் உரிமையாக்கியதற்கு நன்றியாய் அவ்விகாரையின் ஒரு பகுதிக்கு 'இராசேந்திரப் பெரும்பள்ளி' எனப் பெயரிடப்பட்டது.

இதற்குப்பின் இங்கே குறிக்க நேர்வது என்னெனில், அக் காலத்திலேயே தோலிருக்கச் சுளைவிழுங்கிகள் இருந்தார்கள் என்பதே.

குளாமணி விகாரை கட்டப்பட்டு நிறைவேறிய அடுத்த நூற்றாண்டிலேயே இராசராசன் அமைத்த அறம் நிகழவில்லை. ஊர்க்கண்காணியாளர்கள் கோயிற் பெருச்சாளிகளாயினர் குளாமணி விகாரைக்குரிய நிலங்களைக் கவர்ந்து தமதுடைமை யாக்கிக்கொண்டனர். விகாரையின் அறச்செயல்களும் நடை முறைகளும் இடையீடுபட்டன. அப்போது ஆண்ட கடாரத் தரசனுக்கு இதனைப் புத்தத் துறவிகள் அறிவித்தனர். அவன் உடன் இராசனித்தியாதர சாமந்தன், அபிமானதுங்க சாமந்தன் ஆகிய இருவரையும் சோழநாட்டிற்கு அனுப்பினான். அந்நாளில் முதற் குலோத்துங்கன் சோழநாட்டை ஆண்டுவந்தான். கடா ரத்துத் தூதுவர் முறையிட்ட வேண்டுகோளை அவன் ஏற்று உடன் நடவடிக்கை எடுத்தான். உரிய அலுவலரை நாகைக்கு அனுப்பி நிலங்களைக் கைப்பற்றி மீட்டு மீண்டும் செப்புப் பட்ட யம் மூலமாக உறுதி செய்து விகாரைக்கு வழங்கினான்.

தற்கால நிலையில் இவ்வறம் பற்றி நினைக்கின் ஒன்றைக் குறிக்கலாம். அது ஆனைமங்கலம் என்ற ஊர் இருக்கிறது என்பதே.

சூளாமணி விகாரைக்கெனப் பள்ளிச்சந்தமாக விடப்பட்ட நிலங்கள் இடம்பெயர்ந்து போய்விட வில்லை; போகவும் முடி யாது.

ஆனால், அந்நில உரிமை எந்த நாளிலோ எக்கயவராலோ இடம் பெயர்க்கப்பட்டு எவரெவரிடமோ உள்ளன. இவ்வாறு நிலம் கவரப்படாமல் விகாரைக்கே உரிமையாக இருப்பினும்

அவ்வறம் நடைமுறைப்பட வழியில்லை. ஏனெனில், பயன் கொள்ளவேண்டிய சூளாமணி விகாரையே இல்லையே. விகாரை இல்லை என்பதுமட்டுமன்று, அப்பள்ளி இருந்த சுவட்டைக்கூட அறிய முடியவில்லை. நாகை மக்களிடம் 'சூளாமணி விகாரை' என்று சொன்னால் 'ஏதோ மணி விகாரமாக இருக்கும் போலும்' என்று புரிந்துகொள்ளும் நிலையில் அதன் நினைவு அற்றுவிட்டது. இவ்வாறு இருந்த இடமும் தெரிய இயலாமல் பெயர்ந்து போனது வியப்பிற்குரியது அன்று.

அக்கோயிலினது பெருமையை ஆனைமங்கலம் செப்பேடு பின்வருமாறு குறிக்கிறது:

> ''சத்திரிய சிகாமணி வளநாட்டில், பட்டினக் கூற்றத்தில் உள்ள, உலகத்தின் திலகம் போன்ற நாகப்பட்டினத்தில் தன் உயரத்தினால் பொன்னாலாகிய மலையையும் சிறிய தாகச் செய்து தன் அழகினில் வியப்படையச் செய்கின்ற சூளாமணி விகாரை''

கோயில், மலையைவிடப் பெரியதாய் பொன்னால் போர்க்கப் பட்டிருந்தது என்றால் நல்லவர் விட்டு வைப்பர். இந்த விட்டு வைக்காத பணியைச் சுரண்டிகள் தொடங்கினர். வைணவ சமயத்தினர் தொடர்ந்தனர். இடையிடையே கயவர்கள் வளர்த்தனர். ஆலந்து நாட்டவராய் வந்திறங்கியோர் பெருக்கினர். ஆங்கிலேயர் முடித்தனர்.

புத்தக்கோயில் அழிந்தது. அந்த அழிவோடு அதில் அமைக்கப்பட்டிருந்த கல்வெட்டு அழிவது இயற்கை. போகட்டும். அக்கல்வெட்டின் மூலமாம் செப்புப்பட்டயத்தின் கதை என்ன?

இந்த ஆனைமங்கலம் செப்பேடு என்ற பெயருடைய செப் பேடு பெரிதும் சிறிதும் என இரு வகையினது. ஒவ்வொன்றும் 21, 21 தகடுகளைக் கொண்டது. 14 அங்குல நீளமும் 5 அங்குல அகலமும் கொண்டது. இவை இரண்டும் பறிபோயின. ஏடுகள்

மட்டும் பறிபோகவில்லை. 'ஆனைமங்கலம்' செப்பேடு' என இராசராசப் பெருமன்னவால்-பின்னர் இராசேந்திரப் பெருமன்னனால் பெயரிடப்பட்ட அவ்வேடு இன்று 'இலெய்டன் செப்பேடு' என்று கல்வெட்டு அறிஞர்களால் குறிக்கப்படும் அளவில் அதன் பெயரும் பறிபோனது நம் பெருங்குறைபாட்டின் அறிகுறியே.

சென்ற நூற்றாண்டில் அஃது ஆலந்து நாட்டுத் தலை நகராம் இலெய்டன் நகரப் பொருட்காட்சி மன்றில் இருப்பதாக அறிய நேர்ந்தது. வித்தையும் விற்றுத் தின்னும் கயவர்கள் வரலாற்றுக் கலையின் வித்தையா விட்டு வைப்பர்? வித்தை விற்பது அவர்கட்கொரு வித்தை போலும்.

'அந்தோ தமிழர்களே' எனக் கவல்வதைவிட வேறு மொழியில்லை. இறுதியாகக் குறிக்கப்பட்ட சூளாமணிக் கோயில் அறக் கட்டளை யாவும் அற்றுப்போன வகைக்குச் சான்றாகிறது.

அறக்களமாம் சூளாமணிக் கோயில் இல்லை.
அறஆவணமாம் கல்வெட்டு இல்லை.

அதன் மூலமாம் செப்புப் பட்டயம் இல்லை;
அதன் இயற்பெயரும் இல்லை.
அறப்பொருளும் அதன் உரிமையாய் இல்லை.
அறத்தின் நடைமுறையும் இல்லை
எந்தச்சுவடுமே இல்லை.

# குடி தழுவிய கோல்

## உலகத்தில் உயிரும் உடலும்

மன்னவன் உயிர்; மன்னுயிர்கள் உடல். இக்கருத்தைப் புற நானூறு

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"[1]

-என்று பாடியது.

'மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலந் தன்னுள் நாமவேள் நம்பி'[2]

-என்று சிந்தாமணி பின்னணி இசைத்தது. பிற நூல்களும் தாளங் கொட்டின.

கல்வியிற்பெரிய கம்பர் இக் கருத்தை அறிந்தவர். ஆயினும் தமது இராமாவதாரத்தில் தயரதனை,

"உயிரெலாம் உறைவதோர்
உடம்பும் ஆயினான்"[3]

-என்றார்.

மன்னுயிர்களை உயிராகவும், மன்னவனை உடலாகவும் குறித்து ஒரு மாற்றுக் கருத்தை இணைத்தார் கம்பர்.

---

1. புறம்: 186 - 2
2. சீவ. சி: 2908 - 3,4
3. கம்ப. இரா: 1:5-10

இம்மாற்றம் புதுமைப் போக்கில் கூறவேண்டும் என்னும் இலக்கிய உத்தியால் நேர்ந்ததா; வேறு அடிப்படை கொண்டதா என்று நோட்டமிடுவதால் ஓர் உண்மை புலப்படும்.

வடநாட்டின் பகுதியாம் கோசல நாட்டின் பெருமை பேசிய கம்பர் தம் தமிழகத்தை உள்ளத்தில் நிறுத்தியே பேசினார்.

''காவிரி நாடன்ன கழனி நாடு''[4]

என்று குறித்தார். இதுபோன்று தமிழக நினைவை வாய்ப் பேற்படும்போது வெளிப்படுத்துதல் கம்பர்தம் இயல்பு. தாம் வாழ்ந்த நூற்றாண்டுத் தமிழக மன்னர்தம் ஆட்சிமுறை, அவர் தம் உள்ளத்தில் ஊறி நின்றது. அதனினும் குறிப்பாகச் சோழ மன்னர்தம் ஆட்சி முறை ஊன்றி நின்றது. அதனினுஞ் சிறப் பாகப் பெருமன்னன் இராசராசனது அரசியல் நெறி ஒளிவிட்டு நின்றது. அவ்வொளிக் கதிரைப் புளிச்சிட்டுக் காட்டுவது போல் மன்னனை உடலாகக் கூறினார். இக்கருத்தையும் தம் நூலில் அரசியல் படலத்தில் குறித்திருப்பது நோக்கத் தக்கது. இக் கருத்து இயைபுடையதே எனக் காணலாம்.

திருவள்ளுவருக்கு முற்பட்ட காலம் முதல் (தி.மு.முதல்) இடைக்கால எல்லை வரை உயிராகக் குறிக்கப்பட்ட மன்னவன் பின்னர் உடலாக மாறுதற்கு அரசியல் நெறியில் ஏதேனும் ஒரு திருப்புமுனை நேர்ந்திருக்க வேண்டும்.

திருவள்ளுவப் பெருந்தகை மக்கள்தம் வாழ்க்கையின் ஒரு திருப்பு முனையாக முப்பால் நூலை வழங்கினார். சோழப் பெருமன்னன் இராசராசன் அரசியல் நெறியின் திருப்பு முனை ஏற்படுத்தியவன்.

### இராசராசன் ஆட்சி

இராசராசன் திருவள்ளுவர் ஆண்டு 1016-கி.பி.985இல் அரசு கட்டிலேறினான், 29 ஆண்டுகள் ஆண்டான். ஏறத்தாழ 16 ஆண்டுகள் போர்ச் சூழலேயிருந்தது. படைவன்மையாலும்,

4. கம்ப. இரா: குகப்படலம் 1

போராற்றலாலும், தேர்ந்த அரசியல் அறிவாலும் தன் மைந்தனது வீரத் திறத்தாலும் 8 நாடுகளை வென்று அடிப்படுத்தினான். சோழப் பேரரசை நிலை நாட்டினான். இடையிடையே ஆட்சி முறையிலும் கவனம் கொண்டான். நலமான அரசியல் நெறியின் களம், வளமான பொருளியலன்றோ! திருவள்ளுவப் பெருந்தகை அரசனுக்குரிய பொருள் வருவாயை,

> ''உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
> தெறுபொருளும் வேந்தன் பொருள்''[5]

என்று குறித்தார்.

இராசராசன் பெரும் வருவாயாம் உறுபொருளை ஈட்டுதற்குச் செம்மையும் பரவலுமான ஏற்பாடு செய்ய முனைந்தான். அதற்கு நாட்டை அளந்து பகுத்தமைப்பது இன்றியமையாததாயிற்று.

நாட்டு அளவையும் பகுப்பும்

தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட நாட்டை 9 மாநிலங்களாகப் பிரித்தமைத்தான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு மண்டலமாகக் குறிக்கப்பட்டது. அவனது இயற்பெயராலும், சிறப்புப் பெயர்களாலும் அவ்வம் மண்டலங்கள் பெயர் பெற்றன.

ஒவ்வொரு மண்டலத்தையும் புதுத்திட்டத்தின்படி, ஆட்சிக்கு எளிதாகப் பகுத்தமைக்க எண்ணி அதற்கு நாடு முழுவதையும் அளக்கத் திட்டமிட்டான். அதற்கு உரிய அதிகாரியாகச் சேனாபதி குரவன் இராசராச மாராயனை அமைத்து நில அளவையை நிறைவேற்றினான். இப்பணி முடிந்ததும் அவ்வதிகாரி உலகளந்த இராசராச மாராயன் எனச் சிறப்பிக்கப்பட்டான். அளந்த கோல் 'உலகளந்த கோல்' எனப்பட்டது. இக்கோல் 16 சாண் அளவுடையது. இந்நில அளவுப்பணித்திட்டம் இராசராசனின் அரசியல் நெறித் திருப்பு முனையின் கால்கோள் எனலாம்.

---

5. குறள் : 756

இதற்குமுன், மண்டலத்தின் உட்பிரிவாக நாடு என்பதே இருந்தது. அஃதாவது, தற்போதுள்ள மாநிலம், கூற்றம் (தாலுக்கா) என்பன போன்ற அமைப்பில் இருந்தது. மாவட்டம் என்பது போன்ற ஓர் அமைப்பில்லை. இது குறை என உணர்ந்து வளநாடு (மாவட்டம்) என்னும் பகுப்பை ஏற்படுத்தினான். வள நாட்டின் உட்பிரிவாக நாடு அல்லது கூற்றம் அல்லது கோட்டம் என அவ்வவ்வற்றினது பரப்பின் பெருமை சிறுமைகளுக்கு ஏற்பப் பெயர் பெற்றது. அன்று அவற்றுள் அமைந்த பெரிய நகரம் 'தனியூர்' எனப்பட்டது. சிற்றூர் 'ஊர்' எனப்பட்டது.

இப்புத்தமைப்புப் பணி இராசராசனின் அரசியல்நெறித் திருப்பு முனையின் அடித்தளம் எனலாம். இவ்வமைப்பை அடியொற்றியே இன்றைய நாட்டுப் பகுப்பமைப்பும் உள்ளமை நோக்கத்தக்கது.

இவ்வகையில் நாட்டுப் பகுப்பு, மண்டலம்-வளநாடு-நா(ர் கூற்றம், கோட்டம்) தனியூர் (ஊர்) என அமைந்தது. ஓர் ஊரைக் குறிக்கவேண்டுமாயின் மண்டலந் தொடங்கி இராசராச சோழ மண்டலத்து நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூர் எனக் குறிக்கப்பட்டது. ஆவணம், கல்வெட்டு, பதிவுகளில் இவ்வாறே குறிக்கப்படல் வேண்டும்.

### ஆட்சியின் அடித்தளம்

நில அளவு, நாட்டுப்பிரிவு அமைப்பின்மேல் ஆட்சிமுறை வகுத்தமைக்கப்பட்டது. இராசராச சோழனின் அரசியல் அமைப்பை அடிமட்ட அமைப்பிலிருந்து நோக்குவதே முறையாகும்.

நிலவளத்தால் நலங்கனிந்த சோழ நாட்டில் சிற்றூர்கள் பல்கிப் பரந்து கிடந்தன. ஒவ்வொரு மண்டலத்திலும் பெரும் பகுதி சிற்றூர்ப் பரப்புக்களே. எனவே, சிற்றூர் ஆட்சி அமைப்பே பெரும் பகுதி—மிகப் பெரும்பகுதி நாட்டாட்சி ஆகிவிடும். ஊராட்சியின் செம்மையே நாட்டாட்சியின் நன்மையாகும். இராசராசனின் ஆட்சி அரசியல் நெறி இவ்வாறே திகழ்ந்தது. இந்த ஊர் ஆட்சியானது நூற்றுக்கு நூறு மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கட்சார்பாளர்கள் பொறுப்பேற்று நடத்திய மக்கள் ஆட்சியே.

இராசராசனின் ஆட்சிக்கு முன்னரும் ஊராட்சி இருந்த தெனினும் அதனை நிலைக்கேற்ப மாற்றியும் கூட்டியும் போக்கியும் செம்மையாக்கி முழு மக்களாட்சி ஆக்கிய பெருமை இராசராசனையே சாரும்.

பின் குறிக்கப்படும் ஊராட்சி முறைகளைக் காணுங்கால் தற்கால ஆட்சி அமைப்புகளையும் ஒத்திட்டுக் கண்டுசெல்லின் இன்றைய மக்களாட்சி அமைப்புக்கு இராசராசனின் ஊராட்சி அமைப்பு எத்துணை அடிப்படை ஆனது என்பது விளங்கும். இராசராசன் ஆட்சி அரசியலில் ஏற்படுத்திய திருப்பு முனையின் திறனும் புலப்படும்.

**ஊராட்சி**

முன் குறிக்கப்பட்ட தனியூராயினும் ஊராயினும் அதனதன் ஆளுகைப் பொறுப்பை அவ்வப்பகுதி மக்களே மேற்கொண்டனர். அப்பொறுப்பு 'ஊர்' என்னும் பெயரில் அமைந்த ஆளுகைப் பேரவையைச் சார்ந்தது. இப்பேரவையில் பருவமுற்ற அவ்வூரார் யாவரும் உறுப்பினராவார். இவர்களினின்றும் ஆளுகைக் குழுவினர் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். தேர்தல் நிகழ்ச்சி பொது மன்றில் நிகழும். அரசர் ஆணை பெற்ற அரசு அலுவலர் தேர்தல் மேற்பார்வை அதிகாரியாக அமைவார் (Election Commissioner). தேர்தல் நோக்கில் ஊர் குடும்புகளாகப் (wards) பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பிலிருந்தும் ஆளுகைக் குழுவிற்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்வுக் குரியோரது தகுதியும் தகுதியின்மையும் குறிக்கப்பட்டிருந்தன.

அவ்வவர் குடும்புப் பகுதியில் வாழ்தல், 35 அகவை நிறைவு, கால்வேலி நிலமுடைமை, வீட்டு மனையுடைமை, கல்வியறிவுடைமை, நாணயம் நேர்மை குன்றாமை,

முன்றூன்று ஆண்டுகள் குழுவில் அமையாமை ஆகியன தகுதிகளாம். தற்காலத்து 21 அகவை நிரம்புதல் ஒன்றே தகுதியாக உள்ளது. பணிக்காலம் 3 ஆண்டுகள் என்பது இன்று அரசுப் பணியாளர் 3 ஆண்டுக்கொரு முறை மாற்றல் பெறவேண்டும் என்னும் விதியை நினைவுப்படுத்துகிறது.

தீவினைக் குற்றம் புரிந்தோர், சிற்றினஞ் சார்ந்தோர், வீண் வம்பினர், கையூட்டுப் பெற்றோர், குற்றத் தண்டனையுற்றோர் முதலியோர் தற்காலத்தும் சில கடுங் குற்றங்கள் செய்தோர் தகுதியற்றவராவர்.

தேர்தல், மன்றில் அவ்வூர்ப் பெரியவர் நம்பியாய் (Presiding Officer) அமைந்தார். தேர்தல் 'குடவோலை' முறையில் நிகழ்ந்தது. ஒவ்வொரு குடும்பிலும் தகுதிவாய்ந்தோர் பெயர்களைத் தொகுத்துக் கட்டாக்கினர். எக்குடும்பினது என்பதைக் கட்டில் குறித்தனர். இவ்வாறே பல குடும்பின் கட்டுக்களை மன்றின் மையத்தில் அமைக்கப் பட்டிருந்த ஒரு குடத்தினில் இட்டனர். பொழுது வேறுபாடறியாத சிறுவன் ஒருவனை ஒரு குடும்புக் கட்டை எடுக்கச்செய்து அதனை அவிழ்த்து மற்றொரு குடத்தில் இட்டனர். சிறுவனைக்கொண்டு அதனின்றும் ஓர் ஓலையை எடுக்கச்செய்து அதிலுள்ள பெயரை நம்பி படிப்பார். பின் கரணத்தான் என்ற ஊர்க்கணக்கன் அறிவிப்பான். தேர்தல் அதிகாரி மேற்பார்வையிடுவார். தற்போது எண்ணிக்கை தேர்வுக்குக் கொள்ளப்படுகிறது.

இவ்வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் அமைந்த குழுவே ஆளுங்குழுவாய் அமையும். இக்குழு 'ஆளுங்கணம்' (சட்டப் பேரவை போல) எனப்பட்டது. சில்லிடங்களில் தகுதி கருதி 'மீயாளுங்கணம்' (மேலவை போல) எனப்பட்டது. குழுவினர் ஆளுங்கணத்தார் எனப்பட்டனர்.

இவ்வாளுங்கணம் ஒவ்வொரு நாளின் ஊராட்சி அலுவல் களையும் கவனித்தது. ஊராட்சியின் எல்லாவகைப் பணிகளும் இக்குழுவின் பொறுப்பினவே. வரியியற்றல், வரியீட்டல், தொகுத்தல், பொதுப் பராமரிப்பு, அரசர்க்குரிய இறைப்பகுதி யைச் செலுத்தல், வழக்குகளை உசாவி நிறைவேற்றல், அறங் காவல் பணியாற்றல், ஒப்புரவுப் பொதுப்பணி ஆற்றல் முதலிய வற்றை மேற்கொள்வது. நிலப்பதிவேடு, வரிப்பதிவேடு, ஆவணம் ஆகியவற்றின் பொறுப்பேற்றுக் கண்காணித்தது.

இவ்வாறு பல முனைகளாக அமைந்த பணிகளை ஆற்ற ஆளுங்கணத்தார் பல துறைக் குழுவினராகப் (துறை) பகுத்தமைக்கப்பட்டனர். ஒவ்வொரு துறையும் 'வாரியும்' எனப்பட்டது. வாரி என்பதற்கு வருவாய் என்பது பொருள். வருவாய்ப் பொறுப்பிலுள்ளது 'ஆளுங்குழு வாரியம்' எனப் பட்டது. சில துறைகட்கு இச்சொல் இடுகுறியாய் வழங்கப் பட்டது.

வாரியங்கள் எனப் பல துறைகளுக்கு ஆளுங்கணம் பொறுப் பேற்று ஆளுகை புரிந்தது. ஓர் ஆளுங்கணத்தாரின் பதவிக் காலம் ஓராண்டு. அவர்க்கு எவ்வகை ஊதியமும் இல்லை.

ஆளுங்கணத்தின் செயலாளன் போல் ஆளுங்கணத்தின் பணிமகனாக-கணக்கனாக காரணன் - 'கரணத்தான்' - என்ப வனைக் கணத்தாரே அமைத்தனர்.

கரணத்தான் ஆளும் கணத்தாரிடும் பணிகளைச் செய் தான். முடிவுகளை நிறைவேற்றினான், கணக்குகளை எழுதிப் பேணினான். பதிவுகளை உருவாக்கி ஆவணக்களரியில் (Recodr Room) பேணினான். ஆண்டிற்கொருமுறை கணக்குகளை

ஒப்படைக்க வேண்டும். அவனுக்கு ஆண்டு ஊதியம் ஏழு கழஞ்சு பொன், இரண்டு புத்தாடை, நாளூதியம் நாழிநெல்.

இவ்வாளுங் கணத்தோடு பார்ப்பனர் வாழும் பகுதியில் அவர்க்கென 'அவை' என ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. வாணிகர், தொழிலர்க்கென 'நகர்' எனும் பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுக்கள் 'ஊர்' எனப்பட்ட பேரவைக் குழுவின் ஆளுங்கணத்தின் துணைக் குழுக்களாகப் பணியாற்றின.

இவ்வகையில் ஊராட்சி முறையில் செம்மையான மக்களாட்சி நெறியைப் பக்குவமாக அமைத்து அரசியலில் ஒரு பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தினான் இராசராசப் பெருமன்னன். இத்திருப்பு முனை அரசியல் நெறியில் அவன் எழுப்பிய புகழ்த்தூண் எனலாம்.

மற்றொரு குறிப்பிடத்தக்க குறிப்பு உண்டு. ஆளுங்கணத்தார் கூடுதற்குத் தனி மாளிகை கட்டப்பட்டது. இயலாத ஊர்களில் கோயில் மண்டபங்களிலும் பொது மன்றங்களாம் ஆலமரத்தடி இடங்களிலும் கூடினர். அவ்வப்போது அரசன் இராசராசன் ஆளுங்கணக் கூட்டங்களில் வந்தமைந்து நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டான். எவ்வகையிலும் தன் தலையீடு இல்லாமல் பார்வையிடுவதாலேயே ஆளுகைச் செம்மையை ஏற்படுத்தியமை "அரசியல் திருப்பு முனையின் வெற்றிக் கொடி" எனலாம்.

## ஆட்சியின் மேன்மட்டம்

ஊராட்சி அமைப்புக்குமேல் அமைந்த ஆட்சி அலுவல் அமைப்புகளை மூன்றாகக் குறிக்கலாம். அவை ஆட்சி அலுவற் செயலக அமைப்பு, ஆட்சி அலுவல் பெருமக்கள் அமைப்பு, அமைச்சர் குழு எனப் படிப்படியாக உயர்ந்து அமைந்திருந்தன

## அலுவற் செயலகம் (COLECTORATE)

அரசியல் பணிகளை நடைமுறைப் படுத்தல், காரியமாற்றல் முதலியவற்றைப் புரிய 'கருமிகள்' என்பாரும், ஏவற்பணிகளைப் புரியும் பணிமக்களும் அலுவற் செயலக அமைப்பினர். கருமிகளில் பெருந்தரம் (U.D.C.) சிறுதரம் (L.D.C.) எனும் பிரிவினர் இருந்தனர். இஃது இக்காலத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் போன்றது.

## அலுவற் பெருமக்கள்

மேற்காட்டப்பட்டதற்கு மேல் நாட்டதிகாரி (Chiel Secretary) கண்காணி (Superintendents) வரியிலார், வரிக்கூறு செய்வார், படைத்தலைவர், விடையதிகாரி, பட்டோலைப் பெருமாள், திருவாய்க்கேள்வி, திருமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகம் எனும் தலைமை அலுவர்கள் இருந்தனர். இப்பதவிகளிற் பல இக்காலத்துச் சிலசில பணிமாற்றங்களுடன் உள்ளன. இவ்வமைப்பை இன்று வழங்கும் தலைமைச் செயலகம் (Secretriate) என்று குறிக்கலாம்.

## அமைச்சர் குழு

இந்த அமைப்புக்குமேல் தலையான அமைப்பாக அமைச்சர் குழு இருந்தது. அவர்கள் உடன்கூட்டத்து அதிகாரிகள் எனப் பட்டனர். இவர்கள் அரசருடன் நேரடித் தொடர்பு கொண்டு பணியாற்றியோர். அமைச்சர், தலைமைப் படைத்தலைவர், சான்றோர் முதலியவர் இக்குழுவிலமைந்து அரசனுழை இருந்து சூழ்ச்சிகள் கூறியும் அரசர் ஆணைகளைப் பரவலாக்கியும் ஆளுகையை நிறைவாக்கினர்.

## மன்னன் உடலானான்

நாட்டை ஆண்டவன் இராசராசனே ஆயினும் பரவலான ஆட்சித் தலைக்கயிற்றினைச் சுண்டி ஆட்சியைச் செலுத்தும்

உரிமை மக்கள்பால் அதிலும் சிற்றூர் மக்கள்பால் இருந்தது. இப்படியொரு திருப்பு முனையால் இராசராசன் காலத்தில்தான் ஆட்சிநெறி செம்மையுற்றது. இத்திருப்புமுனைதான் கம்பர் உள்ளத்திலே நின்று ''உயிரெல்லாம் உறைவதோர் உடம்பு''என எழுத வைத்தது. உயிராயிருந்த மன்னனை உடம்பு ஆக்கியது.

இராசராசன் அரசியல் நெறியில் வெளிநாட்டுத் தூதுவர் சந்து செய்வோர், அறங்காவலை நிலைநாட்டுவோர் அமைந்திருந்தனர். மேலும் குறிக்கத்தக்க அமைப்புக்களும், செம்மையாக இருந்தன.

எல்லாவகை நடைமுறையிலும் மக்களது தொடர்பு இடம் பெற்றமை இராசராசன் அரசியலில் வியந்து குறிக்கத் தக்கது. குடிமக்களது எண்ணந் தழுவியே அவனது முடியாட்சி இருந்தது. அவன்தான் கோலோச்சினான். தன் அதிகாரத் தழுவல் கொண்டன்று; குடிமக்களைத் தழுவியே கோலோச்சினான். அதனால் மாநிலமெல்லாம் அவனடி தழுவி நின்றது. வேற்று நிலமும் அடி தழுவி நின்றது. திருவள்ளுவப் பெருந்தகையின் பொய்யாமொழி பொய்க்காதன்றோ!

> ''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
> அடிதழீஇ நிற்கும் உலகு[6]''


எனுங்குறட்கருத்து எழுத்திற் கெழுத்து இராசராசன் அரசியலில் பொருந்தி வருகிறதன்றோ! இப்பெருமையால்தான் அடிதழீஇ நின்ற வேற்று மாநிலத்தும்,

> ''சதயநாள்விழா உதியர் மண்டலம் (சேரநாடு)
> தன்னில்வைத்தவன்[7]''

-என்று கலிங்கத்துப்பரணி ஆசிரியரால் குறிக்கப்பட்டான்,

6. குறள்:544

7. க. பரணி: இராச: 24



அச்சுத் தொழிலாளி, தமிழாசிரியர், கவிஞர், நூலாசிரியர், ஆய்வாளர், பதிப்பு வல்லுநர், தமிழ்த் தொண்டினர் குமுகாயப் பணியினர், சொற்பொழிவாளர், நல் வாழ்வினர்—எனப் பத்துத் துறைகளில் பத்தரைமாற்றானவர் இவர்.

- நாகையில் மறைமலையடிகளார் சிலை, இளஞ்சேரன் நகர். பூம்புகார்ச் சிலப்பதிகாரக் கலைக்கூட எழுநிலை மாடம் தமிழ்ப் பல்கலைக் கழகப் பையடக்கத் திருக்குறள் பதிப்பு இலங்கையில் அனைத்திலங்கைக் கண்ணகி மன்றம் ஆகியவற்றைத் தம் திறன் சின்னங்களாகக் கண்டவர் இவர்

- தமிழ் நாட்டரசால் 'நல்லாசிரியர்', பாவேந்தர் விருதுகள். பாரி விழாவில் டாக்டர் கலைஞரால் 'கவிஞர்கோ'. இலங்கை யாழ்ப்பகுதி மக்களால் 'சிலம்புச் சேரனார்'—எனப் பட்டங்கள் வழங்கிப் போற்றப்பெற்றவர் இவர்.

- இலக்கியத் திறனாய்வு, கவிதை, கலை, உரை, வாழ்வியல், இலக்கணம், பாடம்—எனப் பதினைந்து நூல்களை ஆக்கியவர் இவர்.

- இத்தகுதிகளால் இவர் 'எவர்—எவ்வாழ்வினர்' என அறியத் தக்கவரே.

- தி.ஆ. 1954-மார்கழி-21-இற்கு நேரான 4-1-1923 இவரைத் தந்த நாள். அன்றைய இராமநாதபுரம் மாவட்டக் கல்லல் வழங்கிய ஊர். ஆத்திசூடி அகல உரைகாரர் ஓரத்தூர் கோ. வைத்தியலிங்கனார் — திருமதி மீனாட்சியம்மாள் இவரை ஈன்ற சிறப்பினர். கோவை. இளஞ்சேரன் என்னும் வழங்கு பெயருடன் கோ. வை. மெய்கண்ட சிவன் என்னும் இயற்பெயரினர். ஐயாற்றுக் கல்லூரியின் தமிழ்ப் புலவர் பதிப்பு. புதுக்கோட்டையிலும் நாகையிலுமாக 33 ஆண்டுகள் தலைமைத் தமிழாசிரியர் பணியாற்றி ஓய்வுற்று தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத்துறைத் துணை இயக்குநராக 5 ஆண்டுகள் பொறுப்பாற்றி ஓய்வுற்றவர்.

- சிறந்த தமிழ்ப் பண்பும், மொழி அழுத்தமும் நிரம்பிய கவிஞர்கோ கோவை. இளஞ்சேரனார் பணியும் புகழும் வாழ்வும் நீடு வளர்ந்து பொலிக.

மு. சதாசிவம்,
பன்மொழிப் புலவர்